

தமிழ்ப் புத்தாண்டுச்
சிறப்பிதழ்
கல்கி
KALKI 14.4.96 ரூ. 3.00
அதிக
பக்கங்கள்!
நான் வோட்டுப்
போடுவதால்
நாட்டு நிலை
மாறுமா?



தமிழ்ப் புத்தாண்டில்...

சிறகடித்துப் பறக்கும்
சிங்காரக் கனவுகள்
நனவே ஆகட்டும்
நனவே ஆகட்டும்!

வாழ்த்துக்கள்!

एअर-इंडिया

AIR-INDIA

HTA.7425.95



பகல் முழுக்க சுற்றுப்பயணம். முடித்து விட்டு, இரவு ஒன்பதுக்கு மேல்தான் காஞ்சிபுரம் வந்து சேர்ந்து இருந்தார் விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள். அந்த நேரத்திலும் அவர் தரிசனத்துக்காக எக்கச்சக்க மக்கள் காத்திருந்தார்கள். ஆளுக்கொரு குறை; அல்லது கவலை; அல்லது கோரிக்கை. ஆசி வேண்டி, காத்திருத்தல்கள். நாளெல்லாம் சுற்றிவிட்டு வந்தி-



சிறப்புப் பேட்டி :

விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

"கட்டுப்பாடுகளே சுதந்தரம்!"

ருந்தாலும் அவர் முகத்தில் ஒரு அலுப்பு? களைப்பு? பூத்த மலர் மாதிரித்தான் புன்னகையுடன் இருந்தார்.

இது அல்ல ஆச்சர்யம். புத்தாண்டு சிறப்பிதழுக்காகக் கல்கிக்கு பேட்டி கேட்ட போது நேரம் சுமார் பத்தரை. நமக்குப் பின்னால் நாற்பது பேர் அவரைச் சந்திக்கக் காத்து இருக்க, "கார்த்தால வெச்சுக்கலாமே? அஞ்சு மணிக்கு வந்துடுங்கோ" என்றார்.

அத்தனை பேரையும் கவனித்து அனுப்பி விட்டு, அவர் படுக்கப் போக எப்படியும் மணி பன்னிரண்டு ஆகி இருக்கும். நான் எல்லாம் பயணம் செய்த களைப்பு ஒருபுறம் இருக்க, மறுநாள் வேறு திருப்பதி செல்ல இருப்பதாகச் சொன்னார்.

அதிகாலை ஐந்து மணி... அவர் அறைக்குச் சென்ற போது உதித்த சூரியன் மாதிரி காத்து இருந்தார்!

அப்போதும் கூட்டம்தான். சுற்றுமுற்றும் பார்த்தவர், ''இங்கே பேச முடியும்னு தோணலை. நாம் வேறு இடத்துக்குப் போயிடலாம்!'' என்றபடி, மடத்திலிருந்து சற்றுத் தொலைவிலிருந்த ஓர் அன்னசாலைப் பக்கம் நம்மை வரச் சொல்லிவிட்டு, அவரும் புறப்படுகிறார். வழியில் குறுக்கிடும் பள்ளிப் பையன்களைக் கூப்பிட்டு, "எப்போ பரீட்சை?" என்று விசாரிப்பு. "நன்னா படிச்சிருக்கியோல்லியோ?" என்று கேள்வி. "அப்புறம் பார்க்கலாம்" என்று அவசர விடைபெறல்.

அன்னசாலையின் விசால ஹாலில் ஒரு மூலையில் உட்கார்ந்து, பேசத் தொடங்குகிறார். அசாத்திய நிதானம். நாலு விநாடி யோசித்து, ஒரு விநாடி பேசுகிறார். முகவாயில் கை ஊன்றி, கூர்மையாகக் கவனிக்கிறார். பேச்சில் தயக்கம் ஏதும் இல்லை. படு தீர்மானம்.

சுவாமிகள், இன்றைய இளைய தலைமுறை பற்றி நிறையவே கவலை வைத்திருக்கிறார். அடிப்படையில் கல்வித் திட்டம் மாறினால் ஒழிய, சமூகம் செழிக்க வேறு வழி இல்லை என்கிறார்.

"திருக்குறள் மாதிரி ஒரு புஸ்தகம் உலகத்துல கிடையாது. ஆனா, ஸ்கூல்லே எத்தனை குறள் கத்துத் தரா?"

வாழ்க்கையோடு ஒட்டிய கல்வி பற்றி யாரும் யோசிப்பதாகத் தெரியவில்லையே என்று வெகு வருத்தப்படுகிறார்.

"அதிகமா எந்தெந்தத் தொழில்கள் வாழ்க்கைக்கு உபயோகமாறது? அவற்றைத் தேர்ந்தெடுத்து, அதில் அதிக வேலை வாய்ப்புக்கான வழியை அரசாங்கமே பண்ணணும், முதலில். அந்தத் தொழில்களையே பள்ளிக்கூட லெவல்லேருந்து சொல்லித் தரணும். இதைப் படிச்சா உத்தியோகம் நிச்சயம்னு தெரிஞ்சப்புறம், மனசு வேற திசையில் போகாது. ஏன்னா உத்தியோகம்தானே இப்போ அல்டிமேட் லட்சியம்?"

நிறைய யோசிக்கிறார். இளைஞர்களிடம் கல்வி நாட்டம் குறைந்து, கேளிக்கை அதிகமாகி இருப்பதற்குப் பெற்றோர்களும் பொறுப்பு ஏற்க வேண்டும் என்று நினைக்கிறார்.

"அவா வேலைக்குப் போறவாளா இருந்தாலும், பிள்ளைகளுக்காகக் கொஞ்சம் நேரம் ஒதுக்கியே ஆகணும். அப்பா, அம்மா நம்மை கவனிக்கறாங்கற உணர்வே, சரியான வழியில் பிள்ளைகளைக் கொண்டு போயிடும். பள்ளிக்கூடங்களில் அதிகம் சொல்லித்தராத ஆன்மிகத்தைப் பெற்றோர்தான் முனைந்து சொல்லித் தரணும்."

இன்றைய தேச சீரழிவுகளுக்கெல்லாம் ஆன்மிக நாட்டம் குறைவானதே காரணம் என்று தீர்மானமாக நம்புகிறார்.

ஆனால், பிரேமானந்தா போன்ற ஆன்மிகப் போலிகளின் அதிகரிப்பும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாமே என்றால், ''ஆன்மிகத்தில் ஏது போலி?'' என்று உடனே எதிர்க் கேள்வி கேட்கிறார். கூடவே சின்னதாக ஒரு புன்னகை.

"சில போலி மனிதர்கள் ஆன்மிகப் போர்வையில் உலவினா, அவாளைச் சுலபமா கண்டுபிடிச்சுடலாம்! அடிப்படையிலே நமக்கு என்ன வேணும்கற தீர்மானம் வேணும் முதலில். அது எங்கே கிடைக்கும்னு வெளியே தேடாம, நம்மிடமிருந்தே தேடி எடுக்கணும். நம் சிந்தனை, நம் லட்சியம் ஒழுங்கானதா இருந்துட்டால், நமக்கு வந்து அமையறதும்

"கிரைண்டர்தான் வாங்கிக் கொடுத்துட்டீங்களே, அப்புறம் ஏன் உங்களை உங்க மனைவி திட்டறாங்க?"

"அதோட சத்தம் மெதுவா இருக்குதாம். பக்கத்து வீட்டுக்காரிக்குக் கேக்கற அளவுக்கு சத்தம் போடற கிரைண்டர் வாங்கித் தந்திருக்கணுமாம்!"

- பா. ஜெயக்குமார்



ஒழுங்காவே இருந்துடும்!"

பூடகமாகச் சொல்லி விட்டோமோ என்று நினைத்து, 'புரியறதோ?' என்று சட்டென்று கேட்டுக் கொள்கிறார். தலை ஆட்டியதும் அடுத்த விஷயத்துக்குப் போகிறார்.

சுவாமிக்கு மீடியாக்களின் தாக்கம் நன்றாகவே தெரிந்திருக்கிறது. தனியார் தொலைக் காட்சிகளின் விதவிதமான சினிமா நிகழ்ச்சிகள் பற்றி ஆச்சர்யப்படுகிறார். தூர்தர்ஷனும் சினிமாவையே சரணாகதி அடைந்திருப்பதை வருத்தமுடன் குறிப்பிடுகிறார், கீழ்க் குரலில்.

"எனக்கு இதுதான் புரியலை. தனியார் டீ.விக்காரா என்ன வேணுமானாலும் பண்ணிண்டு போகட்டும். அதை யாரும் கேட்க முடியாது. ஆனால், அரசாங்கத்துக்கு மக்கள் மேல் அக்கறை வேணுமில்லையா? தூர்தர்ஷனுக்கு எதுக்கு சினிமா சப்போர்ட்? என்டர்டெயின் பண்ண எத்தனையோ பேர் இருக்கா. 'எஜுகேட்' பண்ண, கவர்மென்ட்டாவது முன்வர வேணாமோ? யூ.ஜி.சி. ஃப்ரோக்ராம்னு போடறா. கல்வி நிகழ்ச்சிகள்தான். ரொம்ப நன்னா இருக்கு. ஆனா ரொம்பக் குறைவான நேரம்தான் போடறா. அரசாங்க டீ.விக்கு வருமானம் முக்யமான விஷயமா இருக்கக் கூடாது. முழுக்க முழுக்க அது எஜுகேட்டிவா இருக்கணும். நஷ்டம் வரட்டுமே! என்ன தப்பு? நல்ல காரியம் பண்ணற திருப்திக்கு முன்னாடி அது பெரிசாயிடுமோ? திருப்தி கூட வேண்டாம். உபயோகமான விஷயங்களை மட்டுமே தரதுங்கறது அரசாங்க டீ.வியோட கடமை இல்லையோ?" என்று கேட்கிறார்.

ஆனால், கல்வி நிகழ்ச்சிகளை விடுங்கள்; இப்போது தூர்தர்ஷனையே யார் பார்க்கிறார்கள் என்று கேட்டால், புன்னகை பூக்கிறார். வினாடி மௌனத்துக்குப் பின், "நல்ல விஷயங்கள் வேணும்னு நினைக்கற ஒரு சிலருக்கு, அதைத் தர ஒரு சாதனம் இல்லாம போயிடக் கூடாது இல்லியோ?"

- நறுக்கென்று பதில் வருகிறது.

நாட்டின் அரசியல் நிகழ்வுகளை, சுவாமிகள் மிக உன்னிப்பாக கவனித்து வருவதை அவருடன் பேசிக் கொண்டிருந்த போது புரிந்துகொள்ள முடிந்தது.

"எதுவும் சொல்லும்படியா இல்லை. தனி மனுஷாளைக் குத்தம் சொல்லிண்டு இருக்கறதைவிட, சமூகத்தோட அடிமட்டத்திலிருந்து சரி பண்ண முயற்சி பண்ணணும்... வோட்டுப் போட, பதினெட்டு வயசுன்னு எந்தக் கணக்கு பிரகாரம் வெச்சிருக்கான்னு தெரியலை. என்னைக் கேட்டால், படிப்பெல்லாம் முடியற வரைக்கும் யாரும் அரசியல் பக்கம் கவனம் திருப்பாம இருக்கறது ரொம்ப நல்லதுன்னு சொல்லுவேன்."



"நாடு எவ்வளவு தூரத்துக்கு முன்னேறிடிச்சு பாருங்க...!"

"எதைச் சொல்றீங்க நீங்க...?"

"மேட்ரிமோனியல் பகுதியில, 3000 சம்பளமும் 5000 கிம்பளமும் வரக்கூடிய 28 வயது பையனுக்கு நல்ல வரன் தேவைன்னு விளம்பரமே வந்திருக்கு பாருங்க!"

- சீர்காழி வி. ரேவதி

பேச்சின் இடையே சட்டென்று கண்களை மூடிக் கொள்கிறார் - ஒரு வினாடி...... மறுபடி தொடர்கிறார்.

"ஒவ்வொருத்தரும் தமக்குன்னு வாழ்க்கையில சில தர்மங்களைக் கடைப்பிடிக்கறதுன்னு வெச்சுக்கணும். பெரிசா ஒண்ணும் வேண்டாம். சின்னச் சின்னதா. பத்துகாசு தினம் தர்மம் பண்றதுன்னு; பொய் சொல்றதில்லைன்னு; பூஜை விடாம பண்றதுன்னு... இப்படி. இது கட்டுப்பாட்டை வளர்க்கும். சுதந்தரம் என்பது கட்டற்றுத் திரியறது இல்லை. கட்டுப்பாடுகள் தான் சுதந்தரம்."

முக்கால் மணி நேரம் பேசி இருப்பார். உடன் இருந்த சில ஸ்ரீமடத்து காரியஸ்தர்கள் நிலை கொள்ளாமல் தவிக்க, சுவாமிகள் திருப்பதிக்குக் கிளம்ப நேரமாகி விட்டதை உணர்ந்து, மேலும் ஓரிரு நிமிடங்களில் முடித்துக் கொண்டோம்.

ஓயாத சுற்றுப்பயணம், சந்திக்க வருபவர்களைக் கவனித்தல், நித்ய பூஜை நியமங்கள்... தனிப்பட்ட விருப்பங்கள் ஏதும்...?

திடீரென்று உற்சாகமாகிவிடுகிறார். சாஸ்திரிய சங்கீதத்தில் தமக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு என்று வேகமாகச் சொல்கிறார்.

"நல்ல சங்கீதம் கேட்க ரொம்பப் பிடிக்கும். ஆனால் நேரம் தான் கிடைக்கிறதில்லை. அது பெரிய விஷயமில்லை. அவரவருக்கு அவரவர் சுவதர்மம்தானே முக்கியம்?"

முன்பே சொன்னதுதான். பேச்சில் படு தீர்மானம்!

— ஆழ்வார்க்கடியான்

வண்ணப்படம் : யோகா

பால்ச்சாமி கொதிக்கிற பாலாக மனசுக்குள் பொங்கிப் போயிருந்தான். நுரை நுரையாக பொங்கித் திமிறிய மகிழ்ச்சிப் பிரவாகம். வெள்ளை வேட்டியும் வெள்ளைச் சட்டையும் பளிச்சென்றிருந்தது. ரத்தம் கொப்பளிக்கிற மாதிரியான சிவப்புத் துண்டு இடது தோளில் கிடந்தது.

ஆள் பார்க்க புதுமாப்பிள்ளை போலிருந்தான். உள்ளுக்குள் மாப்பிள்ளை முறுக்கான மகிழ்ச்சிக்கொந்தளிப்பு. இதுவரை காணாத குதூகல மலர்ச்சி. மனசின் மகிழ்ச்சி முகத்தின் வெளிச்சமாக...

சங்க அலுவலகத்துக்கு முன் தோழர்கள் கடப்பாறையும் கையுமாகப் பரபரத்தனர். ஒரு தோழர் குழிதோண்ட, ஒருவர் மண்டியிட்டு மண்ணையள்ள... மற்றொருவர் கம்புகள் ஊன்ற, கொடியைக் கட்ட, தோரணம் கட்ட என்று வேலைகள் இறக்கைகட்டிப் பறந்தன.




மேலாண்மை பொன்னுச்சாமி

ஆகாயச் சிறகுகள்

மைக்செட் பெருமுழக்கமாக அந்தச் சந்திப்புச் சாலையை மூழ்கடித்துக் கொண்டிருந்தது. ரெண்டு தோழர்கள் நீளநீளப் பெஞ்சுகளாக நாலு தூக்கிக் கொண்டு வந்து ஒன்று போல போட்டனர். நொடியில் மேடை ரெடி! அதன் மேல் நாலைந்து சேர்கள். ஒரு மேஜை. அதன்மேல் ஒரு சிவப்புத் துணிவிரிப்பு. மேடையின் பின் புலமாக ஒரு பெரிய சிவப்புப் பேனர். டியூப்லைட் வெளிச்சத்தில் ரத்த நிறம் செம்பொன்னாகப் பளிரிட்டது.

பால்ச்சாமிக்கு இன்று பாராட்டு விழா. மாநில அளவிலான மறியல் போராட்டத்தில் பங்கெடுத்து, சிறை சென்று, பதினொன்கு நாள் சிறைக் கைதியாக இருந்து வந்தவன். அவனுக்கு இங்கே இந்தத் தொழிற் சங்கம் பாராட்டுவிழா நடத்திக் கௌரவிக்க இருக்கிறது.





அதற்கான தடபுடல் புறப்பாடுகள். பால்ச்சாமியைப் போலவே உற்சாகப் பெருக்கில் தத்தளித்தனர் தோழர்கள். கல்யாண வீடு போல கேலியும் கிண்டலுமாய் சிரிப்பு தூள் பறந்தது.

"நம்ம பால்ச்சாமியைப் பாரப்பா... 'ஒயிட் அண்ட் ஒயிட்'லே 'ஜம்ம்'னு இருக்கான். புது மாப்பிள்ளை கணக்கா..."

"பாராட்டு விழா இல்லே? இன்னைக்கு அவனை 'வானத்துச் சந்திரன், ஆகாயச் சூரியன்'னு ஆளுக்கு தூக்கிப் பந்தாடு வாகளே..."

"பாராட்டலாம்லே? போலீஸ் ஸ்டேஷனைக் கண்டாலே, நமக்கு தொடையெல்லாம் நடுங்குது. அடி வவுறு கலங்குது. அவன் ஜெயிலுக்கே போய்... பதினாலு நா இருந்துருக்கானே..."

"அச்சடிச்ச களியும், அவுன்ஸ் கிளாஸ் சாம்பாரும் வேப்ப மரத்து நெழலும், வெண்ணையெடுக்காத மோரும் பதினாலு நா குடிச்சதுலே... பால்ச்சாமி ஒரு சுத்து பெருத்துட்டானப்பா. ஆளே... பளபளப்பாயிட்டான்."

"பெறகு...? வ.உ.சி.மாதிரி செக்கிழுத்து ஜெயிலுக்குள்ளே சாகச் சொல்றியா, நம்ம பால்ச்சாமியை? வெண்ணெய் எடுக்காத மோருக்கு நீ போயிருக்கக் கூடாது? போகலேல்லே...?"

"போன பால்ச்சாமியும்... தியாகம் செய்ஞ்சு, ரெத்தம் செத்து, எலும்பும் தோலுமா வந்துட்டானாக்கும்?"

"சும்மா... 'வாய் புளிச்சதோ, மாங்கா புளிச்சதோ'ன்னு சொல்லாதே. பொண்டாட்டி, புள்ளைக, வீட்டு வேலைகளைப் போட்டுட்டு தைரியமாக போகணும்லே?"

வேலை வேலையாக இருந்தாலும் பேச்சும் சிரிப்பும் தூள் பறந்தது. 'இவருக்கெல்லாம் பாராட்டு விழாவா' என்று நக்கலடித்த தோழர் கூட, பால்ச்சாமியைப் பார்த்து கண்ணடித்துக் குறு நகை செய்து கொண்டார். 'சும்மா வேடிக்கைப் பேசுகத் தானப்பா.... வருத்தப் படாதே' என்று சொல்லாமல் சொல்லிக் கொள்கிற கண்ணடிப்பு.

விழாவின் ஆரம்பக்களை. பரபரப்பு.

சிறப்புரையாற்ற வந்திருந்த மாவட்டச் செயலாளர் மேடையேறினார். ஜிப்பாவும் வழுக்கைத் தலையும், முதுமைக்குரிய மரியாதைத் தோற்றம் தந்தது. ஆனால் முகத்தில் இயல்பான இளமை. நாற்பதுக்கும் உட்பட்ட வயது.

கூட்டம் 'ஜே.ஜே' என்று கூடியிருந்தது. மாவட்டச் செயலாளர், பால்ச்சாமிக்கு சிவப்புத் துண்டை விரித்து அணிவிக்க... கைதட்டல்...

இவனுக்கு மாலைகளும் துண்டுகளும் போர்த்தி மகிழ.. உள்ளூர்த் தோழர்கள் காத்திருந்தனர். அதோ... ஒரு பெண். கையில் மலர் மாலையுடன்.

அவள், இவனைப் பார்த்து அங்கிருந்தபடியே புன்னகைத்தாள். இவன் அவளை பெருமிதமும் பூரிப்பும் ததும்பப் பார்த்தான். இன்றைக்குத்தான் புதுசாகப் பார்ப்பதுபோல வியப்பும் பிரமிப்புமாகப் பார்த்தான்.

பார்வை அவள் மீது நங்கூரமிட.... மனசுக்குள் மாலைமாலையாக நினைவுகள். நாலு கண்களின் பின்னல்.

அப்போது–

பால்ச்சாமிக்கு கட்சியும் கல்யாணமும் ரொம்பப் புதுசு. அதிலும் கல்யாணம் ரொம்பப் புதுசு. நடந்து நாலு மாசம்தான் ஆகியிருந்தது. கல்யாண மாலை இன்னும் வீட்டில் தொங்குகிறது. அதன் நார்களின் ஈரநிறம் இன்னும் மாறவில்லை. மயிரிழையாக பின்னப்பட்டிருந்த ஜரிகையின் பளபளப்பு, இன்னும் புத்தம் புதுசாகவே மங்காமலிருந்தது.

பால்ச்சாமி கட்சிக்குள் வந்து ஒரு வருஷம் ஆகிறது. வாலிபர் சங்கத்தில்தான் சேர்ந்தான், முதலில். அப்புறம்தான் கட்சி.

வாலிபர் சங்கத்தில் சேர்கிற போது கூட.... முழுசாக விவரம் அறிந்தோ– அதன் கொள்கையால் ஈர்க்கப்பட்டோ– சேரவில்லை. ஒரு விளையாட்டுப் போல ஒரு பிரமிப்பில்– சேர்ந்தான்.

பால்ச்சாமிக்கென்று ஒரு சுபாவம். ஏகமான துறுதுறுப்பு. எதில் கால் வைத்தாலும் அதில்



''வர வர என்ன காரணம் சொல்லி லீவு எடுக்கறதுன்னு விவஸ்தையில்லாம போச்சு. டைப்பிஸ்ட் உஷா, 'ஊரிலேருந்து என் மாமியார் வந்திருக்காங்க, அவங்களோட சண்டை போட ரெண்டு நாள் லீவு வேணும்'னு கேட்டிருக்காங்க!''

– டி.என். பாலகிருஷ்ணன்

முழுசாக முங்கிக் கரைகிற தீவிரம். வாலிபச் சுறுசுறுப்பு. துடிப்பு. பாம்பையும் தாண்டுகிற துணிச்சலான துடிப்பு.

எதிலுமே அவன் அப்படித்தான். அவசரத் தீவிரம்.

ரொம்ப நாள் நீச்சல் தெரியாமலிருந்தான். கிணற்றுக்குள் இறங்கிக் குளிக்கவே மாட்டான். மோட்டார் ஓடினால் தலையை கொடுப்பான். இல்லையென்றால் வீடு வந்து விடுவான். கிணற்றில் தண்ணீர் மூலைப்படி வரை 'கெத்து, கெத்'தென்று கிடக்கும். தேங்காய்ப்பாலென திதிப்பு. பச்சைப் பசேலென்று மின்னித் தளும்புகிற தண்ணீர்.

இவனைவிட வயசில் சின்னப்பயல்களெல்லாம் குதித்து விளையாடுவார்கள். பம்ப் ஷெட் ரூமின் உச்சியில் ஏறி நின்றுகூட குதிப்பார்கள். காடே அதிர்கிற மாதிரியான சத்த அதிர்வு. கிணறே ஆடிக் குலுங்குகிற மாதிரி தள்ளாடும். மேலேறித் தெறிக்கும் நீர்த்திவலைகள் சூரிய ஒளிபட்டு, வெள்ளித் துண்டுகளாக மின்னும்.

இவன் ஏக்கமாய்ப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பான். 'நமக்கு நீச்சல் தெரியவில்லையே' என்று உள்ளுக்குள் வெம்பிக் குமைந்து போவான். பயல்கள் காட்டுக் கூச்சல் போடுவார்கள். கும்மாளமும் குதூகலமுமாய் விளையாட்டு வெறிக் கூச்சல். குறுகலான கிணற்றுக்குள்ளேயே 'தொட்டுப் பிடித்து' விளையாடுவார்கள். கண்ணாமூச்சி விளையாடுவார்கள்.

பால்ச்சாமி, கண்டக் காய்ச்சிய பாலாக உள்ளுக்குள்ளே குமைந்து குமைந்து அடங்குவான்.

கிணற்று விளிம்பில் தவளைபோல உட்கார்ந்து வேடிக்கை பார்ப்பது, வெட்கமாகவும் கூட இருக்கும்.

நீச்சல் பழக வேண்டுமென்று ஆசைப்பட்டான். 'முடியுமா, நடக்குமா, சாத்தியப்படுமா' என்ற சந்தேகமோ, சஞ்சலமோ எட்டிக் கூடப் பார்க்கவில்லை. உள்ளிலிருந்து நின்ற நிலையில் நீந்திக் கொண்டே ஒருவன் அண்ணாந்து பார்த்தான்.

"டேய்... பாலு. நீ நீச்சல் பழகுறியாடா?"

"ம்"

"குதிக்குறியா?"

"ம்"

"பயமாயில்லியா? தண்ணியைக் குடிச்சு, முங்கிட்டுன்னா... மஞ்சத்தவக்கா (சாவு) பிடிச்சிருவே. பாத்துக்கடா..."

"பரவாலே..."

"அப்பக்குதி..."

சட்டையின் பட்டன்களை விடுவித்தான். உரித்து கீழே போட்டு விட்டு எழுந்து நின்றான்.

"குதிக்கட்டா...?" என்று துடித்தான்.

"சித்தே பொறு..." என்றவன், தன்னைச் சுற்றிலும் நீருக்குள் அலைந்து கொண்டிருந்த பையன்களை ஒதுங்கச் சொல்லி... களத்தை சுத்தப்படுத்திவிட்டு,

"ம்... இப்பக்குதி" என்றான்.

நடுக்கமோ... பயமோ... தயக்கமோ கூட இல்லாமல் குதித்தான். நீருக்குள் அமிழ்ந்தான். தன்னைச் சுற்றிலும் பச்சைக் கண்ணாடியாய் நீரின் இயக்கம். லட்சக் கணக்கில் மரகத மணிகளாக துளிகளின் பாய்ச்சல். இவனுக்குள் பதற்றமில்லாத பிரமிப்பு.

தன் போக்கில் கால்கள் நீரை உதைக்க, வலையில் சிக்கிய பறவையின் றெக்கையடிப்பாக கைகள் 'தடபுட'வென்று தாறுமாறாக அடிக்க...

நீரின் மேல் தளம் வந்து சேர்ந்தான், பால்ச்சாமி. அவனை 'கப்'பென்று பிடித்துக் கொண்ட சிநேகிதன்... நீச்சலைப் பற்றி மெல்லச் சொன்னான்.

'கையும், காலும் தானாக தண்ணீரைப் பின்நோக்கித் தள்ளினால்... போதும்' என்பதை விளக்கினான்.

அன்றைக்கு-

சாயங்காலம் வரைக்கும் தொடர்ந்த நீச்சல் பயிற்சி. கண்ணெல்லாம் சிவந்திருந்தது, ரத்தமாக. காதுகளுக்குள் 'ங்கிய்ய்'கிற இரைச்சல்.

மறு நாள்-

பால்ச்சாமி முழுசாகத் தேறி விட்டான். அவனும் பம்ப்செட் ரூமின் உச்சியிலிருந்து குதித்தான். பல்டியடித்துக் கொண்டே குதித்தான். தலைகீழாக, அம்பாகக் குதித்தான்.

முங்கு நீச்சலில் மீனை விட லாகவமாய் விரைவின் வீச்சாய்...

கூட இருந்த பையன்களெல்லாம் பிரமித்தனர்.

"ஒரே நாள்லே...இம்புட்டுத் தேர்ச்சியா?"

"ஆர்வந்தான். முயற்சிதான்..."

"அதெல்லாத்தையும்விட... ஓங்கிட்டேயிருக்கிற தீவிரம்தான் இந்த வேகத்துக்குக் காரணம்."

அதுதான் பால்ச்சாமி. பால்ச்சாமியின் சுபாவம். இந்தச் சுபாவம்தான், இவனைப் பல சிரமங்களுக்குள் தள்ளவும் செய்தது.

(தொடரும்)

நுகர்வோர் பிரச்னை:


ஊழலுக்கு இன்ன உருவம்தான் என்பது இல்லை! டூ-வீலர் விற்பனையில் சமீப காலமாக ஒரு நூதன மோசடி நடந்து வருகிறது!



ஒரு பைக் வாங்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள். டீலரிடம் போய் ரெடி கேஷ் கொடுத்துப் பதிவு செய்யச் சொன்னால் கூட "ஆறு மாசம் கழிச்சி வாங்க சார்!" என்று பதில் வரும்.

டூ-வீலர்கள் உபயோகிப்பவர்கள் எக்கச்சக்கமாகப் பெருகிவிட்ட சூழ்நிலையில் டூ-வீலர்களின் உற்பத்தியும் பெருகித்தான் இருக்கிறது. இருப்பினும் எதற்காக இந்த ஆறு மாசக் காத்திருத்தல்?

விஷயம் இருக்கிறது. டூ-வீலர்களிலேயே குறிப்பாக 'யமஹா'வுக்கு டிமாண்ட் அதிகம். பிக்-அப் அதிகம், பராமரிப்பு செலவு குறைவு, 'ரீ போர்' செய்யத்தக்க இஞ்சின் எனப்பல சௌகர்யங்கள் இந்த வண்டியில். இதனாலெல்லாம் இளைஞர்கள் 'யமஹா' மேல் காதல் பார்வை கொள்ள, டீலர்களுக்கு ஒரு நூதன



டூ-வீலர் விற்பனை:
டூ மச் ஊழல்!

மோசடி உத்தி தோன்றிவிட்டது.

வண்டிகள் வாங்கப் பணம் தரும் ஃபைனான்ஸியர்களுடன் ஓர் ஒப்பந்தம் போட்டுக் கொண்டு அவர்கள் 'வேலை'யைத் தொடங்குகிறார்கள்.

டீலர்களுக்கு, குறிப்பிட்ட 'கோட்டா'வாகக் கம்பெனி நிர்ணயிக்கும் பைக்குகளை இந்த ஃபைனான்ஸியர்கள் மொத்தப் பணம் கட்டி 'புக்' பண்ணி விடுவார்கள். போலிப் பெயர்களில் பதிவாகும் இப்படியான பைக்குகள், நிஜ வாடிக்கையாளர்களுக்காகக் காத்திருக்கும்.

வண்டி வாங்கப் போகிறவர்களிடம்



''மைலாப்பூர் நாடக அகாடமியிலே எனக்கு 'பரோபகார விருது' கொடுத்திருக்காங்க!''

''எதுக்காக?''

''மேடை நாடகங்கள், டீ.வி. சீரியல் களுக்கு கதை எழுதித் தராமல் இருந்த தற்காக!''

- து. பூவராகன்

"ஆறு மாசம் கழிச்சு வாங்க. ஏற்கெனவே வெயிட்டிங் லிஸ்ட்ல நிறைய பேர் இருக்காங்க. அவங்களுக்கெல்லாம் சப்ளை ஆன அப்புறம்தான் உங்களுக்கு வரும்" என்று ரீல் விடுவார்கள், டீலர்கள்.

வண்டி வாங்குவது என்று முடிவானதும் ஆறு மாதம் காத்திருக்க யார் சம்மதிப்பார்கள்? 'மேற்கொண்டு' செலவானாலும் பரவாயில்லை என்று 'குறிப்பால்' உணர்த்தினால், "அப்ப சரி. ஆறாயிரம் மேல ஆகும். பரவாயில்லையா?" என்பார்கள்.

'வெயிட்டிங் லிஸ்ட்'டை மீறிக் கிடைக்கிறதே என்கிற சந்தோஷத்தில்(?) ஒப்புக் கொண்டு பலரும் பணம் கட்டிவிட, அதில் டீலருக்கும் முன்னதாக மொத்த பணம் கட்டியிருக்கும் ஃபைனான்ஸியருக்கும் பங்கு!

இப்படி ஒரு மோசடி நடப்பது தெரிய வந்ததும் 'கஸ்டமர்' வேஷத்தில் நாம் சில டீலர்களை அணுகினோம்.

"சார், யமஹா ஆர்.எக்ஸ்.100...."

"புக் பண்ணி இருக்கீங்களா?"

"இல்லை."

"அப்ப ஒண்ணும் பண்ண முடியாது."

"எனக்கு ரெண்டு நாளில் வண்டி வேணுமே?"

சொல்லி வைத்தாற்போல 'ஆறாயிரம் அதிகம் செலவாகும்; பரவாயில்லையா?' என்று கேட்டார்கள்!

தமிழ் நாட்டில் மட்டும் மாதம் ஆயிரம் யமஹா வண்டிகள் விற்பனை ஆகின்றன என்று புள்ளி விவரம் சொல்கிறார்கள். இந்தக் கணக்குப்படிப் பார்த்தால் அறுபது லட்சம் ரூபாய் 'ப்ரீமியம்' என்ற பெயரால் கொள்ளையடிக்கப்படுகிறது, டீலர்களால்!

யமஹா தயாரிப்பாளர்களான 'எஸ்கார்ட்ஸ்' நிறுவனத்துக்கு இந்த விஷயம் எப்படித் தெரியாமல் இருக்கும்? 'எஸ்கார்ட்ஸி'ன் விற்பனைப் பொறுப்பாளரான வி.ஆர்.சீனிவாசனைத் தொடர்பு கொண்டோம்.

"எங்களிடம் டீலர்களைக் கண்காணிக்கப் போதிய ஆள் பலம் இல்லை. குறிப்பிட்ட டீலர் மேல் யாராவது கம்ப்ளெயின்ட் செய்தால் நிச்சயம் நடவடிக்கை எடுக்கத் தயார்" என்றார் அவர்.

தவிர, இன்று அதிக டிமாண்ட் இருக்கும் ஆர்.எக்ஸ்.100சிசி வண்டிகள் தயாரிப்பை முற்றிலும் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கென மட்டும் வைத்துக் கொண்டு, இங்கே அதன் விற்பனையை நிறுத்தி, 135சிசி வண்டிகளைப் புதிதாக அறிமுகப்படுத்தப் போகிறார்களாம்.

"135சிசி வண்டிக்கும் இந்த 100சிசி வண்டிக்கும் விலையில் சுமார் ஆயிரம் ரூபாய்தான் வித்தியாசம் இருக்கும். வாடிக்கையாளரின் தேவைக்கேற்பக் கணிசமான வண்டிகள் உற்பத்தியாகப் போகின்றன. அப்போது இந்தத் தில்லுமுல்லுகள் மறைந்துவிடும்" என்றார்.

நமக்கு அப்படித் தோன்றவில்லை. எதற்கும் இருக்கட்டும் என்று இரண்டு மூன்று வெவ்வேறு இடங்களில் உள்ள டீலர்களிடமும் அதே 'வண்டி வாங்குபவர்' வேஷத்தில் பேசிப் பார்த்ததில் 'ஆறாயிரம் அதிகமா' பாட்டைத்தான் எல்லாரும் பாடுகிறார்கள்.

இந்த நூதன மோசடி டூ-வீலரிடமிருந்து சமீப காலத்தில் மாருதி கார்களுக்கும் பரவி இருக்கிறது!

-ப்ரியன்

வண்ணப்படம் : கிருஷ்ணமூர்த்தி

JTS CORPORATION

இந்தியாவில், டிஸ்க் டிரைவ்கள் தயாரிப்பில் முன்னோடிகளான

மாடுலர் எலக்ட்ரானிக்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினராகிய நாங்கள், பிரமாதமான வளர்ச்சிப் பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கிறோம். இந்த சாதனையை அடைவதற்கு

2000-க்கும் அதிகமான பெண் ஆப்ரேட்டர்கள் தேவைப்படுகிறார்கள்.

கல்வித் தகுதி : S.S.L.C. தேறியிருத்தல் / +2 தேறியிருத்தல், **வயது** : 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடையில், **சம்பளம்** : மாதத்திற்கு **ரூ.650/-** இதோடு, ஒழுங்கான முறையில் பணிக்கு வருகை தருபவர்களுக்கு மாதத்திற்கு ரூ.150/- வீதம் காலந் தவறாமை நன்கொடை அளிக்கப்படும். இவற்றுடன் P.F., E.S.I., போனஸ் போன்றவையும் உண்டு. இலவச உணவு மற்றும் போக்குவரத்து வசதியும் அளிக்கப்படுகிறது. ஷிப்ட் முறையில் பணிபுரிய விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள் **நேர்முகத் தேர்விற்கு 30.4.96-க்குள் நேரில் உடனே அணுகவும்.**

தொடர்பு கொள்க : The Director - Human Resources,

MODULER ELECTRONICS (I) PVT. LTD.,

SDF Block V, Madras Export Processing Zone,,

Tambaram, Madras-600 045.

卐



மரியோ மிராண்டா, இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி' மூலம் பிரபலமான கார்ட்டூனிஸ்ட். அவரது 'மிஸ்டர் பாஸ்' 'மிஸ்டர் பண்டல் தாஸ்' 'மிஸ் நிம்புவானி' பாத்திரப் படைப்புகள் எல்லாம் அவரை விடப் பிரசித்தமானவை.

மரியோவின் பாத்திரங்களுக்கு முப்பரிமாண வடிவம் கொடுத்திருக்கிறார் பிரிஜ்குல் தீபக் என்கிற பொம்மைகள் செய்யும் கலைஞர். ("அவற்றை பொம்மைகள் என்று சொல்லாதீர்கள். சிற்பம்!")

மரியோ மிராண்டாவின் கார்ட்டூன்களிடத்தில் அபார காதல் கொண்ட தீபக், அவற்றை முதன் முதலாக பொம்மைகளாக்க முயன்ற போது மரியோ இலேசில் மசியவில்லை.

அவரது 'மிஸ்டர் பண்டல்தாஸ்', 'மிஸ்டர்

"பொம்மை என்று சொல்லாதீர்கள்... சிற்பம்!"



• மரியோ மிராண்டா

பாஸ்' கேரக்டர்களைச் சில சாம்பிள் பொம்மைகளாகச் செய்து காட்டி, பலரும் பாராட்டிய பிறகுதான் பச்சைக் கொடி காட்டி இருக்கிறார் மரியோ!

தீபக்கின் திறமையைப் புரிந்து கொண்ட பிறகு அவருடன் இணைந்து பணியாற்ற ஒப்புக் கொண்டார். இருவரும் இணைந்து நடத்திய முதல் கண்காட்சி, 1992-ல் பம்பாயில் நடந்தது. 'இந்தியா' என்ற தலைப்பில் மரியோ வரைந்த சித்திரங்களைப் பத்தடி உயர பொம்மைகளாக தீபக் வடித்து வைத்திருந்ததைக் கண்டு சிலிர்த்துப் போனார்கள் மக்கள். அத்தனை தத்ரூபம்!

அந்தக் கண்காட்சிக்கு வந்திருந்த ஏர்-இந்தியா நிறுவனத்தின் அதிகாரிகளுக்கு, இந்த ஜோடியை உடனே, தம் நிறுவன விளம்பரங்களுக்கு எப்படியாவது பயன்படுத்திக் கொண்டு விட வேண்டும் என்று தோன்றி இருக்கிறது.

அதன் விளைவு,




• ஏர்-இந்தியா கண்காட்சியில் தீபக்கின் பொம்மைகள்

மரியோ-தீபக்கின் 'ஏர்-இந்தியா' கண்காட்சி.

பம்பாய், கோவா என்று தொடங்கி தென் ஆப்ரிக்காவெல்லாம் சுற்றி விட்டு, தற்சமயம் தில்லிக்கு வந்திருக்கிறது இந்தக் கண்காட்சி.

என்ன விசேஷம்?

'ஏர்-இந்தியாவின் செக்-இன் கவுண்ட்டரில் தொடங்கி, அக் கம்பெனியின் விமானங்கள் சென்று அடையும் பம்பாய், கோவா, நியூயார்க், லண்டன், டோக்கியோ இன்னபிற நகரங்களின் ஏர்-போர்ட் சூழ்நிலையை, அங்கு வரும் மனிதர்களின் நடவடிக்கைகளைத் துல்லிய மாகக் கவனித்து, நகைச்சுவை இழையோடும் பொம்மைகளாகப் படைத்திருக்கிறார் தீபக்!



பின்னணியில் அதே காட்சிகளின் கேலிச் சித்திர வடிவம் - மரியோ மிராண்டாவின் கை வரிசையில்!

“மக்கள் இதை மிக ரசிக்கிறார்கள்” என்றார் தீபக். நாற்பத்தைந்து வயது. சமூகவி யல் முதுகலைப் பட்டதாரி. உத்திரபிரதேசத் துக்காரர் இவர்.

“மக்களிடையே தொடர்பு வைத்துக் கொள்ளத்தக்க துறையில் இறங்க விரும் பினேன். பொம்மைகள் செய்வது எனக்குக் கைகொடுத்தது” என்கிறார்.

“தில்லி, கிராஃபைட் மியூசியத்தில் பத்து வருஷ காலம் பணியாற்றி இருக்கிறார் தீபக். 'Festival of India' நிகழ்ச்சிகளின் போது அங்கே ஏற்பட்ட அரசியல்வாதிகளின் அபார தலை யீடு காரணமாக வேலையை விட்டு விட்டார். (“சந்தோஷமா விட்டுட்டேன்!”)

மரியோ மிராண்டாவுடன் இணைந்து வேறு பல கண்காட்சிகள் நடத்துவதிலும் மும்முரமாக இருக்கிறார் தீபக்.



• தீபக்



தற்சமயம் பொம்மைகள் செய் வதே முழு நேரத் தொழில். அமெரிக்கா உட்பட பல நாடு களில் பொம்மைக் கண்காட்சி நடத்தி இருக்கிறார். தவிர, பொம்மை செய்யச் சொல்லிக் கொடுப்பது - குறிப்பாகக் குழந்தைகளுக்கு - இவரது முக்கிய ஈடுபாடு.

துணிகளாலேயே பொம்மைகள் செய்கிறார். இவர் பெரும்பாலும் இதற்கு உபயோகிப்பது கதர்த் துணியை!

– ரமாமணி சுந்தர்

ஒளமியும் உதடுகளும்

இரா. முருகன்

காதல் தேவதை லேசான சோகைச் சிவப்போடு, மராத்தியப் பெண் சாயலில் இருப்பாள். பைஜாமா அணிந்து, பால் கேன்களைப் பரத்தி வைத்துக் கொண்டு முகத்தில் இரண்டு நாள் தாடியோடு நிற்பவர்களும், மீன்கூடை ஏற்றக் காத்திருப்பவர்களும், ஆபீஸுக்குப் போகப் பரபரப்பவர்களும் நீக்கமற நிறைந்து வழியும் மும்பாய் சாந்தாகுரூஸ் ஸ்டேஷனில் மின்சார ரயிலுக்கு டிக்கட் வாங்க நிற்கிறவன் வாயில் புகுந்து உளற வைப்பாள்...

"தாம்பரம் ரிட்டர்ன்"

"கியா?"

கவுண்டருக்கு அந்தப் பக்கம் ஒரு ஜோடி அழகான உதடுகளும், அதே எண்ணிக்கையில் நேர்த்தியான கண்களும் சிரிப்பைச் சிதறவிட, கோடைக்காலம் எட்டிப் பார்க்கும் பம்பாய்க்கு நான் வந்து சேர்ந்த மூன்றாம் நாள் ஜில்லென்று ஆரம்பமானது.

"ஐயாம் சாரி- மெட்றாஸ் நினைப்பு- ஐ மீன்... சர்ச்கேட் ரிட்டர்ன்..."

குறும்பாகக் குவிந்த உதடுகளை விட்டுப் பார்வையை விலக்க மனமே இல்லாமல் டிக்கட்டை எடுத்துக் கொண்டேன்.

பொதுவாகவே மராத்திப் பெண்களுக்கு உதடு அழகு. பிரம்மனுக்கு ஏதோ எழுதாத விதி... தமிழ்ப்பெண்ணா... நீளமான கூந்தலாக வை... தெலுங்கா... பெரிய்ய கண்கள்... பஞ்சாபியா... வடிவான மூக்கு... மலையாளியா...

ரயில் வந்து விட்டது.

சர்ச் கேட்டில் இறங்கி, ஃபோர்ட் பக்கம் நடையை விட்டு, ஒரு பழைய மாடியில் 'ஹோல்காஸ்ட் அட்வர்டைசிங்கில்' படியேறியபோது சர்மா வந்திருந்தார்.

"என்ன... சாந்தாகுரூஸ் ஜாகை பிடிச்சுப் போச்சா... குஷியாக வராய்... ரெண்டு நாளா முகத்தைத் தொங்கப் போட்டுண்டு கிடந்தாய்..."

இரண்டு நாள் ரயிலில் வரவில்லை.

"தோ பாரு... காப்பிரைட்டர் உத்தியோகம் சாதாரணமானது இல்லே... ஒரு விளம்பரம் நிக்கறதும் விழறதும் வாசகத்தை வச்சுத்தான். இங்கிலீஷிலே தர்றதை அழகா அம்சமா தர்ஜமா பண்ணணும்... என் பேரைக் கெடுக்க மாட்டியோன்னோ..."

சர்மா அடுத்த மாதம் ரிடையராகப் போகிறார். நாற்பது வருஷம் முன்னால் ஊரிலிருந்து கொண்டு வந்த தமிழில்தான் இன்னும் விளம்பர வாசகம் எழுதுகிறார்- கேம்ப்ரிட்ஜ் பிஸ்கட் ஒரு வாசாலகமான பிஸ்கட்.

கேம்ப்ரிட்ஜ் பிஸ்கட்டுக்கு ஒரு தற்கால இமேஜ் உடனடியாகத் தேவை. எப்படி எழுதலாம் என்று யோசித்தபடி ஜன சமுத்திரத்தில் ஒரு துளியாகச் சாயங்காலம் சாந்தா குரூஸ் திரும்பிப் பாலம் ஏற, காதல் தேவதை மறுபடி சிரித்தாள்.

"ஹலோ..."

சிநேகமாகப் பார்த்தபடி கடந்து போன டிக்கட் கவுண்டர் அழகி.

அந்த உதடுகளின் சிவப்பில் லயித்தபடி நடக்க, சர்மா சொன்னது நினைவு வந்தது.

"தலையை இப்படிக் காடு போல வச்சுக்காதே.. ஒழுங்கா சிரைச்சுக்கோ... ஸ்லாக் மாட்டிண்டு ஆபீஸ் வராதே... முழுக்கைச் சட்டை போடணும்.. ரயில்லே சீசன் டிக்கட் வாங்கிடு.. கம்பெனி அறுபத்தாறு புள்ளி மூணு சதவிகிதம் அதற்கான செலவைத் தரும்."'

ஸ்டேஷன் பக்கம் வரிசையாகத் திறந்திருந்த சலூன்களில் ஒன்றில் முடிவெட்டிக் கொண்டேன். நீலமும் பச்சையுமாக இரண்டு முழுக்கைச் சட்டை, பிளாட்பாரத்தில் வாங்கினேன். சீசன் டிக்கட் மட்டும் வாங்கவே கூடாது என்று தீர்மானமாக முடிவு செய்து விட்டேன்.

"தம்பி ரிட்டர்ன்?"

அடுத்த நாளும் தொடர்ந்த சிரிப்பு.

"தம்பியும் இல்லே... அண்ணாவும் இல்லே... தாம்பரம் ரிட்டர்ன்..."

ஒற்றை ரோஜாப்பூ சூடிய அழகி. தினசரி பார்க்கிற ஆயிரம் பேரில் என்னை மாத்திரம் இனம் கண்டு, சற்றே உதடு பிரியச் சிரிக்கிறவள்...

ஆயுசுக்கும் இனி பம்பாயில் இருந்து விடலாம்...

ஒரு வாரத்தில் ஏகப்பட்ட முன்னேற்றம்.

அவள் பெயர் ஊர்மிளா. ஊர்மிளா மோரே. வேலைக்குச் சேர்ந்து ஒரு மாதமாகிறது. நான் இருக்கிற பிரபாத் காலனியில் தான் வீடு... காலையில் மூன்றரை மணி நேரமும், திரும்ப சாயந்திரம் மூன்று மணி நேரமுமாக வேலை... பிடிக்கவில்லை.


முப்பது நாளில் கற்பிக்கும் புத்தகம் வாங்கி, "காய் பாஜீ?", "பஸோ" என்று அடிப்படை மராத்தி படித்தேன். சாயந்திரம் ஆபீஸிலிருந்து அடித்துப் பிடித்து அவசரமாகத் திரும்பி, அவள் வேலை முடிந்து வரும் வரை பாலத்தில் கொய்யாப்பழ நெடியையும் சிகரெட் புகையையும் சகித்தபடி காத்திருந்தேன்.

"தலையை வலிக்குது... சாய் சாப்பிடலாமா?"

பாலம் இறங்கும்போது ஊர்மிளா கேட்க, சந்தோஷமாக கோபால்கிருஷ்ணன் ஓட்டல் பக்கம் விடு சவாரி... வேகமாக வந்த ஆட்டோ மேலே மோதாமல் ஊர்மிளாவின் கையைப் பற்றித் தடுத்து நிறுத்திய போது, "இந்தப் பிடி நிரந்தரம்" என்று காதல் தேவதை தமிழிலும் மராத்தியிலும் மாறிமாறி அறிவித்தது.

வெயிட்டர் வருவதற்குள் ஏதாவது பேச வேண்டும். "பிரபாத் காலனியில் கொசுத் தொல்லை அதிகம்" என்று ஆரம்பித்தேன்.

தொல்லைதானாம். பழைய கட்டடங்களாம். இடித்துப் புது மோஸ்தரில் கட்டுவது லாபமான தொழிலாம். அவள் அண்ணன் கூட ஒரு காண்ட்ராக்டரோடு சேர்ந்து அந்த வேலை தான் செய்கிறானாம். கார்ப்பரேஷன் அனுமதி இல்லாமல் ராத்திரியில் செய்வதால் அவளுக்குப் பிடிக்கவில்லையாம். போன வருஷம் ரயில்வேயிலிருந்து ரிடையரான அவள் அப்பா ஜனார்த்தன் மோரேக்கும் அவ்வளவாகப்



அருள்வாக்கு



உடம்புக்கு மட்டும்தான் மூச்சு முக்கியம் என்றில்லை. மனஸுக்கும் மனஸின் ஆரோக்யத்திற்கும் அதுவே முக்யமாயிருக்கிறது. எண்ணங்களுக்கு மூலமான மனஸும், மூச்சுக்கு மூலமான பிராண சக்தியும் ஒன்றாகவே இருப்பதால்தான் இப்படியிருக்கிறது. நாடி சலனத்தாலேயே ஆரோக்யமான (நல்ல) அல்லது ஆரோக்யக்குறைவான (கெட்ட) எண்ணங்களும் உண்டாகின்றன. நீங்களே கவனித்துப் பார்த்தால் தெரியும். ஒரு தெய்வ ஸந்நிதானத்தில் அல்லது மஹானின் அருகில் மனஸ் சாந்தமாக இருக்கிறபோது மூச்சு எப்படி சஞ்சரிக்கிறது; காமத்தினால், கோபத்தினால் வேகம் உண்டாகிறபோது சுவாஸகதி எப்படியிருக்கிறது என்று பார்த்தால், ஒன்றுக்கொன்று நிரம்ப வித்யாஸமாயிருக்கும். ஸந்தோஷம் என்பதிலேயே கூட தெய்வ விஷயமாக ஒரு பஜனையில் அல்லது உத்ஸவத்தில் உண்டாகிறதற்கும், இந்திரிய ஸுகத்தைத் தருகிற விஷயங்களில் உண்டாவதற்கும் நாடி சலனத்தில் வித்யாஸம் தெரியும். பொதுவாக உத்தமமான ஸந்தோஷத்தில் மூச்சு வலது நாசித் துவாரத்தில் வரும்; வெறும் இந்திரிய ஸந்தோஷம் (புலனின்பம்) என்றால் இடது நாசித் துவாரத்தில் வரும். இத்தனை உணர்ச்சிகளுக்கும் ஆதாரமான சாந்தமான ஸத்வஸ்துவில் தியானம் வலுவாகிற போது, ஒரே சீராக, மிக மெதுவாக, இரு நாசிகளிலும் ஸமமாக மூச்சு வரும். தியான லக்ஷ்யத்தில் ஒன்றுபட்டு விடுகிறபோது மூச்சே நின்றுவிடும். மனஸும் நின்றுவிடும். ஆனால் உயிர் இருக்கும். பூர்ணம் என்ற பேருணர்வு பூரித்து இருக்கும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

பிடிக்கவில்லையாம். அம்மாவுக்கு அறவே அதேபடி... அண்ணனுக்கு சாம்னா பத்திரிகையும் சமோசாவும் இஷ்டமாம். மதராஸிகள் புத்திசாலிகளாம். கொஞ்சம் அசடு வழிவார்களாம்.

"துஜாஷி பிரேம் கர்த்தே..."

வெளியில் வரும்போது காதில் சொன்னேன்.

"உன்னோடு பழகி என் இங்கிலீஷைத் தேத்தலாம்னு பார்த்தா இப்படி மராத்தியிலே என்னைக் காதலிக்கறதாச் சொல்லிக் கழுத்தறுக்கறியே..."

கோபித்துக் கொண்டு விடுவிடுவென்று போனதற்கு அடுத்தநாள் மத்தியானம் ஆபீஸில் ரிசப்ஷனிஸ்டிடமிருந்து இண்டர்காம்.

"உங்களைத் தேடி மிஸ் மோரே வந்திருக்கார்."

வரவேற்பு ஹால் சோபாவில் ஸ்டைலாக உட்கார்ந்து என்னைப் பார்த்துச் சிரிக்கும் ஊர்மிளா... கண்ணில் சமாதானக் கொடி....

"அப்பா பென்ஷன் விஷயமா வெஸ்டர்ன் ரயில்வே தலைமை ஆபீஸுக்கு வந்தேன். அப்படியே உன்னோட மூஞ்சியையும் பார்க்கணும்னு..."

போட்டது போட்டபடி கூடவே கிளம்பி வி.டி. வரை நடந்து ரயிலேறி தாதரில் இறங்கினோம். திலக் பிரிட்ஜ் ஏறி இறங்கி ரானடே ரோடு கூட்டத்தில் கரைந்து பேல்பூரி சாப்பிட்டோம். புளிபடிந்த விரல்களை நக்கிக் கொண்டு, வரிசையாக நடைபாதைக் கடைகளைப் பார்த்தபடி நகர்ந்தோம்.

"அந்த ரோஸ் ஹேர்பேண்ட் உனக்கு அமக்களமா இருக்கும் ஊமி"

வேண்டாம் என்று சொல்லி, ஓரமாகப் பீங்கான் பாத்திரக் கடை பரத்தியவனிடம் அரை மணி நேரம்போல பேரம்பேசி சின்னச் சின்னதாக இரண்டு ஜாடி வாங்கினாள்.

"ஊறுகாய் போட்டு வைக்க உபயோகமாக இருக்கும்..."

இந்தப் பெண்களைப் புரிந்து கொள்ளவே முடியாது...

"ஹலோ ஊர்மிளா... இங்கே என்ன செய்யறே?"

உரிமையோடு அவன் தோளில் தட்டி என்னை முறைத்துப் போன பம்பைத்தலைத் தடியனை எங்கேயோ பார்த்த நினைவு.

"அண்ணனோட பார்ட்னர்..."

ஊர்மிளா கலவரமாகச் சொன்னாள்.

நினைவு வந்து விட்டது. நான் தங்குவதற்கு அடுத்த கட்டடத்தில் கீழ்ப் போர்ஷனை இடிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். சிகரெட் குடித்தபடி மோட்டார் சைக்கிளில் உட்கார்ந்து மேற்பார்வை செய்கிறவன் இவன்தான்...

அப்புறம் ஒரு வாரம் ஊர்மிளா கண்ணில் தட்டுப்படவே இல்லை.

"லாங்லீவ்" என்று அவன் இடத்தில் இருந்த ஆங்கிலோ இந்தியக் கிழவி சொன்னாள்.

"மெட்றாஸில் ஆபீஸ் திறக்கிறோம். நீதான் போக வேண்டும்..."

ஆபீஸில் வேறு கடுப்படித்தார்கள்.

M.I.E.T

MADRAS INSTITUTE OF ENGINEERING TECHNOLOGY

Regd. No. 560/89 No. 385, ARCOT ROAD, KODAMBAKKAM, MADRAS - 24.

"Result par Excellence"

Fresh Regular/Postal Classes admission open for 1996 - 97 Batch

Degree Level Courses (Equivalent to BE)

- **A.M.I.E. (INDIA)**
  SEC. A (Dip. Non-Dip). Sec. B (All Branches)
- **A.M.Ae.S.I.** (Aeronautical Engg.)
- **A.M.I.I.I.E.** (Industrial Engg.)
- **A.M.I.E.T.E.** (Electronics & Telecommunication)
- **C.E.I.** (London) Part 1 & II
- **A.M.I.M.E.** (Mechanical)
- **A.M.I. Chem. E.**, (Chemical)
- **A.I.I.A.E.** (Architectural Engg.)
- **A.M.I.A.E.** (Automobile)

Diploma Courses (3 years) [Govt. Recognised]

- Dip. in Electronics and Telecommunication Engineering (Dip. I.E.T.E.)
- Dip. in Mechanical Engineering (T. Engineering)
- Dip. in Refrigiration and Air Conditioning
- Dip in Production Engg.
- Dip. in Automobile Engineering

M.I.E.T. / I.T.I. NCVT Courses

- Refrigiration and Air Conditioning
- Electrician
- Mechanic Motor Vehicle
- Mechanic Diesel
- Data Preparation and Computer Software
- Electronics
- Instrument Mechanic
- Fitter
- Wiremen

M.I.E.T. Computers

- Diploma in Computer Application
- Diploma in RDBMS, ORACLE
- Diploma in Unix & C
- Diploma in Hardware
- Certificate Courses
- LAN Engineering
- DTP
- PGDCA

For Prospectus and Application form send M.O. or D.D. for Degree & Diploma Courses Rs. 70/- and for I.T.I. & Computer Courses Rs. 30/- in favour of 'The Principal, M.I.E.T.'

Hostel facility Available
For Girls and Boys

T.M. Gunaraja, A.M.I.E., M.E.,
Director

சனிக்கிழமை சீக்கிரமே கிளம்பி, சந்து பொந்து கடந்து ஊர்மிளா வீட்டைத் தேடிப் போக, கிரிக்கெட் விளையாடும் பையன்கள் விரிசல் கண்ட மட்டையை நீட்டி "ஆகே" என்றார்கள்.

படிஏறி காலிங்பெல் ஒலித்தேன்.

ஒரு வினாடி ஊர்மிளா முகம் தெரிந்தது. அழுத கண்ணும், கசங்கிய மாக்சியுமாக அவள் கஷ்டப்பட்டு புன்னகைப்பதற்குள் அப்பா மோரேயும் அண்ணா மோரேயும் ஆளுக்கு ஒரு தோளில் கை வைத்து என்னை வெளியே தள்ளிப் போனார்கள்.

அவர்களுக்கு எல்லாமே தெரிந்திருந்தது.

"உன்னோட மதறாஸி வேலையை இங்கே வச்சுக்காதே.. எங்க ராஜ்ஜியம் இப்ப.. ஒழுங்கா ஊர் போய்ச் சேரு... என் பார்ட்னருக்கும் ஊர்மிளாவுக்கும் அடுத்த திங்கள் கிழமை கல்யாணம்..."

மடக்கிப் பிடித்த 'சாம்னா' பத்திரிகையால் என் தலையில் தட்டினான் அண்ணா மோரே.

அப்பாவித்தனமும் கடுமையும் சரி விகிதத்தில் கலந்த முகத்தோடு, மராத்திய குணசித்ர நடிகர் நிலுஃபுலே போல இருந்த அப்பா மோரே அதையே உடைந்த இங்கிலீஷில் சொன்னார்.

எட்டிப் பார்த்த அம்மா மோரேயை இரண்டு பேரும் ஏக காலத்தில் உள்ளே போகச் சொன்னார்கள்.

முதுகுக்குப் பின்னால் திரும்பவும் குரல்...

"அடுத்த திங்கள் கிழமை ஊர்மிளா கல்யாணம்..."

நடந்தது. ஊர்மிளாவுக்கும் எனக்கும்.

அதற்கு இரண்டு நாள் முன் 'சாம்னா'வில் மூன்றாம் பக்கத்தில் ஈசான மூலையில் வந்த செய்தியை இங்கே குறிப்பிட்டேயாகவேண்டும்.

"மும்பாய்... ஜூன் 17. இன்று காலை சந்தாகுரூஸ் பிரபாத் காலனியில் ஒரு பழைய மூன்று மாடிக் கட்டடம் இடிந்து விழுந்து பத்துப் பேர் காயம் அடைந்தார்கள். அனுமதி பெறாமல் வேலை பார்த்த காண்ட்ராக்டர் விக்ரம் போஸ்லே, பாந்த்ரா போலீஸ் ஸ்டேஷனில் சரணடைந்தார். விபத்தில் காயமடைந்தவர்களை உடனடியாக மருத்துவமனையில் சேர்க்க, பக்கத்துக் கட்டடத்தில் வசிக்கும் தமிழ் இளைஞர் ஆற்றிய தொண்டை வீர மராத்திய இனத் தலைவர் பாராட்டி..."

ராப்பூராத் தூங்காமல் ஆஸ்பத்திரிக்கு அலைந்து விட்டுத் திரும்ப, ஊர்மிளாவின் அம்மா வாசலிலேயே நின்றிருந்தாள்.

அப்பா மோரேயும் பிள்ளை மோரேயும் மாப்பிள்ளையை ஜாமீனில் எடுக்கப் போயிருக்கிறார்களாம். அவளுக்கு ஊர்மிளாவை ஒரு கிரிமினலுக்குக் கல்யாணம் செய்து வைக்க



"கபாலி! நேற்று ராத்திரி, குருவிக்காரன் சாலை பாலத்தில் ஒரு பெண்ணோட கழுத்து செயினை அறுத்துட்டு ஓடினியாமே? உனக்கு பஸ்ஸிலே பிக்பாக்கட் அடிக்கத்தானே பெர்மிஷன் கொடுத்திருக்கேன்...?'

-ஜோஸ்விக்ரம்

மனமில்லையாம்.

"நீ என்ன செய்வியோ... ஏது செய்வியோ... பத்து மணிக்கு ஊர்மிளா உன் ஆபீஸுக்கு வருவாள்... நான் அனுப்பி வைக்கிறேன்... சாயந்திரத்துக்குள் தாலியேற வேணும் அவளுக்கு... உன் கையால்..."

காதல் தேவதை வயதான மராத்தியப் பெண்ணாக, முக்காட்டை இழுத்து விட்டபடி மெல்ல நடந்து போவாள்.

ஆபீஸே ஏகப் பரபரப்பாக இயங்கி இரண்டே மணி நேரத்தில் மஹாலக்ஷ்மி கோவிலில் நடந்து முடிந்த கல்யாணம். சாந்தாகுரூஸ் வரை எம்.டி.யின் காரில் வந்து சந்து பொந்து தாண்டி ஊர்மிளா வீட்டில் நுழைய...

வேண்டாம் விடுங்க... எல்லாம் பழைய கதை.

ஜனார்த்தன் மோரே வந்திருக்கிறார். வீட்டுக்கார அம்மாவும். காலையில் சென்ட்ரல் ஸ்டேஷனில் போய்க் கூட்டி வந்தேன்.

"மாப்ளே நலமா?"

யாரிடமோ இரண்டு வார்த்தை தமிழ் கற்றுக் கொண்டு வந்து மாம்பலம் வந்து சேர்வதற்குள் நூறு தடவை கேட்டுவிட்டார் மனுஷன்.

அவல் பொரி மிக்சர், இஞ்சி மொரபா, இனிப்பு சோம்பு என்று சகலமானதும் அடைத்த டப்பாக்களின் குவியலை ஆட்டோவிலிருந்து இறக்கியதும், அம்மாவை அணைத்துப் பிடித்தபடி எதையோ தேடினாள் ஊர்மிளா.

"கிடைச்சுடுத்து...."

ஊறுகாய் ஜாடி. தாதரில் வாங்கியது.

"மசக்கைக்கு மராத்தியிலே என்ன ஊமி?"

உதட்டைச் சுழித்துக் காட்டினாள்.

சொன்னேனே... மராத்தியப் பெண்ணுக்கு உதடு அழகு.

சென்னையை அடுத்துள்ள ஒரு பிரபல இல்லத்துக்குத் தொண்டர்கள் தேவைப்படுகிறது:-

படிப்புத் தகுதி:– +2 (குறைந்தது.)

இதர தகுதிகள்:


1) குழந்தைகளிடம் அன்பு.
2) சாதிமத வேறுபாட்டு உணர்ச்சி இன்மை.
3) சமூக–கிராம நலப் பணியில் ஆர்வம்.
4) அரசியல் தொடர்பின்மை.
5) சிகரெட், மது மற்ற எந்தக் கெட்ட பழக்கங்களும் இல்லாமை.
6) குடும்ப பாரம் இன்மை.

வசதிகள் :

உணவு, இருப்பிடம் மற்றும் இன்றியமையாத் தேவைகள் – தவிர சிறு அளவு கௌரவ ஊதியம்.

விண்ணப்பிக்க :

டி.எஸ். வேங்கடரமணி
4, பெஸண்ட் அவின்யூ,
அடையாறு,
சென்னை – 20.
தொலைபேசி: 4914766.





1996 ஏப்ரல் 14
யுவ சித்திரை 2
மலர் : 54
இதழ் : 37

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



ஊழல்களில் மெகா ஊழல்!


கூட்டணி பற்றிய குழப்பங்களும் வதந்திகளும் ஒருவாறு அடங்கிவிட, தமிழகத்தில் தேர்தல் வியூகங்கள் வகுக்கப்பட்டுத் தயார் நிலையிலுள்ளன.

தமிழ் மாநில காங்கிரஸ் - (மூப்பனார்) தி.மு.க.வுடன் உடன்படிக்கை செய்து கொண்டுள்ளதைத் தொடர்ந்து அமைச்சர்கள் அருணாசலமும் சிதம்பரமும் தங்கள் தொகுதிகளில் வேட்பு மனு தாக்கல் செய்து விட்டனர். புதிய கூட்டணிக்கு வலிமை சேர்க்கும் விஷயம் இது.

ஆர்.எம்.வீரப்பன் தலைமையிலான எம்.ஜி.ஆர். மன்றங்கள், போட்டியிலிருந்து விலகிக் கொண்டு, தி.மு.க. - மூப்பனார் காங்கிரஸ் கூட்டணியை முழுமையாக ஆதரிக்க முடிவெடுத்துள்ளன. ரஜினியின் அறிவுரையின் பேரில் எடுக்கப்பட்ட முடிவு என்றாலும் இவ்விஷயத்தில் ஆர்.எம்.வீரப்பன் காட்டியிருக்கும் பெருந்தன்மை வரவேற்கப்பட வேண்டியது.

மூப்பனாரின் கட்சியைத் தேர்தல் கமிஷன் அங்கீகரித்து அவர்கள் கேட்ட சைக்கிள் சின்னத்தையும் ஒதுக்கியிருக்கிறது. தேர்தல் கமிஷனின் பாராட்டும் மூப்பனார் காங்கிரசுக்குக் கிடைத்திருக்கிறது.

கட்சியில் பிளவு உண்டானதை மட்டும் எடுத்துச் சொல்லி, 95 சதவிகித கட்சிப்



பிரமுகர்களின் ஆதரவு தமக்கு இருப்பதாக மனு செய்தார் மூப்பனார்.


தேர்தல் நெருங்கி வரும் இந்த நேரத்தில், 'எங்கள் பிரிவே மெய்யான காங்கிரஸ்' என்று வாதாடி நேர விரயத்துக்கு வழி வகுக்காமல், அவர் நேர்மையாக நடந்து கொண்டதை தேர்தல் கமிஷன் வரவேற்றிருக்கிறது.

தேர்தல் பணிகள் சுறுசுறுப்பாக நடக்க ஆரம்பித்துள்ள சமயத்தில் மணி சங்கர் அய்யரின் எதிர்ப்பு அபஸ்வரமாக ஒலிக்கிறது.

'கருணாநிதியிடம் சரணடைந்திருக்கலாமா? தனித்து நின்றல்லவா மூப்பனார் பிரிவு போட்டியிட வேண்டும்?' என்று திசைதிருப்புகிறார் மணிசங்கர் அய்யர். அந்தர் பல்டி அடித்து அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியைச் சேர்ந்த அவருக்கு, தமது செய்கையை நியாயப்படுத்த வேண்டிய கட்டாயம். அதன் விளைவாக மூப்பனார் பிரிவை இப்படி விமர்சிக்கிறார் அவர்!

ராஜீவ் காந்தி பிரதமராக இருந்த ஆரம்ப நாட்களில் தமிழக காங்கிரசுக்கு உண்மையிலேயே புத்துயிர் ஊட்டப்பட்டிருந்தது. அதனால் மூப்பனார் தலைமையில் தமிழக காங்கிரஸ் 1989 தேர்தலில் தனித்து நின்று கணிசமான இடங்களையும் பெற்றது.

ஆனால் அதன் பிறகு நடந்த நாடாளுமன்ற சட்டமன்ற தேர்தல்களில் ராஜீவே மீண்டும் அ.தி.மு.க. கூட்டணியைத்தான் நாடினார். '91 தேர்தலில் வெற்றி பெற்று மத்தியில் ஆட்சி அமைத்த நரசிம்மராவ், மாநில அளவில் கட்சியை வளர்க்கும் பணியை அடியோடு புறக்கணித்தார். கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழக காங்கிரஸை பலப்படுத்த டெல்லியிலிருந்து அனுமதி இல்லை. மாறாக, கூட்டணி அரசியலுக்கே முக்கியத்துவம் தரப்பட்டது. அ.தி.மு.க.வா? தி.மு.க.வா? என்ற கேள்விதான் நிலவியதே தவிர, சொந்தக் காலில் நிற்பது என்ற பேச்சே



எழவில்லை.

இந்த நிலையில் மணிசங்கர் அய்யர் சொல்வது போல் மூப்பனார் தனித்துப் போட்டியிட முடிவெடுத்திருந்தால் அது வோட்டுகள் பிரிய மட்டுமே உதவியிருக்கும்; அராஜக ஊழல் ஆட்சிக்கு துணைபோவதாகவே முடிந்திருக்கும். தமிழக மக்களுக்கு எந்த நன்மையும் விளைந் திருக்காது. மணிசங்கர் அய்யரின் திசை திருப்பும் முயற்சிகளால் தமிழக மக்கள் ஏமாந்து விடப்போவதில்லை.

அதே போல் அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியின் திட்டமிட்ட கண்துடைப்பு முயற்சி களைக் கண்டும் அவர்கள் ஏமாறப் போவதில்லை.

மத்தியில் ஹவாலா அரசியல்வாதிகளுக்குத் தேர்தல் வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன. (அவர்களுடைய மனைவி மக்களுக்கு வழங்கப்படுகின்றன!) தமிழகத்தில் ஊழல் குற்றம் சாட்டப்பட்ட இந்திரகுமாரி முதலானோருக்கு டிக்கெட் தரப்படவில்லை.

ஆனால் ஊழல் குற்றச்சாட்டுகளின் முக்கிய இலக்கான சசிகலா குடும்பத்தினருக்குச் சட்டத்தின் பிடியிலிருந்து பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது. டெல்லியில் இதேபோன்ற பாதுகாப்புடன் செயல்பட்டு வருகிறார் சந்திராசாமி. இவர் பேரிலுள்ள குற்றச்சாட்டுகளை விசாரிப்பதில் உள்ள தாமதத்தை உச்சநீதிமன்றம் மீண்டும் வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில், கரம் கோத்துக் கொண்டு செயல்படும் நரசிம்மராவும் ஜெயலலிதாவும் தங்களை மட்டும் பரிசுத்தமானவர்களாகக் காட்டிக் கொள்ள முயன்று வருவதுதான் எல்லா ஊழல்களையும் விட மிகப் பெரிய ஊழல்!

இது தமிழக வாக்காளர்களுக்குப் புரியாமலா போகும்!

[redacted]

சந்தனக் கடத்தல் வீரப்பன் கூட இந்த அரசைக் குற்றம் சாட்டுகிறானே!

"எப்படி இருக்கிறீர்கள்?" ரொம்பவும் ரிலாக்ஸ்டாக இருந்த கே.ஏ.கே.யிடம் நாம் கேஷுவலாகக் கேட்டோம்.

"இன்று புனித வெள்ளிக்கிழமை. பைபிள் படித்துக் கொண்டிருந்தேன். அதில் ஒரு வாசகம் : 'எருதுகள் நுகத்தடிகளை பாரமாகக் கருதுவதில்லை' என்று. என்ன அற்புதமான வாசகம் அது!" என்று கே.ஏ.கே. சொல்லிக் கொண்டிருந்த போது கடலூரிலிருந்து வந்த ஓர் அன்பர் 'மன வளக்கலை' என்னும் புத்தகத்தை அவருக்குப் பரிசாக அளித்து, "இது மிகவும் உபயோகமாக இருக்கும்!" என்றார்.

"இது வெறும் இரண்டாம் பாகம்தானா? மற்றவற்றையும் கொண்டு வந்து கொடுங்கள்!" என்று அவரை வழியனுப்பி வைத்துவிட்டு நம்மிடம் பேச ஆரம்பித்தார்.

"என் மனத்தில் இறுக்கமும் இல்லை; புழுக்கமும் இல்லை. ஏனெனில் இறுக்கமாக இருந்தால் வார்த்தைகள் வராது; புழுக்கமாக இருந்தாலோ வார்த்தைகள் தடுமாறும்."

"இருப்பினும் வருத்தமாக இருப்பது போல் தெரிகிறதே?"

"தனிப்பட்ட முறையில் எனக்கு எந்தவிதமான வருத்தமும் இல்லை. ஜெயிக்கக் கூடிய தொகுதி ஆயிரம் விளக்குத் தொகுதி. தொகுதியிலுள்ள ஒவ்வொரு தெருவும் ஏன்... பலரை எனக்கு நேரடியாகவே தெரியும்... இதெல்லாம் உங்களுக்கும் தெரியும். அப்படிப்பட்ட ஒரு தொகுதியை எனக்குக் கொடுக்காமல் போனதால் கட்சிக்குத்தானே நஷ்டம்! இதுதான் எனது வருத்தம்!"

"உங்களைப் போன்ற மூத்த உறுப்பினர்கள் கொஞ்சம் ஒதுங்கிக் கொண்டு புதியவர்களுக்கு வாய்ப்புத் தருவதில் என்ன வருத்தம்?"

"அப்படியொரு செயல்திட்டத்தைக் கட்சி எடுத்திருந்து என்னைப் போன்ற மற்ற மூத்த உறுப்பினர்களுக்கும் சீட் இல்லை என்று அறிவித்திருந்தால் எனக்கும் சந்தோஷமே! நிலைமை அப்படியில்லையே! என்ன காரணத்துக்காக எனக்கு சீட் மறுக்கப்பட்டது என்று கூடத் தெரியாத ஒரு நிலையை எப்படி ஜீரணித்துக் கொள்வது? என்னைப் போன்ற மூத்த உறுப்பினர்களுக்கே கட்சியில் என்ன நடக்கிறது என்பது தெரியாத நிலை. எதுவும் வெளிப்படையாக நடக்க வேண்டாமா? '91-ல் கூட்டணி ஏற்பட்டபோது இப்படியில்லை. என்னைப் போன்ற மூத்த உறுப்பினர்களும் காங்கிரஸ் தலைவர்களும் ஒன்றாக உட்கார்ந்து எந்தெந்தத் தொகுதிகளில் யார் யாருக்கு வெற்றி வாய்ப்பு என்று கலந்து பேசியே ஆட்களைத் தேர்வு செய்தோம். இன்று அப்படி இல்லை. அ.தி.மு.க.வின் கட்சித் தலைமையும் சரி, காங்கிரஸ் தலைவரும் சரி, இருவரும் சந்தித்துப் பேசிக் கொள்ளாமலேயே கூட்டணி ஏற்பட்டிருக்கிறது. 'இது வரை உங்களால் குற்றம் சாட்டப்பட்ட அ.தி.மு.க.வுடன் எப்படிக் கூட்டணி வைத்துக் கொண்டீர்கள்?' என்று நிருபர்கள் கேட்டால், 'கூட்டணி ஏற்பட்டு விட்ட பிறகு அதுபற்றியெல்லாம் பார்க்கக் கூடாது; வெற்றி ஒன்றைத்தான் பார்க்க வேண்டும்' என்கிறார் குமரி அனந்தன். இது ஒரு பதிலா? மக்களுக்கு விஷயமே தெரியாதா என்ன?

"சந்தனக் கடத்தல் வீரப்பன் பேட்டி சன் டீவி.யில் ஒளிபரப்பாகப் போவது பற்றி ஒரு முன்னோட்டம் காட்டினார்கள். அதில் அவன் இந்த அரசாங்கத்தையே குற்றம் சாட்டுகிறான்! நமது போலீஸ் என்ன சொல்லுகிறது? 'அவனுடைய கூட்டாளிகளின் எண்ணிக்கையை மிகவும் குறைத்துவிட்டோம்; அவனுக்கு உணவுப் பொருள்களோ, மற்ற உதவிகளோ, எதுவுமே வெளியிலிருந்து போகாமல் தடுத்துவிட்டோம்; அவனைத் தனிமைப்படுத்தி விட்டோம்' என்று சொல்லுகிறது. ஆனால் ஒரு சாதாரண பத்திரிகையாளர், வீடியோ கேமராவுடன் அவனுடைய இருப்பிடத்திற்குச் சென்று, அவனது செயல்களைப் பல்வேறு கோணங்களில் படம் பிடித்துப் பேட்டி காண்கிறார்! இது எப்படி சாத்தியம்? அப்படியானால் நமது போலீஸ் சொல்வதை எப்படி நம்புவது? இது நான் கேட்கிற கேள்வி அல்ல; மக்கள் கேட்க மாட்டார்களா?"

"இடையில் ஒரு சின்னக் கேள்வி... தினகரன் சிறையில் அடைக்கப்பட்ட போது, அவருக்கு எல்லா வசதிகளும் செய்து தரப்பட்டது உண்மை

தானா?"

"உண்மையில்லாமலா நீங்களெல்லாம் பத்திரிகைகளில் எழுதினீர்கள்?"

"சிறைத் துறைக்கும் நீங்கள் அமைச்சராக இருந்ததால், அப்படியொரு தனி நபருக்காகச் சிறப்பு வசதிகள் செய்து தரப்பட்டதற்கு நீங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லையா?"

"இந்தச் சூழ்நிலையில் அதுபற்றி எதுவும் சொல்ல விரும்பவில்லை!"

"எதற்குக் கேட்கிறோமென்றால், நீங்கள் ஏதாவது எதிர்ப்புத் தெரிவித்திருந்தால், அதெல்லாம் கூட உங்களுக்கு சீட் தரப்படாமல் போனதற்குக் காரணமாயிருந்திருக்குமே என்றுதான்!"

"எனக்குத் தெரியாது!"

"சரி, நீங்கள் ஏன் பிரசாரத்துக்குக் கூடப் போக மறுத்து விட்டீர்கள்?"

"எந்தவிதமான குற்றச்சாட்டுக்கும் ஆளாகாத உங்களுக்கு ஏன் சீட் தரப்படவில்லை என்று நான் போகிற இடங்களிலுள்ள மக்கள் கேட்பார்களே, அதற்கு என்ன பதில் சொல்வது? 'அரசாங்க வேலைகளில் மாத்திரம் பெண்களுக்கு ஐம்பது சத இட ஒதுக்கீடு என்று உங்கள் கட்சி சொல்கிறது. ஆனால் மொத்தம் ஏழு பெண்களுக்குத்தான் தேர்தலில் போட்டியிட சீட் தரப்பட்டுள்ளது. இது கொள்கை முரண்பாடு இல்லையா?' என்று பெண்கள் வந்து கேட்டால் என்ன பதில் சொல்வது? எதற்காக இந்த தர்மசங்கடங்கள்? அதனால்தான் போகவில்லை."

"உங்கள் கட்சியைச் சேர்ந்த ஜீனத் சர்புதீன் வந்து வோட்டுக் கேட்டபோது, அடி, உதை என்றும் ஸ்டாலின் வந்து வோட்டுக் கேட்டபோது, தேனீர் கொடுத்து உபசரிப்பு என்றும் செய்திகள் வெளியானதே?"

"ஜீனத் சர்புதீன் வந்து, 'அண்ணே, நான் சேப்பாக்கம் தொகுதிதான் கேட்டேன். எனக்கு ஆயிரம் விளக்கைத் தந்துவிட்டார்கள்' என்று சொன்னார். 'அதனால் என்னம்மா...' என்று நான் சமாதானம் சொன்னேன். அதன் பிறகுதான் அவரை மற்றவர்களுக்கு அடையாளமே தெரிந்தது. உடனே தொண்டர்கள் கூச்சல் போட ஆரம்பித்துவிட்டார்கள். நான் அவரைப் பாதுகாப்பாகக் காரில் ஏற்றி வழியனுப்பி வைத்தேன். இதுதான் நடந்த உண்மை."

"ஸ்டாலினைப் பொறுத்தவரை ஒவ்வொரு முறையும் - அவர் என்னை எதிர்த்துப் போட்டியிட்ட போது கூட என் வீட்டுக்கு வந்து என் ஆதரவைக் கேட்பார். நானும் கட்சி வேறுபாடுகளைக் கடந்த நட்போடும் சகோதர உணர்வோடும் உபசரித்து அனுப்புவேன். அதுபோல்தான் இப்போதும் செய்தேன். இது ஒன்றும் புதிதல்ல."



"ஸ்டாலின் உங்கள் வீட்டுக்கு வந்து ஆதரவு கேட்பது போல், நீங்களும் கலைஞர் வீட்டுக்குச் சென்று ஆதரவு கேட்பதுண்டா?"

"இல்லை. ஸ்டாலினுக்கும் எனக்கும் இருப்பது இரண்டு சகோதரர்களுக்குள் இருக்கிற உறவு போன்றது. ஆனால் எனக்கும் கலைஞருக்கும் அப்படியல்ல. அவர் ஒரு கட்சியின் தலைவர். அந்த உறவு வேறு."

"நீங்கள் அமைச்சர் பதவியிலிருந்து விலகியிருந்தாலும் - அ.தி.மு.க.வின் மூத்த உறுப்பினர் என்கிற முறையில் இந்தத் தேர்தலில் உங்கள் கட்சியின் வெற்றி வாய்ப்பு எப்படி இருப்பதாக நினைக்கிறீர்கள்?"

"நான் அதுபற்றி ஒன்றும் சொல்ல விரும்பவில்லை."

"ஜெயலலிதா போகும் இடங்களிலெல்லாம் நல்ல கூட்டம் கூடுவதாகச் சொல்கிறார்களே?"

"கூடுகிற கூட்டம் எது; கூட்டப்படுகிற கூட்டம் எது என்பது மக்களுக்கு மிக நன்றாகவே தெரியும்."

— இளங்கோவன்,
ஸ்ரீநிவாசன்

KALKI SHOPPING PAGE

பட்டுப் புடவை உலகில் ஓர்
எளிமை! புதுமை!! சிக்கனம்!!!

உங்கள் நிறம் மங்கிய மற்றும் கறைகள் உள்ள உபயோகப்படுத்திய பட்டுப் புடவை, காட்டன் புடவை, நைலான் புடவைகளுக்கு புதிய எழில்மிகு வண்ணம் கூட்டி புதுப்பொலிவுடன் பெற்றுக்கொள்ள அணுகவும்.

போன் : 4345697

ஸ்ரீ ராம்லோக் & கோ.

74, ரங்கநாதன் தெரு, தி. நகர், சென்னை - 600 017.

பட்டுப் புடவைகள், காட்டன் புடவைகள், நைலான், பாலியஸ்டர் புடவைகள் மற்றும் கர்டன்கள், பெட்ஷீட்டுகள், ஜீன்ஸ் பேண்ட்கள், காட்டன் கர்தார்.

கேட்டுப் பெறுங்கள் எங்களுடைய
'மொபைல் சர்வீஸ்'

மேலும் எம்ப்ராய்டரி, டார்னிங், ஜரிகை பாலிஷ். Spl. ட்ரை கிளீனிங் செய்து தரப்படும்.

ADYAR
STUDENTS XEROX

Quality that is close to perfection

XEROX
LASER PRINTING
WORD PROCESSING
DTP
ELECTRONIC & MANUAL TYPING
BINDING & LAMINATION


தி க் கு வா யா ?

புதியவர்களிடம், வயதில் பெரியவர்களிடம், தொலைபேசியில், பஸ்ஸில், எதிர்பாலரிடம் பேசும் போது அதிக திக்கலா? அதிக பயமா?? தொடர்ந்து திக்கிப் பேசுவதனால் மூச்சடைப்பு, வாய், கை, கால், தலை, வயிறு போன்ற இடத்தில் வலியா? அதிக சோர்வா?

ஆறு நாட்களில் பூரண குணம் பெற

நேஷனல் திக்குவாய் சிகிச்சை நிறுவனம்

அதிக பயம், பதட்டம், மதுப்பழக்கம், கணவன்-மனைவி பிரச்சனைகள், செக்ஸ் பிரச்சனைகள், விடாத ஒற்றைத்தலை வலி, தூக்கத்தில் சிறுநீர் கழித்தல், தூக்கமின்மை போன்ற மனப் பிரச்சனைகளுக்கு உடனடி நிவாரணம்.



P. சண்முகசுந்தரம் M.A.

அணுகவும்

நேஷனல் செயற்சிகிச்சை நிறுவனம்

428, மலர்விழி காம்ப்ளக்ஸ், 100 அடி ரோடு, காந்திபுரம், கோவை - 12.
போன் : அலுவலகம் (0422) 439331, வீடு : 866176

குறிப்பு : பார்க்கும் நேரம் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை. சிகிச்சைக்கு முன் அனுமதி வேண்டும்.

KALKI SHOPPING PAGE

KALKI SHOPPING PAGE

விடுவார்.

– மலை அரசன், வேலூர்–4.

● என்னைப் பொறுத்தவரை முதல்வர் ஆகத் தகுதியானவர் மூப்பனார்தான்.

1. நேர்மையானவர். வானளாவிய ஊழல் நிச்சயம் இருக்காது.

2. திராவிட இயக்கம் தான் தமிழ்நாட்டின் தலையெழுத்து என்கிற மாயை விலகி மக்களிடையே ஒரு தெளிவு பிறக்கும்.

3. வன்முறை, அராஜகம் பெருமளவில் குறையும். போலீஸ் துறையில் அரசியல் குறுக்கீடு இருக்காது.

யார் பிரதமர்?

போட்



• மன்மோகன் சிங்




• ஜோதிபாசு



• வாஜ்பாய்



• ஹெக்டே



• நரசிம்மராவ்



• சந்திரசேகர்

யார் பிரதமர்–முதல்வர் போட்டிக்கு, வாசகர்கள் வரிந்துகட்டிக் கொண்டு, எழுதிக் குவித்து விட்டார்கள். ஆயிரக் கணக்கான கார்டுகளில் பெரும் பாலானவை பிரதமராக வாஜ்பாயியையும் முதல்வராக கருணாநிதியையும் எம்.எஸ். உதய மூர்த்தியையும் விரும்பியிருந்தன. ஆச்சர்யம், ஜெ. பற்றி மறந்தும் கூடக் குறிப்பிட்டு விடவில்லை! ஆக, ஆட்சி மாற்றத்துக்கு மக்கள் ஒரு வழியாகத் தயாராகி விட்டனர்!

பின் வரும் பத்து கடிதங்கள் தலா ரூ.100/- பரிசு பெறுகின்றன.

● *தமிழக முதல்வராக எம்.எஸ். உதயமூர்த்தி வர வேண்டும் என்று விரும்புகிறேன். காரணங்கள்:*

1. மக்களின் வரிப் பணம் முழுக்க மக்களுக்கே வந்து சேரும்.

2. கிராமங்களில் விழிப் புணர்ச்சி தீபம் ஏற்றி வைக்கப்படும்.

3. சட்டம்- ஒழுங்கு, தண்ணீர் கலக்காத பாலாக இனிக்கும்.

பிரதமராக வாஜ்பாயி வரவேண்டும். காரணங்கள்:

1. பிரச்னைகளை ஆறப் போடாமல் தீவிரமாக, சாதுர்யமாகக் கையாளுவார்.

2. மாநிலங்களுக்கிடையே பலமான உறவுக்கு வழி செய்வார்.

3. கையூட்டுக்களை சாட்டை எடுத்து விரட்டி

நரசிம்மராவே பிரதமராக இருக்கலாம் என்பேன். காரணம்:

1. வித்திடப்பட்ட பொருளாதார முன்னேற்றம், செடியாக வளரும். உலக அளவில் நம் நாட்டின் மதிப்பு உயரும்.

2. தற்போது கட்டுக்குள் இருக்கும் பிரிவினை வாதம், தீவிர வாதம் முற்றிலும் தேய்ந்து போகும்.

3. நிலையான ஆட்சி உத்தரவாதமானால், 'மௌனச் சாமியார்' வேடம் கலைந்து, நாட்டு முன்னேற்றத்துக்குச் சில தீவிரமான நடவடிக்கைகள் எடுப்பார்.

– ஆர். ராஜாராம், சென்னை –28.

● *எம்.எஸ். உதயமூர்த்தி முதல்வராக வர வேண்டும்.*

1. அரசியல் சார்பற்ற, சமூக நல அமைப்பைப் படிப்படியாக வளர்த்தவர் அவர்.

2. இதுவரை ஆண்டவர்கள், மேல் தட்டு மக்களுக்கே சாதகமாக இருந்தனர். ஆனால் இவர் ஒரு சமூக சேவகர். நடுத்தர, ஏழை மக்களுக்குத் தொண்டாற்றுபவர்.

3. பல சாதனைகள் செய்யப் போவதாக எல்லாரும் வாய்ப் பந்தல் மட்டுமே போடுகிறார்கள். இவர் ஏற்கனவே நரிமணம் எண்ணெய் ஆலை போன்றவற்றுக்குக் குரல் கொடுத்துப் பாடுபட்டவர்.

பிரதமராக வாஜ்பாயிதான் வரவேண்டும்.

1. எந்த வகை ஊழலிலும் சிக்காதவர்.

2. சிறுபான்மையினர் நலனைப் பாதுகாப்பதாகக் கூறி, பெரும்பான்மையினரை உதாசீனப்படுத்தாதவர்.

3. ஆன்மீகம், சமூகத் தொண்டில் ஈடுபாடு உண்டு. நாட்டுப்பற்று கொண்டவர்.

– ஆர். கண்ணன், ஸ்ரீரங்கம்.

● ***பிரதமராக ஜோதிபாசு தகுதியானவர். காரணங்கள்:***

1. அரசியல், நிர்வாக நுணுக்கம் அத்தனையும் தெரிந்தவர்; காட்சிக்கு எளியவர்.

2. ஊழல் நெடி நுகராதவர்.

3. கம்யூனிஸ்ட் ஆயினும், தேசிய நலன் நாடுவதில் யாருக்கும் இரண்டாம் பட்சம் அல்லாதவர்.

2. கொள்கைப் பிடிப்பு கொண்டவர். சிறந்த நிர்வாகி.

3. பழுத்த அரசியல் ஞானத்தை காமராஜரிடமிருந்து பெற்றவர்.

சந்திரசேகர் பிரதமராகலாம் என்பது என் அபிப்பிராயம்.

1. ஒரு மைனாரிட்டி அரசை வைத்தே திறமையாக நிர்வகித்தவர்.

யார் முதல்வர்?

முடிவுகள்

கருணாநிதி தான் முதல்வராக வேண்டும் என்பேன். காரணம்:

1. தமது முந்தைய ஆட்சிக் காலத்தில் நிர்வாகத்தில் தனித்துவம் காட்டிய சிந்தனையாளர்.

2. சுருக்கமாகப் பேசி, நறுக்குத் தெறித்தாற்போல ரிஸல்ட் காட்டும் 'கணிணி'த் தலைவர்.

3. 'புறங்கைத் துளிகள்' மட்டுமே சுவைத்து லேசாகக் குட்டும் பட்டவர். எனவே இம்முறை செம்மையான ஆட்சி கட்டாயம் இருக்கும்.

(Once bitten; twice shy- ஆங்கிலப் பழமொழி)

– சி. நாச்சிமுத்து, ஈரோடு - 9.

● ***பிரதமராக நரசிம்மராவையே சொல்லுவேன். காரணம்:***

1. புதிய பொருளாதாரக் கொள்கையின் பலன்கள் தடைபடாமல் கிடைக்க.

2. மற்ற எல்லோரைவிடவும் நிதானமும் ராஜதந்திரமும் உடையவர்.

3. இரண்டாம்முறை ஆட்சி தொடரும் போது புதிய பலத்துடன், ஊழல் இல்லாத அரசை நிறுவ இயலும்.

முதலமைச்சர்– கருணாநிதிதான்!

1. முதல் காரணம்– ஐயோ சாமி! ஜெயலலிதா வேண்டாம்!

2. தமிழகத்துக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று நிஜமாகவே நினைப்பவர்.

3. அதிமுகவுக்கு ஒரே மாற்று திமுகதான்!

– ஆர். வெங்கடேசன், விருத்தாசலம்.

● ***முதல்வர் –மூப்பனார்.***

1. அவர் Mr. Clean.

2. ஆட்சியில் இருந்த சில நாட்களுக்குள்ளாகவே நல்ல வளர்ச்சித் திட்டங்களுக்கு வித்திட்டவர்.

3. படாடோபம் அற்றவர். தாம் அதிகம் பேசாமல், தம்மைப் பற்றிப் பிறரைப் பேச வைத்தவர்.

– அரிச்சந்திரன், சென்னை - 90.

● ***என்னைக் கேட்டால் கோபால்சாமி முதல்வராகலாம்.***

1. அர்ஜுனன்– தூய இயல்புடையவன்– பொது வாழ்விலும் தனி வாழ்விலும்.

2. குடாகேசன் – தூக்கத்தை வென்றவர் – உழைக்கச் சலிக்காத கர்மவீரன்.

3. தனஞ்செயன் – அடைபட்டுக் கிடக்கும் செல்வத்தை வெளிக்கொணர்பவன்– மக்களிடம் மறைந்து கிடக்கும் நல்ல பண்புகளை வெளிக்கொணர்பவர்.

பிரதமர்– ராமகிருஷ்ண ஹெக்டே:

1. 'நரசிம்மராவ்தனம்' இல்லாதவர்.

2. ஆட்சியும் அதிகாரமும் மக்கள் தொண்டுக்கே என்பதை உணர்ந்தவர்.



• கருணாநிதி



• மூப்பனார்



• கோபால்சாமி



• உதயமூர்த்தி



• ப.சிதம்பரம்



• அத்வானி

3. நேர்மையாளர்; எளிமையானவர்.

– ஆர். ராம்மோகன், என். மேட்டுப்பட்டி

● **முதல்வர் – ப.சிதம்பரம்**

காரணங்கள்:

1. இளம் வயதிலேயே நல்ல அரசியல் அனுபவம் உள்ளவர்.

2. நல்ல படிப்பாளி.

3. ஊழல் செய்யாதவர்.

பிரதமர்– மன்மோகன்சிங்:

1. அரசியல்வாதி அல்ல.

2. அப்பழுக்கற்றவர்.

3. நிதி அமைச்சராக இருந்த அனுபவம் + நல்ல தீர்க்கதரிசி.

– என். பாலமுரளிகிருஷ்ணன், சென்னை – 107.

● **கருணாநிதி முதல்வராக வேண்டும். காரணம் மூன்று.**

1. சிறந்த நிர்வாகி

2. சட்ட ஒழுங்குப் பிரச்னை ஏற்படா வண்ணம் செயல்படுவார்.

3. வலிமை மிக்கத் தலைமை வகிக்கக் கூடியவர்.

பிரதமர் – ஜோதிபாசு:

1. 17 ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பி லிருந்தும் வாடகை வீட்டில் வசிக்கும் எளிமை யாளர்.

2. மதவாதத்துக்கும் ஹவாலாவுக்கும் அப்பாற்பட்டவர்.

3. நாட்டுப்பற்று மிக்கவர். பிறரது கருத்துக் களுக்கும் செவி கொடுப்பார்.

– ஆர். பாண்டியன், தேனி.

● பிரதமர் என்றால், நாடாளும் திறன் வேண் டும்; நாட்டின் நலம் கருத வேண்டும்; நாணயம் வேண்டும். எனவே சந்திரசேகர் வரவேண்டும்.

முதல்வருக்கு– குறைந்த சொல், நிறைய செயல் வேண்டும். நல்லாட்சி மலரச் செய்ய வேண்டும். ஊழலை அறைந்து அனுப்ப வேண்டும்.

மூப்பனார் தவிர வேறு யார்?

– சி.பி.ஆர். கருமாரி, ரெய்ச்சூர்.

***பி*ன்வரும் ஆறுபேர் ஆறுதல் பரிசாகத் தலா ரூ. 50 பெறுகிறார்கள்.**

● **ராவ்தான் பிரதமராகணும்.**

1. அவர் ரத்தம் 'RH' பாஸிடிவ் அல்லது 'RH' நெகடிவ் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அவர் 'H' நெகடிவ் (ஹவாலா நெகடிவ்) என்பது உண்மை.

2. அவரது ஆட்சியில் தான் நாட்டுப் பொரு ளாதாரம் சீரானது. Economics, Manmohanomics ஆனது.

3. பல பிரச்னைகளைக் கடந்தும் முழு ஐந்து வருட ஆட்சியை முடித்தவர்.

– ராமதாஸ், சென்னை – 41.

● **வாஜ்பாயி பிரதமராக வேண்டும். காரணம்:**

1. எந்த வித புகாரும் இவர் மேல் இல்லை.

2. சுயநலமில்லாத, ராஜ தந்திரமுள்ள, நேர்மையான, தேசப்பற்றுள்ள மிதவாதி.

3. மனித உரிமைகள் கமிஷனில் பாகிஸ் தானுக்கு எதிராக காஷ்மீர் பிரச்னையை வெற்றிகரமாக வாதாடியது இவரது திறமைக் குச் சான்று.

– சுதந்திரச்செல்வன், சித்தமல்லி.

● **ப. சிதம்பரம் முதல்வராக வேண்டும். காரணம்:**

1. அவர் சி.சுப்ரமணியத்தின் இந்நாள் பதிப்பு.

2. இளமையானவர். நன்கு படித்தவர்.

3. கை சுத்தமானவர்.

– வி.என். கோபால், மடிப்பாக்கம்.

● **கோபால்சாமி முதல்வராக வேண்டும் என்று விரும்புகிறேன்.**

1. ஊழல் குற்றச்சாட்டு ஏதும் இல்லை, இவர் மேல்.

2. தொண்டர்களுடன் தொண்டராகப் பழகும் எளிமையாளர்.

3. ஒழுக்கம் கடைபிடிப்பவர். கடும் உழைப்பாளி.

– ஏ. சாகுல் அமீது, திருச்சி – 13.

● **பிரதமர்– வி.பி. சிங். காரணம்:**

1. கறை படியாத கரம். கண்டிப்புக்கும் கனிவுக்கும் சொந்தக்காரர்.

2. நாட்டு நலனுக்காக, பிரதமர் பதவியையே துறந்தவர்.

3. பாரதம் பெற்ற உலகத்தரம் வாய்ந்த தலைவர்.

– முகமதுவசீம், எலந்தங்குடி.


● **அத்வானி பிரதமரானால் சிறப்பாக இருக்கும். காரணங்கள்:**

1. ஹவாலாவில் அடிபட்டாலும் பிடி படாமல் தப்பப் போகிறவர்.

2. மண்ணை நேசிக்கிற பண்பாளர்.

3. தகவல் ஒலிபரப்பு அமைச்சராக இருந்த போது, "ஆட்சிக்கும் கட்சிக்கும் வேறுபாடு உள்ளது" என்று சொல்லி டீ.வி., வானொலியில் ஆட்சியின் சாதனைகளை விளம்பரப்படுத்த மறுத்த கொள்கைப்பிடிவாதம் உள்ளவர்.

–இ.சு.பாலசுப்ரமணியம், திருவண்ணாதபுரம்.



• நவஜீவன் ஆசிரமம்

அணில் ஆக ஆசையா?

ஓட்டுச் சுவர்கள். ஓலைக் கூரைகள்: சுற்றிச் சூழ்ந்திருக்கும் சுகமான மலைத் தென்றல். ஒருபக்கம் வெங்கடாஜலபதி காவல். இன்னொரு பக்கம் அவர் தம் திருமதி காவல். திருப்பதி–திருச்சானூர் சாலையில் பஸ்ஸில் போகும் போது 'நவஜீவன் ஆசிரமம்' கண்ணில் படாமல் போகாது. கண் பார்வை இல்லாதவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் ஆசிரமம்.

'நவஜீவன் பிளைண்ட் ரிலீஃப் சென்டரை' இங்கே 1979ல் தோற்றுவித்த ஸ்ரீதர ஆச்சார்யா, காஞ்சி பரமாச்சார்யரின் பரம பக்தர். பெரியவர் சொன்னதற்காக, பார்த்துக் கொண்டிருந்த இந்திய ராணுவப் பணியை விடுத்து, இங்கே பார்வை தரும் பணியைத் தொடங்கியவர்.

எழுபத்திரண்டு பேர்கள். ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் சிறுமிகளும் ஆதரவற்றவர்களும் அநாதையானவர்களுமாகப் பார்வையற்றவர்களை அரவணைத்து, சோறிட்டு, சுகம் தந்து, மருத்துவம் பார்த்து, வாழ்வளித்துக் கொண்டிருக்கிறது 'நவஜீவன்'.

மட்டுமல்ல; நாடெங்கிலுமுள்ள ஏழை எளியவர்கள்– கண்பார்வைக் குறை உடையவர்களுக்கு, ஆயிரக் கணக்கில் காடராக்ட் ஆபரேஷன். படிப்பு, திருமண உதவி எனப் பலகாரியங்கள் இங்கே சப்தமில்லாமல் அரங்கேறி வருகின்றன!

'நவஜீவனி'ன் தலைவர் கே.எஸ். ஆசார்யா சொன்னார்... "பார்வை இல்லாமலிருப்பதை விடப் பெரிய கொடுமை வேறென்ன இருக்க முடியும்? அத்தகையோருக்கு இயன்ற உதவி செய்வதை விட வேறென்ன நல்ல காரியம் இருக்க முடியும்? ஏழை மக்களுக்காக ரூபா ஒரு கோடி செலவில் கண் வங்கியுடன் கூடிய இலவசக் கண் மருத்துவமனை ஒன்று கட்ட விருக்கிறோம், திருப்பதி அருகில். தவிர, ஆதரவற்ற முதியோர்களுக்காகக் காசியில் ஒரு முதியோர் இல்லம் அமைப்பதற்கும் திட்டம் இருக்கிறது. 'அவன்' அருள் நிறையவே இருக்கிறது. விரைவில் தொடங்கி, முடிந்து, இயங்கத் தொடங்கி விடும், இவை இரண்டும்!"

அருளுக்குக் குறைவில்லை, சரி; பொருளுக்கு?

லட்சக்கணக்கான நல்லிதயங்களின் உதவியால் தான் நவஜீவன் இயங்கி வருகிறது. மேற்சொன்ன திட்டங்களும் அத்தகைய உதவும் நெஞ்சங்களின் துணையை நம்பியே தொடங்கப் பட்டிருக்கின்றன என்றார்கள்.

ராமர் காரியம் செய்ய முடியா விட்டால் பாதகமில்லை. அட் லீஸ்ட்... அணில் காரியமாவது செய்யத் தடை இல்லையே?

உங்கள் ஞாபகத்துக்கு, இங்கே நவஜீவனின் முகவரி :

Navajeevan Blind Relief Centre,
Sapthagiri Ashram, P.O.
Tiruchanur,
Tirupathi - 517 503.



• 'காண'க் காத்திருக்கும் குழந்தைகள்...

ஒரு ஆண்டு

1%

போனஸ்

எமது ஆவடி, வேலூர், பாண்டி கிளைகள் துவங்கி 1 ஆண்டு ஆனதை முன்னிட்டு 1.3.96 முதல் 30.4.96 வரை இந்தச் சலுகை!

2 ஆண்டிற்கு மேல்

2%

போனஸ்

ரூ.10,000/- 3 ஆண்டுக்கு செலுத்தி 22% வட்டி பிரதிமாதம் பெறுவீர்

ஒருமுறை ரூ.200/- மட்டும் முதலீடு செய்து 324 மாதங்களில் ரூ.60,000/- பெறுவீர்.

ரூ.5,000/-செலுத்தி 36 மாதங்களுக்கு பிறகு ரூ.9,070/- பெறுவீர்

நீங்கள் எந்த பொருள் ரூ.5,000/-க்கு வாங்கினால் ரூ.100/-மட்டும் ஒரு முறை டெபாசிட் செய்து 240 மாதங்களுக்கு பிறகு ரூ.6,400/-ஆக பெறுவீர்.

ரூ.1,000/- செலுத்தி 180 மாதங்களுக்கு பிறகு ரூ.17,600/- பெறுவீர்.

18% P.A. உடனடி வட்டி!

ரூ.10,000/-மும் அதற்கு மேலும் 1 ஆண்டுக்கு டெப்பாசிட் செய்து 1 ஆண்டு வட்டி உடனடியாக பெறுவீர்.

இன்று உங்கள் பணத்தை முதலீடு செய்து இரு மடங்காக 40 மாதங்களில் பெறுவீர்.

ஒரே ஒருமுறை ரூ.1000/- திருமாங்கல்ய திருமணத்திட்டத்தில் டெபாசிட் செய்து 240 மாதங்களில் கழித்து ரூ.64,000/- பெறலாம்.

ரூ.50,000/- 60 மாதங்கள் முடிந்தவுடன் ரூ.1,50,000/- பெறுங்கள். போனஸ் தனி

சசிநாத் சாஸ்வத நிதி லிமிடெட்

H.O.36, ரங்கநாதன் தெரு, சென்னை-17. Ph: 4348233, 4346786
B.O.35, M.C. ரோடு சென்னை-21. ● 205, N.M. ரோடு, ஆவடி, சென்னை-54. ● 34-C ரயில்வே ரோடு, காஞ்சிபுரம்-631 502. ● 56, கடப்பா டிரங்ரோடு, திருத்தணி-631 209. ● 38, ஆற்காடு சாலை, வேலூர்-632 004. ● 161 S.V. பட்டேல் தெரு, பாண்டி - 605 001.

மக்கள் சேவையில் 18 ஆண்டு

சசிநாத்துடன் இணைவோம் சௌக்கியமாக வாழ்வோம்.

சேவா தேவிகள் பங்குதாரர்களுக்கு மட்டும் ● செவ்வாய் விடுமுறை.

சத்தியம் சீலம் தர்மம் நாணயம் இதுதான் சசிநாத்

சத்தியம் சீலம் நாணயம் தர்மம் இதுதான் சசிநாத்

வானொலி வழி வந்த அலை ஓசை!

சென்னையில் அரசியல் அலை கொந்தளித்துக் கொண்டிருந்த ஏப்ரல் முதல் தேதி.... அமைதியாக ஓர் இலக்கியச் சிற்றலை வீசி 'கல்கி' ரசிகர்களை சிந்தனையிலும் மகிழ்ச்சியிலும் ஆழ்த்தியது. அமரர் கல்கியின் அலை ஓசை நாவலை, சென்னை வானொலி நிலையம் தொடர் நிகழ்ச்சியாக வழங்கி நிறைவு செய்ததைச் சிறப்பிக்க நடத்தப்பட்டது ஒரு சிறிய பாராட்டு விழா.

"ரேடியோ கேட்டுக் கொண்டே கார் ஓட்டலாம், ஆனால் டீ.வி. பார்த்தபடி கார் ஓட்டினால் என்னாகும்...!'' என்று வானொலியின் சௌகரியங்களை எடுத்துச் சொன்னார் தலைமையேற்ற ஏ.வி.எம். சரவணன்.

"அவசர யுகத்தில் இளைய தலைமுறைக்கு 'அலை ஓசை' போன்ற பிரும்மாண்ட நாவலை வானொலி மூலம் அறிமுகப்படுத்தியது ஓர் அரிய சேவை" என்று சுட்டிக்காட்டினார் லேனா தமிழ்வாணன்.

'கல்கி'யின் எழுத்துக்களுடைய ஜீவனே அவரது நகைச்சுவை உணர்வுதான் என்று பேசினார் சாவி. அலை ஓசையிலும் நாலிழையாக அவ்வுணர்வு ஓடுவதைக் கூறி வானொலியின் நூதன முயற்சிகள் தொடர வாழ்த்தினார்.

சாவியின் உரை சிரிக்க சிரிக்க அமைந்திருந்தது எனில், வானொலி நிகழ்ச்சியில் பங்கேற்ற கலைஞர்களின் சார்பில் பேசிய வி.எஸ். ராகவனின் உரையோ நெகிழ்த்தியது. இதைப் போன்ற ஒரு நீண்ட நெடுங்கால நிகழ்ச்சியினால் தம்மைப் போன்ற பல எளிய கலைஞர்களுக்குக் கிடைக்கக் கூடிய வருமானம் மிகவும் முக்கியமானது, அவசியமானது என்று இவர் தெரிவித்த போது மனம் கசிந்தது.

வானொலி நிகழ்ச்சியில் பங்கேற்ற அத்தனை கலைஞர்களும் 'கல்கி' அன்பர்கள் சிலரும் விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். அனைவரையும் வரவேற்றுப் பேசிய கி.ராஜேந்திரன், 'அலை ஓசை' வானொலி வடிவத்தை காஸெட்டுகளாக வெளியிடும் யோசனையை தலைமை வகித்த ஏ.வி.எம் சரவணனின் முன் வைத்தார்.

சென்னை வானொலி நிலைய இயக்குனர் விஜய திருவேங்கடம் பேசியபோது, அந்த யோசனைக்கு வானொலி தரப்பிலும் ஒத்துழைப்பு கிடைக்கும் என்பதற்கான நம்பிக்கை ஒலித்தது.

அலை ஓசை வானொலி வடிவம் பெற்றதன் சுவையான பின்னணியையும் விளக்கினார் திருவேங்கடம் :



• சிறப்புரை ஆற்றிய பிரமுகர்களுடன் கலைஞர்கள்

அனைத்திந்திய அளவில் ஒரு சிறந்த நாவலைத் தேர்ந்தெடுத்து அதை நாடகப் பாணியில் படிக்கச் செய்யும் திட்டத்துக்கு மூன்று லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது. பல நாவல்கள் பரிசீலிக்கப்பட்டு அமரர் கல்கியின் அலை ஓசை தேர்வானது.

சென்னை வானொலி நிலைய கலைஞர்களும் வி.எஸ். ராகவன், பூர்ணம் விஸ்வநாதன் முதலான நாடகத் துறை அனுபவஸ்தர்களும் இணைந்து நிகழ்ச்சியைச் சிறக்கச் செய்தார்கள். தொழில்நுட்ப கலைஞர்கள் உள்பட ஒவ்வொருவரும் சிரத்தையுடனும் அர்ப்பணிப்பு உணர்வுடனும் உழைத்தனர். எனினும், அனைவரது பணியையும் சுலபமாக்கியவர் நாவலை எழுதிய அமரர் கல்கி அவர்கள் தான்- கதாபாத்திரங்களின் உயிரோட்டமும் நாவல் களத்தின் நிஜத்தன்மையும், சரித்திர நிகழ்வுகளின் பின்னலும் அதைப் படிக்கவும் கேட்கவும் ஏற்றதொரு கலைப் பொக்கிஷமாக்கியிருக்கின்றன என்பதை விளக்கினார் திருவேங்கடம்.

அலை ஓசையை ஒலிபரப்ப வெள்ளிக் கிழமையைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணத்தை அவர் வெளியிட்டபோது சிலிர்த்துப் போனோம்.

"காந்திஜி மறைந்த நாள் முதலாக வெள்ளியன்று காந்தி அஞ்சலி நிகழ்ச்சி ஒலிபரப்பாகி வருகிறது. அந்த நிகழ்ச்சி நேரத்தையொட்டியே மற்றுமொரு காந்தி அஞ்சலியாக அலை ஓசை ஒலிக்க வேண்டும் என்பதே நோக்கம்..'' என்றார் அவர்.

இந்த இலட்சிய நோக்கின் வலிமைச் சிறப்பு 112 வாரங்களும் நிகழ்ச்சிக்கு மெருகூட்டியதில் ஆச்சரியமில்லையே..!

- சீதா ரவி.

படம் : யோகா

எதிர்பார்த்தல்

நா.கௌதமன்

பஸ் நிழற்குடையின் தூர்ந்த சுவரில் உட்கார்ந்திருந்த நாகப்ப சேர்வைக்கு புஸ் புஸ்ஸென்று ரசனையோடு புகை விட்டுக் கொண்டிருந்த அந்த இளைஞனைப் பார்த்து மனசு பத்தி எரிந்தது. 'பாவிப்பய... குடிக்க ஒரு பீடித்துண்டுகூட இல்லாம வயித்தெரிச்சலில் இருக்கும் போது...'

சட்டென்று ஒக்கூர் பஸ் வந்து நிற்க, சிகரெட் புகைத்தவன் பாதியோடு விட்டெறிந்துவிட்டு பஸ்ஸில் புகுந்தான்.

எடு...எடு என்று கை பரபரத்தது. ம்கூம்... அருகில் சென்று மெல்ல குனிந்தார். கால்வாசி மட்டுமே கரைந்திருந்த சிகரெட்டிலிருந்து வந்த புகை 'என்னை முழுசாய் இழேன்' என்பது போலிருந்தது.

ஆசை தீர ஒரே இழுப்பு... புகையை உள்ளே இழுக்க, குளிரில் நடுங்கிய உடம்புக்கு இதமாகத் தோன்றியது.

ம்ம்... இருளாயி இருந்திருந்தா இப்படியெல்லாம் தெருவில நிக்க வேண்டியிருந்திருக்குமா... பெருமூச்சு மெல்ல வெளிப்பட்டது.

அப்போதெல்லாம் நாகப்ப சேர்வைக்கு சோழபுரம் கிராமத்தில் தனி மரியாதை உண்டு. இராமனாதபுரத்திலிருந்து பர்மாவுக்குப் பஞ்சம் பொழைக்கப் போனவர்களில் அவரும் ஒருவர். ரெண்டு வருஷத்துக்கு ஒரு தடவை ஊருக்கு சில்க் ஜிப்பா, காதில் கடுக்கன் சகிதம் வந்து இறங்கும்போதே எல்லோரையும் இளப்பமாக ஒரு பார்வை பார்ப்பார். அவர் ஊரிலிருக்கிற ஒரு மாதமும் சரி; இருளாயியையும் ஒத்த மகன் பாண்டியையும் ரேக்ளா வண்டியில் ஏற்றிக் கொண்டு தினமும் சிவகெங்கை போயி வர்றதுல அவருக்கு ஒரு பெருமையே உண்டு.

பலா மரம் காச்சாப்புல சில்க் ஜிப்பா ரெண்டு பக்கமும் வீங்கித் தொங்கும். வலப்பக்கம் பணமும் இடப் பக்கத்தில் பர்மா சுருட்டுமா நெறைந்திருக்கும். தினமும் ஊருணிக்கு வெளிய போகும் போது ஒரு சுருட்ட எடுத்துப் பத்த வைச்சுட்டு, சுருள் சுருளா வாயிலும் மூக்கிலும் புகை விடுவார். நாலஞ்சு இளவட்டங்கள் கூட பொறாமையுடன் மெல்ல விசாரித்தார்கள்.

"ஏஞ் சேர்வ, எப்படி இப்படி மூக்கில வளையம் வளையமா புகைக்குறீங்க?"

கேள்வி கேட்டவர்களை 'போங்கடா பொடிசுகளா' என்பது போல் பார்த்து விட்டு, வீராப்போடு நடப்பார். எப்படியும் ஒரு நாளைக்கு பத்து சுருட்டாவது தீர்த்தாகணும். சுருட்டுகளை ஒன்றாகச் சுற்றியிருக்கும் பர்மா பெண் போட்ட தாளை, மெல்ல கிழியாமல் எடுத்து, ஆசையுடன், யாருக்கும் தெரியாமல் ஜிப்பாவில் மடித்து வைத்துக் கொள்வார். அதை அடிக்கடி எடுத்துப் பார்ப்பதில் ஒரு தனி ருசி... 'இருளாயிக்கு இந்த மாதிரி கொண்டை போட்டு, ஆடை கட்டினால் எப்படியிருக்கு'மென்று யோசித்து நமுட்டுச் சிரிப்பு சிரித்துக் கொள்வார்.

பர்மாவில் அவருக்கு சேர்ப்பு உண்டு என்று கூட ஊருக்குள் ஒரு பேச்சு இருந்தது. இருளாயி கூட ஒரு தடவை ஒப்பாரியோடு கேட்டு விட்டாள்.

"உனக்கெல்லாம் பதில் சொல்லணும்னு அவசியமில்ல!" - நறுக்குத் தெறித்தாற்போல் பதில் வந்தவுடன் அதற்கு மேல் அவ

ளும் கேட்கவில்லை. அவர் ஒவ்வொரு தடவை ஊருக்கு வரும்போது கணக்குப்பிள்ளை மாதவன், தலையாரி சண்முகம், துப்பாக்கிகாரர் வீரய்யா எல்லாம் குழுமி ராவும் பகலுமா சீட்டாடியபோதும் சரி, சீமைச் சரக்கை ஊத்திக்கிட்ட போதும் எதுவுமே அவள் வாய் திறக்கவில்லை. அவ இருந்த வரைக்கும் சாப்பாடு சவரட்டுணையிலும் சரி, எண்ணெய் தேய்ச்சு குளிப்பாட்டுறதுலயும் சரி; எந்தக் குறையும் வச்சதில்ல. அவனோட எல்லாமே போச்சு... ம்கூம்...

“ஏம் மாம... மதுரையில்தான் உம் மகன், மருமக, பேத்தியெல்லாம் இருக்காகல்ல... பேசாம அங்க போயிற வேண்டியது தானே?”

எச்சில் சிகரெட்டை ஆசையுடன் இழுத்துக் கொண்டிருந்தவரை முந்திரிப் பழம் வைத்திருந்த கூடைக்காரி கேட்டாள்.

“இந்த ஊர்ல கெடந்து ஏன் நோகுற?” சொன்னவளை தீர்க்கமாக, புழுவைப் பார்ப்பது போல ஒரு பார்வை. அர்த்தம் புரிந்து விருட்டென்று நடந்தாள். ‘திமிர் புடிச்ச கெழவன்... அப்புறம் என்னாத்துக்கு இங்கயே ஒக்காந்து கெடக்கணும்?’

மகனும் மருமகளும் இருந்த வரைக்கும் கூட ஏதோ நல்லாத்தானிருந்தது. மருமகளுடன் அதிகம் சீராடிய தில்லை. சின்னக் குட்டி பேத்தியைப் பார்க்கும் போது மட்டும் அன்னி முடிஞ்சு,





'ராம் காஷ்யப்' கொடுத்த வாய்ப்பான 'மாமியார் மெச்சிய மருமகள்' மற்றும் 'மருமகள் மெச்சிய மாமியார்' கட்டுரைப் போட்டியில் பங்கெடுத்துக் கொண்டு ஏராளமான மாமியார்களும், மருமகள்களும் ஒருவரையொருவர் மெச்சிப் பாராட்டியிருப்பது ஒரு வித்தியாசமான அரிய அனுபவம். அவர்களது அனுபவங்கள்தான் எத்தனையெத்தனை!

ராம் காஷ்யப், இத்தகைய நல்லதொரு குடும்பத்தினரிடையே தனது உறவு வளர்வதையெண்ணிப் பூரிப்பும் பெருமிதமும் அடைகிறது. ஏனெனில் ராம் காஷ்யப்பும் நம்பிக்கை, நேர்மை, நாணயம் என்பவற்றைத் தனது அடிப்படைப் பண்புகளாகக் கொண்டு, ஒரு வரவேற்கத்தக்க ஆரோக்கியமான மாற்றாக உருவாகியுள்ளதல்லவா?

'ராம் காஷ்யப்' மொத்தம் 116 பரிசுகளை அறிவித்திருந்தது. போட்டியில் ஏராளமானவர்கள் பங்கேற்றனர். ஒவ்வொரு அனுபவமும் வித்தியாசமானது. பரிசுபெற்ற அதிர்ஷ்டசாலிகளுக்கு எங்களது வாழ்த்துக்கள்.

Ram Kaashyap

Chits Private Limited

Member Ram Kaashyap Group

ஈடில்லா சேமிப்பு; இணையற்ற தேர்வு

பதிவு அலுவலகம் : 53, பிஷப் கார்டன், (கிரீன்வேஸ் ரோடு அருகில்)
சென்னை 600 028. போன் : 4936931, 4936932.

தமிழ் புத்தாண்டு சீட்டு சேகரிப்பு விழா 1996, ஏப்ரல் 3 முதல் 13 வரை

Insight-195

மருமகள் மெச்சிய மாமியார்



உறவின் வலிமை – உரைப்போம் உலகுக்கு

எங்களது மிகச் சிறிய குடும்பம் – நான், என் கணவர், எம்.பி.ஏ படிக்கும் என் மகன் ராஜா, என் அத்தை (மாமியார்). என் கணவர் எங்கள் குடும்பத் தொழிலையே நிர்வாகம் செய்து கொண்டிருந்தார்.

குடும்பத் தொழில் என்றால் – சமையல் மசாலாப் பொடிகள் தயாரிப்புதான். நூற்றுக்கணக்கான் தொழிலாளர்கள் எங்களிடம் வேலை செய்து கொண்டிருந்தார்கள். எல்லாமே ஆட்கள் வைத்துச் செய்ததால் அவர்கள் 'கை மணமும்' சேர்ந்ததால், எங்கள் பாக்கெட்டுகளுக்கு எங்கள் பகுதியில் நல்ல டிமாண்ட். 'வீட்டிலே தயாரிக்கிற மாதிரியே இருக்கு' என்ற நல்ல பெயரையும் எங்கள் தயாரிப்புகள் பெற்றிருந்தன.

என் பையன் விடுமுறைக்கு வரும்பொழுதெல்லாம் அப்பாவிடம் "அப்பா... நம்ப தொழிலை நவீனப்படுத்தி, மிஷின்போட்டுச் செய்தால் உற்பத்தியும், லாபமும் பெருகும்" என்று வாதாடுவான். என் கணவர் பதில் சொல்லுமுன், என் மாமியாரே அவர் பேரனுக்குப் பதில் சொல்லுவார், 'ராஜாப் பயலே... இது உங்க 'ஐயா'வோட தொழில், 'மிஷின் போடுறேன்' அப்படியிப்படின்னு போனா நம்ம கிட்ட வேலை பார்க்குறவங்க கதி... நமக்கு எதுக்குடா கண்ணு அதிக இலாபம்" என்பார்.

வெளிநாட்டில் சம்பாதித்து, இங்கு செட்டிலான எங்கள் பகுதிக்காரர் இதே மசாலாத் தொழில்ல நவீன முறையில், அதிக முதலீட்டில் செய்யப் போகிறார் என்று கேள்விப்பட்டோம். என் கணவர் கலங்கிப்போனார்.

என் மாமியாருக்கும் கவலைதான், என்றாலும் அவருக்கு ஒரே ஒரு சந்தேகம். 'எத்தனையோ தொழில்கள் இருக்க அந்தப் பணக்காரர் எங்கள் தொழிலையே தேர்ந்தெடுக்கக் காரணம்? விசாரித்ததில் எங்களின் வளர்ச்சியில் பொறாமைகொண்ட யாரோ சிலர் அவரைத் தூண்டிவிட்டிருக்கிறார்கள். அவரும் தொழிலைப் பற்றித் தெரியாமலே 'காலை' விட்டிருக்கிறார் என்பதும் தெரிந்தது. ஓரிரு நாட்கள் தீவிரமாகச் சிந்தித்த என் மாமியார் என் கணவரையும், என்னையும் கூப்பிட்டார். 'நம்ப தொழிலையும், நம்ப ஆட்களையும் காப்பாத்த ஒரே வழிதான் இருக்கு... என் மகன் எனக்குக் கட்டுப்பட்டவன். ஏம்மா மருமகளே, நீயும் உன் பிள்ளையும் தான் முடிவு சொல்லணும்" என்று சஸ்பென்ஸ் வைத்தார். "அத்தை... நாங்களும் உங்களுக்குக் கட்டுப்பட்டவங்கதான்" என்று தழுதழுத்த குரலில் சொன்னேன்.

"அந்த பெரியவருக்கு கல்யாணத்திற்கு ஒரு பெண் இருக்கிறதாகக் கேள்விப்பட்டேன்... நம்ப ராஜாவுக்கு அந்தப் பெண்ணைப் பண்ணிக்கிறோம்'னு போய்க் கேளுங்க... நம்ப சாதி சனம் இல்லையேனு நினைக்காதீங்க... இந்தக் காலத்திலே இதையெல்லாம் யார் பார்க்கிறாங்க... அவரும் வெளிநாட்டிலேயே இருந்தவர்ங்கிறதினாலே பொருட்படுத்த மாட்டார்... ஆண்டவன் மேலே பாரத்தைப் போட்டுட்டு, முயற்சி செய்யுங்க... நல்லதை நினைக்கிறதாலே, நல்லதே நடக்கும்'

நல்லதே நடந்தது; என் பிள்ளைக்கும், அந்த பெண்ணுக்கும் திருமணம் நடந்தது. சம்பந்திகளானபின் ஏது தொழில்போட்டி? பழைய மனுஷியான என் மாமியார் எடுத்த புதுமையான முடிவு எதிர்பாராது வந்த சிக்கலைத் தீர்த்து வைத்த மாயம் கண்டு இன்றும் வியப்படைகிறேன்.

A. உமாசுந்தரி
அரசு இல்லம், தென்மாப்பட்டு,
திருப்பத்தூர் 630 211, பசும்பொன் மாவட்டம்.

காது வளர்த்த இருளாயி நிக்கறது போலத் தோணும்.

"ஏ குட்டி, உங்க ஆத்தாட்டப் போயி கஞ்சி வாங்கிட்டு வா."

பேத்தியை மெல்ல இழுத்து மூக்கோடு மூக்கை உரசுவார். மகன் பாண்டி சின்னப் பயலா இருக்கும்போது கூட இப்படி கொஞ் சியதாக நெனைப்பில்லை.

எல்லாம் நல்லாத்தான் போயிட்டுருந்தது செம்மரியாடு வாங்கும் வரை.

"ஏங்க, ங்கொப்புச்சி சும்மாதானே வீட்ல இருக்காக? நாந்தான் தெனமும் ஆட்ட கட்டக் காட்டுக்கு ஓட்டி மேக்கணுமா? வெரசா வந்து ரவைக்கு சுடு கஞ்சி வேற காய்ச்சிக் கொடுக் கணும். இல்லையின்னா அவுகளுக்கு தொண் டையில இறங்காது..." மகனிடம் மருமகள் பேசிக் கொண்டிருந்தது காதில் விழ, வந்தது வினை. நாகப்ப சேர்வைக்கு மூக்குல மிளகாய அரச்சுத் தடவுன மாதிரி கோபம் கன்னென்று உச்சிக்கு ஏறியது.

"பிச்சக்காரப் பயமக என்னடா பேசறா அங்க? என்னா மயித்துக்கு நா ஆடு மேய்க்கப் போணும்? என் வீடு... என் நெலம். நா ஒக் காந்துதான் தின்பேன்! பிடிக்கலைன்னா வெளியில போச் சொல்லு."

ராவெல்லாம் மெல்லிய அழுகையும், மூக் கைச் சிந்துவதும் சமாதானப் படுத்துவதும் கேட்டது. 'எனக்கென்ன' என்பதுபோல் கயித்துக் கட்டிலில் சொகமாகத் தூங்கினார்.

"அப்புச்சி, நா மதுரக்கு செல்லம்மா வோட ஊருக்கு போயிரலாம்னுருக்கேன். சின்னக் குட்டி வேற அவுக அம்மாச்சியிட் டருந்து பள்ளிக்கூடம் போக வசதியாருக்கும். கட்டக்காட்டு புஞ்ச வேற மழையில்லாம ரெண்டு வருசமா காஞ்சு கெடக்கு"- காலை யில் எழுந்தவுடன் கரத்தில்லாமல் பாண்டி காரணங்களை அடுக்கினான்.

'போனால் போ' என்பது போல துண்டை முகத்தில் உதறிவிட்டு மணியக்காரர் வீட்டை நோக்கி நடந்தார். ஏதாவது சமாதானம் சொல் லுவாருன்னு எதிர்பார்த்த மகனையும், ஏக்க மாய்ப் பார்த்த சின்னக் குட்டியையும் கூடத் திரும்பிப் பார்க்கவில்லை.

கீற்றுக் கொட்டகையில் கட்டியிருந்த ஆடுகள் தீனியில்லாமல் பசியில் கத்தின. ஆட்டுப் புழுக்கையைக்கூட சுத்தம் பண்ண சோம்பேறித்தனமாயிருந்தது. ஏதாவது காரமா திங்கக் கெடக்குமாவென்று அஞ்சாரப் பெட் டியைக் கூடக் குடைந்துவிட்டார். ரெண்டு நாள் எப்படியோ பழைய கம்மங் கூழில் உப்பைப் போட்டு முழுங்கினார். மூணாம் நாள் ஊசிப் போன வாடை... சூடு வேறு இல்லாமல் தொண் டையில் இறங்க மறுத்து. த்தூ... கலயத்தைத் தூக்கி எறிந்தார்.

துப்பாக்கிக்காரர் வீரைய்யா வீட்டுக்குப் போனாலாவது ஏதாவது சூடா கெடைக்கும். வேணாம்... பரவால்ல... சொந்தக்காரந்தானே இருளாயி இருந்தப்ப எல்லாருக்கும் எத்தன தடவ பொங்கிப் போட்டிருப்பா.

மதியம் கன்னென்று வெயிலடிக்கும் போது சாப்பாட்டு வேளையில் வீரைய்யா வீட் டுத் திண்ணையில் போய் உட்கார்ந்தார்.

"வாங்கண்ணே."

வீரைய்யாவின் சம்சாரம் கொஞ்ச நேரங் கழித்து ரெண்டு வட்டிலில் சுடு கஞ்சி ஊற்றி விளிம்பில் கானப் பருப்புத் துவையலை வைத் துக் கொண்டு வீரையாவுக்கும் அவருக்கும் கொண்டு வந்தாள்.

கஞ்சியை சர்ரென்று சப்தத்துடன் உறிஞ்சி துவையலை நடு விரலில் தொட்டு நாக்கில் வைத்து சப்புக் கொட்டினார். கருமம்... இத



• தென்கச்சி

"ஒரு நாள் எங்க தெருவுக்கு மூணு பேர் வந்தாங்க. ஒருத்தர் தெருவோரத்துல மணல் இருக்கற பக்கமா 10 அடிக்கு ஒரு மார்க் போட்டுக்கிட்டே போனார். அடுத்த ஆள் அந்த மார்க் பண்ணின இடத்துல எல்லாம் இரண்டு அடிக்கு குழி வெட்டிட்டே போனார். மூணாவது ஆள் அந்த குழில எல்லாம் பக்கத்துல இருந்த மணலைப் போட்டு மூடிக்கிட்டு இருந்தார்.

"எனக்கு இந்தச் செயல் பைத்தியக்காரத்தனமா இருந்தது. குழியை மூடிக்கிட் டிருந்த ஆள்ட்டப் போய் விளக்கம் கேட்டேன். அதுக்கு அவர், 'சார் நாங்க ஃபாரஸ்ட் டிபார்ட்மெண்ட். சாலையை அழகு படுத்தறத்துக்காக செடிகளை நடப் போறோம். முதல் ஆள் மார்க் செஞ்ச இடத்துல ரெண்டாவது ஆள் குழி வெட்டினார். அந்த குழில மூணாவது ஆள் செடியை நடணும். ஆனா, அந்த ஆள் இன்னிக்கு வேலைக்கு வரல. ஆனா அதுக்காக நாலாவது ஆளான நான் எனக்கு சொன்ன வேலையை செய்யாம இருக்க முடியுமா. அதான் நான் குழியை மூடிக்கிட்டிருக்கேன்' என்று சொல்லிக் கொண்டே அடுத்த குழியை மூடச் சென்றார்!"

மடிப்பாக்கத்தில் நடைபெற்ற 'பாரதி இயக்கம்' துவக்க விழாவில், தென்கச்சி கோ. சுவாமிநாதன் பேசியது.


-மடிப்பாக்கம் வெங்கட்

எப்படித்தான் திங்கறானோ... இருளாயியும் சரி, மருமகளுஞ் சரி. வயக்காட்டுக்கு பாச்சற கம்மாத் தண்ணியிலருந்தாவது நாலு அயிரையையோ இல்ல வெளிச்சியையோ புடிச்சி கொழம்பு வைத்துக் கொடுப்பார்கள். பழய கஞ்சிக் குன்னாலும் அவருக்கு தொட்டுக்க கவுச்சி இருந்தேயாகணும்.

என்னத்தையோ! காஞ்ச வயித்துக்குத் தானே... கண்ணை மூடிக் கொண்டு முழுங்கினார். ஒரியில் ஒன்னும் சாப்பிடலயென்று இரண்டு ஆட்டை வீரைய்யா வீட்டில் கட்டியாயிற்று. மூணு வாரம் இந்தா அந்தாவென்று எப்படியோ ஓட்டியாயிற்று. கடைசியில் வீரைய்யாவே வீடு தேடி வந்து அரசல் புரசலாகச் சொல்லி விட்டார்.

"ஏம் மாப்ள, உந்தங்கச்சிக்கும் ஒடம்பு ரொம்ப கெட்டுப் போச்சு.... ஒன்னும் சமக்கல. நானும் பழய கூழுத்தான் குடிக்கணும் போலருக்கு..." சொல்லச் சொல்ல, கேட்காதது போல் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

பொச கெட்ட பய.. இவன் வீட்டுப் பக்கம் இனி காலே எடுத்து வக்கக் கூடாது.



"யாருய்யா கான்டீன் போர்டை இப்படி நகர்த்தி வைச்சது...?"

— அகில்

வீம்பா மூன்று நாள் கருப்பையா டீக் கடையில் கழனித் தண்ணி மாதிரியிருந்த டீயையும் சியத்தையும் கணக்குப் பிள்ளையிடம் காசைத் திருப்பித் தருவதாகச் சொல்லி ஓட்டியாயிற்று. வயிறு எரிச்சலெடுத்து புளிப்பாக எருக்களித்தது. எல்லோரும் இளக்காரமாகப் பார்ப்பது போலவும் இளவட்டங்கள் மதிக்காமல் வளையம் வளையமாகப் புகை விடுவது போலவும் தோன்றியது.

பொறுக்குத் தின்னிப் பயலுக... பெரிய இவங்கன்னு நெனப்பு... நேத்து வரைக்கும் ஒதுங்கிப் போனவங்க... யாருமே தன்னை மதிக்கலியோ... இப்போதெல்லாம் சுர்ரென்று கோபம் ஏறும்போது பஸ் நிழற்குடையின் உடைந்த கைப்பிடிச் சுவரில் உட்கார்ந்து சிவகெங்கை நோக்கி புழுதியைக் கிளப்பிக்கிட்டு போகும் பஸ்ஸுகளை வேடிக்கை பார்த்துக் கொண்டே உட்கார ஆரம்பித்தார். 'ஒன்னாவது நிக்காதா' என்பதுபோல் நெஞ்சு ஏங்கித் தவித்தது.

'யார எதிர்பாத்து ஒக்காந்திருக்கு கெழடு' என்று பார்த்தவர்களெல்லாம் முணுமுணுத்தார்கள்.

ஏன் இப்பலாம் நெதமும் இப்படி ஒரு நெனப்பு.. யார எதிர்பாக்குது மனசு? யோசித்துக் கொண்டிருக்கையிலேயே புழுதி பின் தொடர வந்து நின்ற பஸ், நெனைப்பை கலைத்தது.


பஸ்ஸிலிருந்து இறங்குற ஒவ்வொருத்தரையும் நெஞ்சு அடிக்கப் பார்த்தார். இன்னாரத்தான் எதிர்பார்க்குறோமென்று தோணவில்லை. நாட்ரசங்கோட்டை சந்தைக்கு போயிட்டு ஓலைப் பெட்டியோட கண்டாங்கிச் சேலையில் இறங்குவாளே, இருளாயி! அவளயா... அவதான் போய்ட்டாளே! ஒரு வேள பாண்டிப் பயலயோ... சீச்சி, பொண்டாட்டி முந்தானையைப் புடிச்சுட்டு ஓடினவனையா எதிர்பாக்குது? இல்ல இல்ல... பேத்தி சின்னக் குட்டியைத்தான் மனச்சாட்சி ஆமோதித்தது. கூடாது... கோபம் எகிறியது.

'இப்படி மானங்கெட்டு கெடக்குறதுக்கு பாழாப் போன ஜப்பான் யுத்தத்தில் ஓடியா ராம பர்மாவிலயே கெடந்து செத்திருக்கலாம்.'

கோபம் அடங்கவில்லை.

த்தூ... எச்சியையும், கையைச் சுட்ட எச்சில் சிகரெட் துண்டையும் காறித் துப்பிவிட்டு மீதமிருந்த ஒரு ஆட்டு நினைவுடன் தலையாரி வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

சித்திரை திருவிழா சிறப்பு பரிசுகள்



எஸ்ஸம்மாரின்

சித்திரை
திருவிழா கால சீட்டு குழுவில்
ஏப்ரல் 1 முதல் 30 தேதிக்குள்
சேருபவர்களுக்கு வழக்கமான பரிசுகள்
மற்றும் அதிர்ஷ்டசாலிகளுக்கு
சிறப்பு பம்பர் பரிசுகள்.

உடன் அருகில் உள்ள எஸ்ஸம்மாரின்
கிளைகள் அல்லது எங்களது முகவர்களை
தொடர்பு கொள்ளுங்கள்.

தவணைத் தொகை ரூபாய்	சீட்டு காலம்	சீட்டுத் தொகை மதிப்பு
500	20	10,000
1,250	20	25,000
1,000	50	50,000
2,500	20	50,000
5,000	20	1,00,000
12,000	25	3,00,000

ஏலத் தொகை உச்ச வரம்பு 30%

ESEMAR CHITS (MADRAS) PVT. LTD.

5-A, Poes Road, Off. Eldams Road, Madras-600 018.
✆: 451462, 455936

BRANCHES:

ARAKKONAM
271, Mosur Road
First Floor
Arakkonam-631 001
Ph: 22882

MADIPAKKAM
1, Medavakkam Road
Madipakkam Koot Road
Madras-600 091
Ph: 2342869

THIRUVOTTIYUR
802/5, T.H.Road
Thiruvottiyur Market
Madras-600 019
Ph: 544828

GROW WITH ESEMAR CONFIDENTLY

அந்தி மந்தாரை

பாரதிராஜாவின் அந்திமந்தாரை, அவரது மற்ற படங்களிலிருந்து மிகவும் மாறுபட்டு இருக்கிறது. அவரது வழக்கமான டூயட், வெள்ளுடை தேவதைகள் ஊர்வலம், கடைந்தெடுத்த தெற்கத்திய பாஷை எதுவும் இல்லை. மோதிர விரல் தெரிய, இனிய தமிழ் மக்களைக் கூப்பிட்டு அஞ்சு நிமிஷம் உரையாற்றும் ஆரம்பம் கூட இல்லை. மிக நேரடியாகக் கதைக்கு வந்து விடுகிறார்.

மூன்று தளங்களில் இயங்குகிற கதை. தம்பி மகன் வீட்டில் அண்டி வாழ்கிற சுபோராட்டத் தியாகியின் சிரமங்கள் ஒரு பகுதி. மருமகள் சங்கவியின் அடாவடித்தனம், பதில் ஏதும் பேச இயலாத இயலாமை, மனைவி தாசனான தம்பி மகன். (சுதாங்கன், நடிப்பெல்லாம் ஏன் சார்?)

தியாகியின் ஃப்ளாஷ் பேக்கில் அவர் ஒரு தீவிரவாதி. குண்டு வெடிப்பு வழக்கிலெல்லாம் சிக்கி, அந்தமானில் களி சாப்பிட்டவர்.

தீவிரவாதிகளுக்கு காந்தீயம் ஒத்துக் கொள்ளாது என்று டைரக்டருக்கு ஏன் யாரும் சொல்லவில்லை? கதர்க்கொடி கந்தசாமியை, கடைந்தெடுத்த காந்தியவாதியாக ஆரம்பத்திலிருந்தே காட்டிவிட்டு, புரட்சிக்கார ஃப்ளாஷ் பேக் தருவது முரண்.

இளமையில் போலீஸ் தேட, அடைக்கலம் தரும் சேரிப் பெண் மீது காதல் வருகிறது.

காதல், காதலோடே நின்று போக, தலை நரைத்த பின், தள்ளாத வயசில் மறுபடி விட்ட இடத்திலிருந்து அது மீண்டும் தொடர்வது கதை.

பாரதிராஜாவின் மிகப்பெரிய பலம், அவரது ஸ்டைல். சுமார் அறுபது, எழுபது வருஷத்துக் கதையை இரண்டு மணி நேரத்தில் அடக்குவது- அதுவும் சிக்கல் இல்லாமல்- அபார சாமர்த்தியம். வசனங்களைக் கணிசமாகக் குறைத்து, சின்னச் சின்ன அசைவுகளில், வினாடி நேரம் வரும் மான்டேஜ் ஷாட்களில், நாவல் விஷயத்தைச் சொல்லி விடுகிறார்.

உதாரணமாக, விஜய குமாருக்கும் ஜெய சுதாவுக்கும் காதல் பிறக்கிற அந்த மை இடுகிற காட்சி.

மூங்கிலில் ஓட்டை போட்டு, காதோடு வாயாகப் பாடுவதும், சொம்பில் தணல் இட்டு, இஸ்திரி போடுகிற ஏழ்மையின் கவித்துவமான சாமர்த்தியமும் தாமரை இலையில் தண்ணீர் உருண்டு வழிகிற எழிலும் வெறும் வார்த்தைகளில் கோக்க முடியாத ஆச்சர்யங்கள்.

'ரியலிஸ'ப் போர்வையில் சங்கவியை வெறும் பாவாடை, ரவிக்கையில் பரபரப்பாக வீட்டுக்குள் அலைய விடுவது (உத்தியோகம் கூட இல்லை; அதெங்கே தினமும் அத்தனை அவசரமாகக் கிளம்புகிறார்?) போன்ற மிகக் கொஞ்சம் கடைந்தெடுத்த சினிமாத்தனம் இருந்தாலும் இதை ஒரு நல்லபடம் என்று சொல்வதற்குக் காரணம்- பழைய வார்த்தையாகி விட்ட தேசபக்தியை தூசுதட்டி, கொஞ்ச நேரம் மனசில் ஊறி, அசைபோட வைக்கிறார் பாரதிராஜா.

இந்தப் படத்துக்கு அரசு செய்ய வேண்டிய விஷயங்கள் இரண்டு.

1. உடனே வரிவிலக்கு.

2. விஜயகுமாருக்கு ஒரு நேஷனல் அவார்டு.



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 1996



முதல் பரிசு ரூ. 1,500

இரண்டாவது பரிசு ரூ. 1,000

மூன்றாவது பரிசு (இரு கதைகளுக்குத் தலா ரூ. 500 வீதம்) ரூ. 1,000

ஆக மொத்தம் ரூ. 3,500 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர, பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 150 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்கு போனஸ் உண்டு.

- கதைகள் சொந்தக் கற்பனை என்றும், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் பிரசுரமானதில்லை என்றும் உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுத மாட்டேன் என்றும் உறுதிமொழி தரவேண்டும்.
- நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

கதைகளை அனுப்ப வேண்டிய கடைசித் தேதி : ஜூன் 15.

- உறையின் மேல் 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய அளவு தபால் தலை ஒட்டிய, சுயவிலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் ஆகஸ்டு 4 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.
- எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.


ஆசிரியர், கல்கி, 47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை – 600 097.

குருதட்சணை



1

காசியபன், ஸ்ரீநிதியைக் கண்டு அடைந்தது, சுவாரஸ்ய நாற்பதைக் கூட அவன் இன்னும் தொடவில்லை. க்ஷேத் கோவிலில் மத்தியான பூஜை நடந்து, மணிச் சப்தம் அவ அவனுக்குத் தோன்றியது. கோவிலுக்குள் புகுந்தான். ஆலகால விஷ ஈசுவரனுக்குப் பெயரே ஆலந்தரித்த ஈசுவரர்தான். அம்மை அல்லிய சிவந்துதான் இருந்தாள். மடைப்பள்ளிப் பிரசாதமோ அமிர்தம்தான ஒரு வீட்டுத் திண்ணையில் படுத்துக் களைப்புத் தீர உறங்கினான் அவனை எழுந்து அமர வைத்தது. பள்ளிப் பிள்ளைகள் ஆட்டம் பே



மான நிகழ்ச்சிதான். தெற்கே இருந்து வந்தவன் காச்யபன். ரொம்ப வயசாளி இல்லைதான்.
திர தரிசனம் செய்து கொண்டு, இந்த ஊரை வந்து சேர்ந்தான். சரியாக அந்த நேரம்
ருக்குக் கேட்டது. கண்டாமணியின் பேரோசை, ஈஸ்வரனே தன்னை அழைக்கிறாற்போல
ந்தை அருந்திய பெருமானை தேவர்கள் வழிபட்ட ஸ்தலம் என்று ஒரு பக்தர் சொன்னார்.
ங்கோதை. அல்லிப் பூ மாதிரி அவளும்
r. திருப்தியாக உண்டு, கண்ணில் பட்ட
திடுமென எழுந்த பெரும் ஆரவாரம்,
ாட்டுக் கொண்டிருந்தார்கள். காச்யபன்

பிரபஞ்சன்

குறுநாவல்

வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான்.

கண்ணாமூச்சு ஆட்டம்தான். ஒருத்தன், கண்களைக் கட்டி விட்டான். இன்னொருத்தன் கட்டப்பட்டவனை, நின்ற இடத்திலேயே மூன்று முறை சுற்றி விட்டு, பையன்கள் ஓடிப் போய் ஒளிந்து கொண்டார்கள். ஒரு பக்கம் கண் தெரியாதவன். மறுபக்கம் குண்டும் குழியுமான தெரு. தெரு ஓரங்களில் மரங்கள். பையன்களுக்கு ஒளியச் சௌகர்யமாக இருந்தது.

இது, தேடுதல் நிறைந்த ஆட்டம். பாதை உண்டு. ஆனால் தெரியாது. ஒளிந்திருக்கும் பையன் ஒருவனைத் தொடுதலே, வெற்றி அல்லது லட்சியம். ஆனால், லட்சியத்தை அடைவதில் ஏகத் தடைகள். முதலில் கண் மறைப்பு. அப்புறம், தெரியாத பாதை. எடுத்த அடி எதன் மேல் என்று தெரியாத சந்தேகம்.

ஒருவன், மரத்தைப் பிடித்தான். ஒருவன், பையன்களுக்கு எதிர்த் திசையில் நடந்து, பெரிய தமாஷை வருவித்தான். பார்த்துக் கொண்டிருக்கும்போதே, ஒரு சிறுவனின் முறை வந்தது. குழந்தை அழகாக இருந்தான். எதிராளி, அவன் கண்களை மிகவும் இறுக்கமாகக் கட்டி, அவனைச் சற்று தூரம் அழைத்துச் சென்று, மும்முறை சுற்றி, சாமர்த்தியமாக எதிர்த் திசையில் திருப்பி விட்டான்.

சிறுவன், இரண்டு அடி எடுத்தும் வைத்தான். அப்போதுதான், அந்த ஆச்சர்யம் நிகழ்ந்தது. அவன் தன் கட்டை அவிழ்த்தான்.

"என்னடா?" என்றான் எதிராளி.

"என் கண்ணைச் சரியாகக் கட்டலையே. நீங்க எல்லாம் ஒளிஞ்சிருக்கிற இடம் தெரியுது. திரும்பவும், இறுக்கமா என் கண்களைக் கட்டி விடு."

எதிராளியும் அப்படியே செய்தான். சிறுவன், மிகவும் சிரமப்பட்டது தெரிந்தது. தட்டுத் தடுமாறி, கீழேயும் விழுந்து எழுந்தான். ஆயினும், தன் முயற்சியை அவன் கைவிடவில்லை. ஏதோ ஒரு உள்ளுணர்வில் சரியான திசையை அவன் கண்டுபிடித்தான்.

காச்யபனின் முதுகுத் தண்டு சிலிர்த்தது.

சத்தியசந்தர்கள் அருகி, அபூர்வமும் ஆகிப் போன இந்தக் காலத்தில், இப்படியும் ஒரு பிள்ளையா?

"தம்பி, இங்க வா." என்று அந்தச் சிறுவனை அருகாக அழைத்தான். அவன் மட்டுமல்ல, சிறுவர் பட்டாளமே அவனை நோக்கி வந்தது.

"தம்பி, உன் பெயர் என்ன?"

"ஸ்ரீநிதி, ஐயா."

"சந்தேகம் என்ன? நிதிதான். யார் வீட்டுப் பிள்ளை நீ?"

"வழிப்போக்கரே, இவன் ஒரு அனாதை. தாய், தந்தை இழந்தவன்."

"ஐயோ" என்றவன், ஸ்ரீநிதியைத் தம் அருகாக அழைத்து நோக்கினான். அவனது சாமுத்திரிகா லட்சண அறிவு மேலோங்கியது. சிறுவனின் வயிறு, தோள், நெற்றி, நாசி, மார்பு, கையடி எல்லாம் மேடிட்டு, இவன் இந்திர போகம் அநுபவிப்பான் என்றது சாத்திரம். குவளை மலர் போலக் கண்கள், கபாலம், சிவந்த உள்ளங்கை, கூரிய நாசி, மார்பு நீண்டு, இவன் உத்தமன் என்றது. நிதியின் விரல்களை அவதானித்தான். நகம் சிறியது. சின்ன மொச்சைப் பயிறுப் பற்களோ, சின்ன முத்துக்கள்.

'சுருக்-நறுக்' — 23 போட்டி முடிவுகள்

கீழ்க்கண்ட சொல்லோவியங்கள் தலா ரூ. 50/- பரிசு பெறுகின்றன.

கல்வி என்பது....

● வாழ்க்கைச் சக்கரத்தின் கடையாணி.

— டி. நாராயணன், திருச்சி – 3.

● மனிதர்களுக்கான ஐ.எஸ்.ஐ. முத்திரை.

— எம். தட்சிணாமூர்த்தி, சென்னை – 12.

● கல்வி, பூரணமல்ல; பூரணம் நோக்கிய பயணம்.

— எல். சண்முகசுந்தரி, இராமநாதபுரம்.

● எவ்வளவு உட்கொண்டாலும் அஜீரணம் தராதது!

— எஸ். பாலகிருஷ்ணன், திருச்சி – 13.

● 'லட்சுமி' அருள் இருந்தால் மட்டுமே கிடைக்கும் 'சரஸ்வதி'.

— வெற்றிச்செல்வி சண்முகம், நாச்சிக்குறிச்சி.

● மனிதனின் 'ஹெட் கிளீனர்'.

— வே. மோகனா, தண்டுப்பத்து.

● உலக வாழ்க்கை பழரசத்தை, ஒழுகாமல் அழகாகக் குடிக்க உதவும் 'ஸ்ட்ரா'.

— பாலுவேந்திரா, கோவை – 27.

● நம்மையும் பிறரையும் வாழவைக்க வழி செய்யும் எந்த ஒரு அனுபவமும், கல்விதான்!

— ஆர். ஸ்ரீநிவாசன், ஸ்ரீரங்கம்.

● ஒருவன் உலகை அறியவும், உலகம் அவனை அறியவும் உதவும் பயிற்சி.

— எம். திவாகரன், திருச்சி – 4.

புதையல் கிடைத்தது போல இருந்தது காச்யபனுக்கு. அந்தக் கணமே, அவன் ஒரு முடிவுக்கு வந்தவன், சொன்னான் :

“நிதி. நீ யாருடைய போஷிப்பில் இருக்கிறாயடா, குழந்தை?”

“என் மாமா என்னைப் பராமரிக்கிறார்.”

“நல்லது. நான் அவரைப் பார்க்க வேணுமே?”

நிதி அழைத்துச் சென்றான். மாமா சொன்னார் :

“அனாதைச் சனியனை அழைச்சிட்டுப் போகலாமே, மேளம் கொட்டிக்கிட்டு..”

நிதி, இப்படியாகத்தான் காச்யபனிடம் வந்து சேர்ந்தான்.

2

காச்யபன், தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்வதில்லை.

அவ்வப்போது, "நான் யார்? எனக்குத் தெரியாது. அப்புறம், என்னைப் பற்றி நான் என்ன சொல்றது?" என்பான். வளர வளர ஸ்ரீநிதியே கொஞ்சம் கொஞ்சமாக அவனைப் பற்றி அறிந்து கொண்டான்.

நாணல் பூக்களைப் போல வெள்ளையாக இருக்கிறான் என்பதால், அவனைக் காச்யபன் என்றழைத்தார்கள் ஜனங்கள். அவனைச் சித்தன் என்றும் சிலர் சொன்னார்கள். சித்தன் போக்கு சிவன் போக்கு என்றாற்போல, எந்த இடத்திலும் நீண்ட நாட்கள் அவன் நிலைத்திருப்பதில்லை. சிதம்பரத்தில் கொஞ்ச காலம். திருஅண்ணாமலையில் கொஞ்ச நாட்கள். கானத்தியில் பல நாட்கள் என்று தன் இருப்பிடத்தை மாற்றிக் கொண்டிருந்தான் காச்யபன். ஊசி வழி நூல் போல, அவனைப் பின்பற்றிக் கொண்டான் ஸ்ரீநிதி. ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிந்தது, நிதிக்கு. காச்யபன் நிகரற்ற வைத்தியனாக இருந்தான். 'செத்தாரை எழுப்புவன்' என்றும் கூட பெயர் அவனுக்கு இருந்தது.

காச்யபன் சொல்வான் :

“நாடிகள் மூணுதான்டா, நிதி. எல்லா வைத்தியனும் இந்த மூன்றைத்தான் கண்டான். இதைத்தான் மாற்றலும், சரிப்படுத்தலும். ஆனா, நாலாம் நாடி ஒன்று இருக்கு. அதை எழுதி வைக்கலை, யாரும். வள்ளுவன், அறம், பொருள், இன்பத்தைச் சொன்னான். ஏன் 'வீட்டை'ச் சொல்லலை? அதுக்கு என்ன காரணமோ, இதுக்கும் அதுதான் காரணம். அந்த நாடி – நல்லா கேட்டுக்கோ – அந்த நாலாம் நாடி, வைத்தியன் மனசுக்குள்ளே இருக்கு. நோயாளி, கையைத் தொட்டவுடனே, நம்மோட நாலாம் நாடி நமக்குள்ளே பேசணும்டா. என்ன கேடுன்னு நாடி பேசும். ஆனா, சனியன்கள், சரியா பேசாது. கொனஷ்டைகள், எல்லாம். பேய்க் குட்டிகள் மாதிரி. காலையிலே ஒரு பாஷை பேசும். சாயங்காலம் வேற பாஷை பேசும். ஆனா, உன் மனசுக்குள்ளே இருக்கிற நாடி, சரியா பேசும். தெளிவா பேசும். காதை, உள்ளுக்குள்ளே வை. அப்போதான் நீ அரை வைத்தியன்."

ஒரு கஷ்டம். காச்யபன் நாக்கு துர்வாச நாக்கு. அண்மையில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. வேட்டவலம் ஜமீந்தார், பக்கவாதம் என்று காச்யபனைத் தேடி வந்தார். தேடி வருபவர்க்கு மட்டும் வைத்தியம் என்று வேறு இருந்தான், காச்யபன். பாவம், ரொம்பக் கஷ்டப்பட்டு, மலை ஏறி வந்திருந்தார் ஜமீந்தார். வியர்வையால் குளித்தாற்போல இருந்தார், அவர். மூச்சு மேலும் கீழும் துருத்தி மாதிரி வாங்கிக் கொண்டிருந்தார், அவர். காச்யபன், அப்போதுதான் 'லேகியம்' சாப்பிட இருந்தான்.

"என்ன ஓய், என்ன ஆச்சு உமக்கு?" என்று வரவேற்றான், ஜமீந்தாரை.

"அதை சுவாமிதான் பார்க்க வேணும்."

"பார்க்கிறேன். பார்த்துக் கொண்டுதானே இருக்கேன்."

ஜமீந்தார் கையை நீட்டினார்.

"வேணாம். அது அவசியம் இல்லை. உமது ரோகத்தின் வாசனை எனக்கு வந்துடுச்சு. ரோகம் என்னோட பேசும்யா. சரி. உமக்கு சொத்து அபரிமிதம் என்று சொல்கிறார்களே, வாஸ்தவம்தானா?"

"நிசம், சுவாமி."

"எத்தனை பிள்ளைகள் உமக்கு?"

"நாலு ஆம்பிளை, ஆறு பொட்டைகள் சாமி."


"எத்தனை பெண்ஜாதிகள்?"

“பஸ் டிரைவராயிருந்த ஆளை கார் டிரைவரா சேர்த்துக்கிட்டது தப்பாப் போச்சு!”

“ஏன்?”

“எப்பவும் இறங்க வேண்டிய இடத்துக்கு ஐம்பதடி தள்ளியே போய் காரை நிறுத்தறான்.”

– டி. என். பாலகிருஷ்ணன்



"போங்க சாமி. இப்போ இருக்கிறவள், மூணாவது. மற்றது இரண்டில், ஒண்ணு செத்துப் போயிடுத்து. மற்றது, வயிறு வாய்க்கலை."

சாமி சும்மா உட்கார்ந்திருந்தது.

"சாமி, என் ரோகம் தீர மருந்து அருள வேணும்."

"தேவை இல்லை, வாழ்ந்தது போதும்னு 'அவன்' நினைச்சுட்டான். சொத்தைச் சரியா பிள்ளைகளுக்குப் பகிர்ந்து கொடுமேன். நாலு பேருக்கு நல்லது பண்ணும். வார பவுர்ணமிக்கு மறுநாள், ஆட்கள் வந்துடுவானுங்க. உம்மை அழைச்சுப் போறதுக்கு. அதான்யா, எமராசன் ஆட்கள்... தயாராயிடு..."

ஜமீன்தாருக்கு மயக்கமே வந்து விட்டது. அவருடன் வந்த ஆட்களோ, புலிப் பார்வை பார்த்தார்கள். ஜமீன்தார் கெஞ்சத் தொடங்கினார்.

"சுவாமி, தயவு பண்ணணும். உங்களால் தான் என்னைக் காப்பாற்ற இயலும்."

சாமி சிரித்தது.

"என்னால் மட்டுமல்ல, ஓய். எவனாலும், அவனாலும், இவனாலும் உம்மைக் காப்பாற்ற முடியாது. உம்மைச் சுற்றி எமன் கயிறு தெரியுதுங்காணும்... கரும்படலம், உம் தலையைச் சுற்றி எனக்குத் தெரியுதே. சிவனால் மட்டும்தான் உமக்கு விமோசனம் பண்ண முடியும். எதுக்கய்யா சாவப் பயப்படறீரு. பிறக்கப் பயப்படலை. இறக்க மட்டும் என்னத்துக்கு பயப்படறது?"

ஜமீந்தார் போன பிறகு, ஸ்ரீநிதி கேட்டான்.

"சுவாமி, இந்தக் 'கரி' நாக்கு, வைத்தியனுக்கு சரிப்படுமோ? பாவம். ஜமீந்தார் ரொம்ப மனவேதனையோடு போகிறார்..."

"நான் தாசி அல்லவே, நிதி. நான் இனிப்பான வார்த்தைகளைப் பேச முடியாது. நான் உண்மையை, நீ விரும்பினாலும், அல்ல என்றாலும் பேச வேண்டும். அது என் சுதர்மம்."

"க்ஷமிக்கணும் சுவாமி. உண்மையை, இங்கிதமாகவும் மனம் விரும்பும்படியாகவும் பேசலாமே?"

சுவாமி சிரித்தது. போதையில், அதன் கண்கள் கோவையெனவும், பச்சைக் கிளியின் வாய் மாதிரியும் சிவந்திருந்தது.

"குழந்தை. நான் ஞானிகளிடம் அவ்வண்ணம் பேச மாட்டேனடா. அவர்களுக்கு மரணம் மகிழ்ச்சி தரும் அநுபவமாக இருக்கும். நான் அற்பர்களிடம் மட்டுமே அப்படிப் பேசுவேன். ஜமீந்தார் முகத்துக்கு நேராக, அவன் இயலாமையை, என்னை அன்றி எவரே பேச முடியும்? அவனுக்கும், அவனை விடவும் பெரியவன் இருக்கிறான் என்கிற சத்தியம் புரிபட வேண்டுமே.. என் குரு பட்டினத்தடிகள். ராஜாவுக்கு முன், 'நான் இருக்க, நீ நிற்க' என்று



"பொதுக் கூட்ட மேடையில் ஏன் தலைவர் சிரசாசனம் செய்யறார்?"

"பெரிய தொப்பையுடைய தொண்டர்கள் அவரோட காலில் விழ சிரமப்படறதாலே, நின்றபடி அவரோட காலைத் தொட்டு ஒற்றிக் கொள்ள வசதியா இந்த ஏற்பாடு...!"

— பாலசுப்பிரமணியம்

உணர்த்தினாரே, அது மாதிரி என்று வைத்துக் கொள்..."

சாமி போதையில் இருக்கும் போது மட்டும் தான் இப்படியெல்லாம் பேசும் என்பதை ஸ்ரீநிதி அறிவான். ஆனால், எப்போதும் அசத்தியம் பேசாது.

ஆனால், சாமி கொடுமைக்கார மநுஷன் என்பதும் இல்லை. ஸ்ரீநிதி அதை அறிவான். அவன்தான் சாமியுடன் வந்த இந்தப் பதினாறு ஆண்டுகளாய் எத்தனை பார்த்திருக்கிறான்? திருமறைக்காட்டில் அவர்கள் தங்கி இருந்த போது நடந்த ஒரு அபூர்வ நிகழ்ச்சியை அவன் கண்முன்னே பார்த்திருக்கிறானே...

குடும்பன் மகன், வாலையைப் பாம்பு கடித்தது. வேறு என்ன? நல்ல பாம்புதான். இருட்டிய நேரம். தோட்டத்துப் பக்கம் போயிருக்கிறான். கோழிக் குஞ்சுகள் ஏகமாகக் கத்தித் தீர்த்தன. ஆகையினால், அவன் அம்மா, "என்னன்னு போய்ப் பாரடி." என்றாளாம். தாய்க் கோழி வேறு இறக்கையை அடித்துக் கொண்டு, பம்மிக் கொண்டு குரல் கொடுத்தது. இந்த வகைக் குரல், ஆபத்தைக் குறிப்பதாயிற்றே! வாலை, கோழிக் கூண்டின் அண்மைக்குச் சென்றிருக்கிறான். குஞ்சுகள் பதறித் துடித்தபடி இருந்தன. கூண்டைத் திறந்தான். இருட்டில் சரியான இனம் விளங்கவில்லை. காலை வைத்துத் துழாவினான். 'சுருக்'கென்று கடுத்தது. முள்ளாக்கும் என்று நினைத்தான். 'உஸ்...' என்று சீறும் சப்தம் கேட்டது. அவனுக்குப் புரிந்து விட்டது. 'அம்மா... பாம்பு' என்று அலறிக் கொண்டு விழுந்தான்.

விடிவதற்குள் உடம்பு நீலம்பாரித்து விட்டது. வைத்தியர் "எல்லார்க்கும் சொல்லி அனுப்பிடு" என்றார்.

எதேச்சையாக, சாமி அந்தப் பக்கம் போக நேரிட்டது. எதேச்சை அல்ல. விதி. அவ்வழிப் போக விதித்து இருக்கிறது என்றது சாமி. குழந்

தையைப் பார்த்தது. நுரை தள்ளி, மூச்சு நின்று, கண்கள் செருகி, எல்லாம் முடிந்து இருந்தது. உடம்பில் உஷ்ணம் மட்டும் தீர்ந்து போய் விடாமல் இருந்தது.

"அடக்கம் செய்யாதேயுங்கள்" என்று கேட்டுக் கொண்டது சாமி. ஆனால், குடும்பன் வகையறாவோ, அவநம்பிக்கையோடுதான் சம்மதித்தது. என்ன மாயமோ, மருந்தோ? காட்டுக்குள் புகுந்தது. மனித சஞ்சாரம் அற்ற காட்டில், எந்தப் புல்லை, எந்தப் பூண்டை, எந்த இலையைப் பரித்து ரசம் இறக்கியதோ? பல்லை இடுக்கி போட்டுத் திறந்து, வாலையின் உடம்புக்குள் செலுத்தியது. தைலம் பண்ணி, உடம்பில் தேய்த்து விட்டது. என்ன ஆச்சர்யம்? வாலை விழித்துக் கொண்டாள். அம்மாவைப் பார்த்து, "பசிக்குது... சோறு போடு" என்று சொன்னாள்.

அந்தக் கணமே அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டு விட்டது, சாமி. குடும்பன் தேடி இருப்பான்.

"என் வேலை முடிஞ்சுட்டது. உத்தரவு பண்ணினவன் ஒருத்தன். என் மூலம் செய்வித்துக் கொண்டான். அப்புறம் என்ன?" என்றது சாமி.

3

கார்காலம் வருகிறது. சாமி எதன் காரணத்தாலோ, இப்போதெல்லாம் மிகுந்த உணர்ச்சிவசப்பட்டது. இது அண்மைக்கால வழக்கம்.

"மழைக்கு முன்னால் நாம் மருத்துவமலைக்குப் போய் விட வேண்டுமடா, ஸ்ரீநிதி" என்றது ஒரு சமயம்.

"பச்சிலை அங்கே மிகவும் விசேஷமாகக் கிடைக்கும் என்கிறார்களே, சுவாமி."

"அதுவும் ஒரு காரணம்..." என்று பூடகமாகச் சிரித்தது சாமி. தொடர்ந்து,

"குழந்தை. உனக்கு சஞ்சீவினி வித்தை ஒன்றைக் கற்றுக் கொடுக்க வேண்டும்; சஞ்சீவினி வித்தை ஒன்றல்ல, பல. ஏராளமான நிணுசு. சுக்கிராசாரியார், கசனுக்குக் கற்றுக் கொடுத்த சஞ்சீவினி ஒரு ரகம். வைத்தியர்களாகிய நம்மைக் காப்பாற்றும் சஞ்சீவினி என்கிறது ஒரு ரகம். சமயம் வரும் போது சொல்கிறேன்."

"சுவாமி... மருத்துவமலை, இங்கிருந்து பல காத தூரம் ஆச்சுதே."

"இருக்கட்டும். வாயு வேகத்தை விடவும் மனோவேகம், அதி சீக்கிரம் அல்லவா? நடப்போம்."

இரவும் பகலுமாக அவர்கள் நடந்தார்கள். பசி வரும் போது, ஏதேனும் கிராமங்களில், பிட்சை ஏற்றுப் புசித்தார்கள். ஓர் இரவு, ஒரு சத்திரத்தில் அவர்கள் தங்க நேர்ந்தது. மங்கலான விடிவிளக்கின் வெளிச்சத்தில் சாமி சொன்னது :

"ஸ்ரீநிதி... எங்கே உன் கையைக் காட்டு."

அவனது இரண்டு கை ரேகைகளையும் சாமி கூர்ந்து நோக்கியது. புரட்டிப் புரட்டிப் பார்த்தது. சகல விரல் முனை மேடுகள், சுழிகள், ரேகைகள் அனைத்தையும் கூர்ந்து கவனித்தது. தன் வெளுத்த தாடியைத் தடவிக் கொண்டு சிரித்தது.

"நாம், சரியான இடத்தை நோக்கித்தான் போய்க் கொண்டிருக்கிறோமடா?"

பயணம் தொடர்ந்தது. நதிகள், மலைகள், ஊர்கள் சகலத்தையும் கடந்து அவர்கள் போய்க் கொண்டிருந்தார்கள்.

"சாமி... எங்கே இருக்கிறது, மருத்துவமலை?"

"நாபிக் கமலத்தில் இருக்கிறதடா..."

ஸ்ரீநிதி, புருவம் சுருங்க அவரை நோக்கினான்.

"பூமியின் நாபிக் கமலத்திலடா..."

பூகோளம் பற்றிச் சாமி சொல்லிக் கொண்டு வந்தது. நிதர்சனமாகக் காட்டிக் கொண்டு வந்தது.

"குழந்தை. கவனமாக வாங்கிக் கொள்ளடா. இதையெல்லாம் யார் உனக்குக் கற்பிப்பார்? சீக்கிரம் வாங்கிக் கொள். எனக்கு ரொம்பக் களைப்பு ஏற்படுகிறதடா... தோ பார். உனக்கு முன் பார். கோங்கு, மருது, அரசு, நிலத் தாமரை, துளசி எல்லாம் பார். புறா, கிளி, அன்னம் முதலான பறவைகளையும் பார். மிகுந்த சுபத்தை தரும் பூமியடா இது. இதன் பேர் சிவ பூமி."

பின், அவர்கள் நிலங்களைக் கடந்தார்கள். பன்னிரண்டு வகையான நில வகைகளை சாமி சொன்னது.

"தும்பை, புளி, புங்கமரம், செம்பருத்தி, அன்னம், சாமான்ய பறவைகள் இருக்கு பார். இது வைஷ்ணவ பூமி. ரொம்ப சிலாக்கியம், இங்கே ஜீவனம் பண்ணுவது. எங்கே ஆம்பல் புஷ்பங்கள் நிறைந்திருக்கிறதோ, செங்கழுநீர், நெய்தல், மணல் உடையதோ, எங்கே விவசாயம் நடைபெறுகிறதோ, அதன் அருகே, நீ உன் வீட்டை அமைத்துக் கொள்ளடா! எனக்குப் பிறகு, இந்த பைராகி வாழ்க்கை வேண்டாமடா குழந்தை. நீ உலகை வெல்வாய்."

ஸ்ரீநிதியின் கண்களில் இருந்து மழை போல்.

"சாமி, அப்படியெல்லாம் சொல்லாதேயுங்கள்."

"வைத்தியனுக்கு, உடம்பு அநித்யம் என்று தெரியாதா? எனக்கு என்னைத் தெரியுமடா, குழந்தை. என் வேலை முடிந்ததும், ஒருகணம்

ஸ்ரீ கந்தசுவாமி
பர்மனென்ட் பண்டு லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் துவக்கம் 1990
பதிவு அலுவலகம்: 60, சாமி பண்டாரம் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2. ph: 848917
கிளை அலுவலகம்: 36, ஜீனிஸ் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை-600 015. போன்: 459569



கந்தகோட்டம்
ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி

பிக்சட் டிபாசிட்

46நாள்	3மாதம்	6மாதம்	ஆண்டு	2ஆண்டு	3ஆண்டு	4ஆண்டு	5ஆண்டு
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

21%

5 வருடங்கள்
ரூ.50,000/-
அதற்கு மேலும்

PB பாண்டு

முதலீடு	காலம்	திரும்பப் பெறும் தொகை
ரூ. 25,000	60 மாதம்	ரூ. 70,000


சொத்துக்கள் மீது கடன்

- ❑ வீடு / ஃப்ளாட் பேரில் கடன் வழங்கப்படும்.
- ❑ மாத வட்டி ரூ.1.85 மட்டுமே
- ❑ விரைந்த சேவை.
- ❑ சென்னை மாநகராட்சி எல்லைக்குள் இருக்க வேண்டும்.



நகைக்கடன்

- ❑ குறைந்த வட்டிக்கு கிடைக்கும்
- ❑ 10 கிராமுக்கு ரூ.3000 வழங்கப்படும்.
- ❑ R.D. கட்டத் தேவையில்லை
- ❑ எந்த சார்ஜும் வசூலிப்பதில்லை



பாதுகாப்புப் பெட்டக வசதியும் உண்டு.

பென்ஷனர் நலத்திட்டம்

20% P.a ரூபாய் 10 ஆயிரமும் அதற்கு மேலும் காலம் 1 ஆண்டு வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.



சேர்மன்:
P. பாலசுப்பிரமணியம், B.Sc.,
முதன்மை அறங்காவலர்,
கந்தகோட்டம்,
சென்னை-600 003.
நிர்வாக இயக்குனர் :
பார்க் டவுன் பெனிபிட்
பண்டு லிட்.

இயக்குநர்கள் குழு
R.விவேகானந்தன் B.Com.,
(Chairman : Park Town Benefit Fund Ltd.)
A.சுப்பிரமணியன்
V.சண்முகவடிவு B.A.,
V.விஜயகோபால் B.Com., D.C.P.
M.ராஜேந்திரன்
P.ஏகாம்பரம்

பங்குதாரர்களுக்கு மட்டும்

H.O. Friday Holiday (It is a P.B. Group Concern) B.O. Tuesday Holiday



''இப்பத்தானே B.P. செக்-அப் பண்ணினேன்; நார்மலாத்தானே இருந்துது. மறுபடி எதுக்கு?''

''செக்-அப்பின் போது நார்மலாத்தான் இருந்தது. ஆனா உங்க ஃபீஸைக் கேட்டதும் ஜாஸ்தியாயிட்ட மாதிரி இருக்கே!''

— டி. என். பாலகிருஷ்ணன்

இந்த சட்டையை வைத்திருப்பேன் என்றா நினைக்கிறாய்? பறந்து விட மாட்டேனா..."

வெயில் வெள்ளையாக, கடுமையாக வீசிக் கொண்டிருந்தது. தெரு நாய்கள், தங்கள் சிவந்த நாக்கை வெளியில் துருத்திக் கொண்டு அலைந்தன. ஊருக்குப் புறமாக, ஒரு அரச மரத்தடியில் அமர்ந்தார்கள். கட்டு சோற்றை அவிழ்த்து உண்டார்கள்.

"ஸ்ரீநிதி. வரும் கிருத்திகைக்கு, உனக்கு இருபத்திரண்டு வயது நிறைகிறதடா. தெரியுமா?"

"அப்படியா சாமி?"

"ஆம். பதினாறு ஆண்டுகள். என்னுடன் அலைகிறாய். உனக்கு இந்த ஜீவிய முறையில் அலுப்பு ஏற்பட்டிருக்க வேண்டுமே."

"எனக்கு வேறு வாழ்க்கை முறை எதுவும் தெரியாதே..."

"அதுதான். தாய் யானை பின்னால் ஓடும் குட்டி யானை மாதிரி என்னைப் பின் தொடர்வதே தவம் என்று வாழ்ந்து விட்டாய். குழந்தை... எப்போதாவது உனக்குத் தாய், தந்தை நினைவு வந்து துன்புறுத்தி இருக்கிறதா?"

ஸ்ரீநிதி யோசித்தான்.

"இல்லை சுவாமி. என் தாய், தந்தை முகமே எனக்குத் தெரியாதே. மாமா இல்லத்தில், துன்பப்பட்டது எனக்குத் தெரிகிறது. அப்புறம் நீங்கள்... ஒரு கேள்வி மட்டும் எனக்குச் சமீபத்தில் தோன்றியது சாமி."

"என்ன அது?"

"என்னை என்னவாக ஆக்க உத்தேசிக்கிறீர்கள்? நான் என்னவாக இருக்கிறேன்?"

சாமி சிரித்தார்.

"நல்ல கேள்வி கேட்டாயடா? ஒரு மனிதனாக, பூரண மனிதனாக மாற்ற முயற்சிக்கிறேனடா. பூரண மனிதன் என்பவன் ஞானி. உன்னை ஞான சூரியனாக வடிவமைக்க முயற்சி செய்தேன். நீ அப்படித்தான் இருந்தாய். உன்னை உனக்கு நான் அறிவுறுத்தினேன். அவ்வளவுதான். குழந்தை, என் வழி கிரியை. ஏதோ செய்து கொண்டே இருக்க வேண்டும். அந்தக் கிரியை வழி ஞானம் அடைய வேண்டும். ஞானமார்க்கத்துக்கு சார்பாகத்தான் உனக்கு வைத்தியம் கற்றுக் கொடுத்தேன். இந்த க்ஷணம், உன்னை வெற்றிகொள்ளும் மருத்துவன் பூமி மேல் இல்லையடா குழந்தை. இன்னும் ஒன்று பாக்கி."

"சுவாமி, என்ன அது?"

"ரஸம். ரஸ வித்தை. தங்கம் பண்ணுகிற வித்தை. இருப்பதில் சிறந்ததைத்தான் ரஸம் என்பார்கள். பூதங்களில் ரஸம் மண். மண்ணின் ரஸம் தண்ணீர். தண்ணீரின் ரஸம் தாவரங்கள். தாவரங்களின் ரஸம் மனிதன். மனிதனின் ரஸம் வாக்கு.... வித்தைகளில் ரஸம் சொர்ண வித்தை. அதையும் தெரிந்து கொள்ள வேணுமடா.. களவும் கற்று மறக்க வேண்டுமடா!"

"களவையுமா, சாமி?"

சுவாமி சிரித்தது.

''களவு என்பது திருடுதல் அல்லடா, குழந்தை... களவு காதலின் ஒரு வடிவம். சமூகம் அறியாத ரகசியக் காதல். அதைப் பயிலலாம். அதையே நீட்டிக்கக் கூடாது. குடும்பஸ்தனாகி விட வேணும்..."

4

சாமி, சொர்ண வித்தையைத் தொடங்கியது. இரும்பு, செம்பு என்று உலோகங்களைச் சேமித்தது. மலைக் காட்டுக்குள் புகுந்து, இலை, வேர், தண்டு என்று எதை எதையோ சேமித்தது. சட்டி, ஸ்புடம் போடப் பாத்திரங்கள், மெல்லிய வடிகட்டு வஸ்திரங்கள் என்று சாமக்கிரியைகள் எல்லாம் சேமித்தது. ஒவ்வொன்றையும், ஸ்ரீநிதிக்குச் சொல்லிச் சொல்லிச் செய்தது.

ஒரு வளர்பிறையில் வித்தை தொடங்கி, பௌர்ணமியின் இரவில் முடிந்தது. சாமி சொன்னது :

''ஸ்ரீநிதி ஸ்புடச் சட்டியை எடுத்துக் கொண்டு மலைச் சரிவுக்கு வா."

சுவாமி முன் ஏக, நிதி அதைத் தொடர்ந்து சென்றான். மலைச் சரிவில், மந்தாகினி நதி ஓரம் சாமி போய் நின்றது. இரவின் நிசப்தம், ஜலப் பிரவாகத்தால் ரணம் ஆகிக் கொண்டிருந்தது. பூச்சிகள் எவையோ, இடையறாது ஒலி எழுப்பிக் கொண்டிருந்தன.

"மேலே மூடியை எடு."

நிதி எடுத்தான்.

"தழைகளை ஒரு குச்சி கொண்டு எடு."

எடுத்தான்.

நடராஜ் எஸ்டேட்ஸ்

வழங்கும்,


ஈடு இணையற்ற லாபகர திட்டம்

வாரம் தோறும் காய்கறிகள்

இல்லத்தரசிகளே !

உங்கள் வீடு தேடி வருகிறது எங்கள் பண்ணையில் விளையும் காய்கறிகள்

(சென்னை நகர வாசிகளுக்கு மட்டும்)



- ரூ. 5,000 செலுத்தி 3 வருடங்களுக்கு "மெம்பர்" ஆக வேண்டும்.
- 3 வருடங்களுக்குப் பிறகு "ரூ. 5000-ஐ" திரும்ப பெற்றுக் கொள்ளலாம்.
- அல்லது மேலும் 3 வருடங்களுக்கு "ரினிவல்" செய்து கொள்ளலாம்.
- உங்கள் மெம்பர்ஷிப் கட்டணத்துக்கு 12% வட்டியும் உண்டு.
- சப்ளை செய்யப்படும் காய்கறிகளுக்காக நீங்கள் தனியே பணம் ஏதுவும் கொடுக்க வேண்டியதில்லை.
- மெம்பர் ஆன தேதியிலிருந்து வாரா வாரம் கணிசமான அளவு காய்கறிகள் தொடர்ந்து சப்ளை செய்யப்படும்.

மெம்பர்ஷிப் கட்டணத்தை நேரிலோ, "செக்" மூலமாகவோ, டி.டி. ஆகவோ அளிக்கலாம்.

இலவசம்
உறுப்பினர் கார்டு, மற்றும் காய்கறி நறுக்கும் S.S. கட்டர்.





ஞாயிறு தோறும்
பசுமை நிறைந்த காய்கறி பைகளுடன் எங்கள் பிரதிநிதி உங்கள் வீட்டுக்கதவை இன்முகத்துடன் தட்டுவார்.

பூச்சிக் கொல்லி மருந்து, மற்றும் ரசாயன உரங்களை 99% தவிர்க்க முயற்சி செய்கிறோம். இயற்கை உரம் இடுவதால் உங்கள் உடல் நலம் முற்றிலும் பாதுகாக்கப்படுகிறது.

காய்கறி விபரம்

தக்காளி, வெண்டைக்காய், கத்தரிக்காய், வாழைக்காய், புடலங்காய், அவரைக்காய், பாகற்காய், பீர்க்கங்காய், சுண்டைக்காய், சுரைக்காய், பூசணிக்காய், பரங்கிக்காய், கொத்தவரங்காய், முருங்கைக்காய், முள்ளங்கி, எலுமிச்சம் பழம், இஞ்சி, கொத்துமல்லி, கறிவேப்பிலை, மற்றும் கீரை வகைகளும் மாற்றி மாற்றி சப்ளை செய்யப்படும்.

Phone : 4342098, 4840150

திட்டமிட்ட குடும்பத்துக்கு தேவையான காய்கறிகள் வழங்கப்படும். இயற்கை சீற்றங்களால் ஏதேனும் சேதாரம் ஏற்பட்டாலொழிய எங்கள் சப்ளை ஒருபோதும் நிற்காது.

NATARAJ ESTATES

"Shanthi Complex", 3rd Floor, 26, Ranganathan Street, T. Nagar, Madras - 600 017.
Branches : Tiruvarur, Thanjavur, Kancheepuram.

NATARAJ GROUP OF COMPANIES
Nataraj Finance & Investments.
Nataraj Chits (Tamilnadu) Pvt., ltd..
Nataraj Exports Overseas, Nataraj Publications.
Nataraj Oil Mills, T.K. Geetha Agro Products.

24% P.A.

"லேசாக ஊது. கண்ணை மூடிக் கொண்டு ஊது."

ஊதினான்.

குப்பென்று வெளிச்சம் அவன் முகத்தில் வீசியது. 'நெருப்பு, நெருப்பு' என்று கூவ இருந்தான், நிதி. அது நெருப்பல்ல. நெருப்பு மாதிரி ஜொலித்தது. பொன். சுத்த மாற்றுப் பொன். தங்கம்.

நிதியின் விழிகள் விரிந்தன.

"தங்க விளையாட்டைப் புரிந்து கொண்டாயா?"

"கொண்டேன், சாமி."

"அதோ அந்த மந்தார இலையைப் பறித்து, அதன் மேல் இந்தத் தங்கக் கட்டியை வை."

வைத்தான். இலையின் மேல் இருந்த பொன், தாமரை இலை மேல் தண்ணீர்.

"பார்த்து முடித்தாயா?"

"முடித்தேன் சாமி."

"அதை, நதியில் போடு. திரும்பிப் பார்க்காமல், நம் குகையைப் போய்ச் சேரடா, குழந்தை. இது நமக்கு என்னத்துக்கு? தேவை நமக்கு இல்லை என்பதாலேதான், செம்பு தங்கமாச்சு..."

தங்கத்தை எறிந்துவிட்டு, மகிழ்ச்சியுடன் குகைக்குத் திரும்பினார்கள், குருவும் சிஷ்யனும்.

5

மழை தொடங்கி விட்டிருந்தது.

மின்னல் வெட்டி வெட்டி முழங்கியது. மழை தொடர்ந்து, வானுக்கும் பூமிக்கும் வாய்க்கால் வெட்டிய மாதிரி பொழிந்து கொண்டே இருந்தது. இருட்டு, ரொம்ப சீக்கிரமே குகைக்குள் வரத் தொடங்கி இருந்தது.

அன்று அதிகாலைத் தொட்டே, காற்றும் மழையும் இடைஇடையே மின்னலுமாக இருந்தது. மதியத்தின் போது, ஒரு ஸ்திரீ, குகைக்குள் நுழைந்தாள். சாமி ஏதோ சுவடிகளை ஆராய்ந்து கொண்டிருந்தது. வைத்திய அகத்தியர் பாட்டுக்கள் சிலவற்றுக்கு அர்த்தம் சொல்லிக் கொண்டிருந்தது.

புது விருந்தாளியைக் கண்டு சாமி, "யாரம்மா?" என்றது.

"சாமி. நான் சமர்ப்பவி. மேலே, உச்சியில இருக்கிற மருந்தீசர் கோவில்லே, பணிபூண்டு இருக்கேன்."

"அப்படியா? உட்கார்."

அந்தப் பெண் அமர்ந்தாள். பதினெட்டு பிராயத்தாள். இரண்டாம் முறையும் பார்க்கத் தூண்டும் வடிவைக் கொண்டிருந்தாள் அவள். வெள்ளை ஆடையும் சிவப்புப் போர்வையும்



"சமையல் ஆகிவிட்டதா? சமையல் ஆகிவிட்டதா?" என்று முல்லா வினாடிக்கு ஒரு முறை கேட்டுத் தொந்தரவு செய்யவே, எரிச்சல

அவள் அணிந்திருந்தாள்.

நெற்றியில் விபூதியும், குங்குமமும் அணிந்திருந்தாள்.

"சாமியையும், சிஷ்யரையும் ஒரு நாளும் நான் கோயிலுக்குள் பார்த்தது இல்லையே?"

"அதுவா.. அதில் எனக்கு விசேஷ ஈடுபாடு இல்லை சமர்ப்பவி. ஒரு காலத்தில், க்ஷேத்திராடனம் எனக்கு மிகவும் உவப்பாய் இருந்தது. இப்போ இல்லை. இருக்கும் இடத்தில் ஈசன் இருப்பான்."

அவள், ஸ்ரீநிதியைப் பார்த்தாள். கைகட்டி, பத்மாசனத்தில் அமர்ந்திருக்கும் அவன் 'பாவம்' அவளுக்கு என்ன யோசனையை ஏற்படுத்தியதோ?

"சாமி... உங்களுக்கு நான் இங்கு வந்ததில் ஆட்சேபணை இல்லையே?"

"ஆட்சேபணை என்ன இருக்கும்?"

"துறவிகள் பலருக்குப் பெண் என்றால் வெறுப்பு."

சாமி சிரித்தது.

"பெண்ணை வெறுப்பவனும் பொன்னை வெறுப்பவனும் மண்ணை வெறுப்பவனும் துறவியாக மாட்டான் பெண்ணே. வெறுப்பில் ஞானம் முகிழ்க்காது. மாறாக, அன்பில்தான் ஞானம் லபிக்கும். மனிதர், மரம், விலங்கு, எல்லாம் அவன் படைத்தவை என்கிற ஞானம் வந்தாற்பின் வெறுப்பு எங்ஙனம் வரும்?"

"சாமி... உங்கள் சிஷ்யர் என்ன பேசாமடந்தையா?"

"தலை இருக்கையில் வால் ஆடக் கூடாது என்று இருக்கிறான். அறிஞன் அவன். ஆகவே, அடக்கமாக இருக்கிறான்."

சாமி அவளிடம் கேட்டது :

"என்ன காரியமாக இங்கு வந்தாய் பெண்ணே?"

டைந்து. "சிறிது தூரம் நடந்து விட்டு வாங்க; திரும்பி வரும் போது, சமையல் தயாராக இருக்கும்" என்று சொன்னாள். சரி என்று முல்லா வெளியே வந்து தெருவில் நடந்தார். "சிறிது தூரம் என்றால் எவ்வளவு" என்று யோசித்த படியே நடந்தவர், ஊரின் எல்லையை நெருங்கிய போது, தம் தெருவில் வசிக்கும் ஒருவர் எதிரே வருவதைக் கண்டு, 'ஐயா என்னுடைய மனைவியைப் பார்த்தால், நான் ஊர் எல்லை வரை வந்து விட்டேன்; நடந்த தூரம் போதுமா? அல்லது இன்னும் நடக்க வேண்டுமா? என்று கேட்டு வந்து கூறுங்கள்' என்று சொல்லி விட்டுத் தம் நடையைத் தொடர்ந்தார்!

– 'முல்லாவின் வேடிக்கைக் கதைகள்' நூலிலிருந்து.

தகவல் : ஆர். பிரகாசம்

"ஒரு காரியமும் இல்லை சாமி. குகையில், பெரிய மகான் எழுந்தருளி இருக்கிறார் என்று ஜனங்கள் பேசிக் கொண்டார்கள். ஆகவே, தங்களைப் பார்த்து ஆசி பெற வந்தேன்."

சாமி அதிகமாக சிரித்தது.

"என்னை மகான் என்றா ஜனங்கள் சொல்கிறார்கள்? பாவம், ஜனங்கள் நல்லவர்கள். எங்களைப் போன்றவர்கள் எல்லாருமே மகான்கள் என்று அவர்கள் நம்புகிறார்கள். அப்படி இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். சிவனிடத்திலோ பாம்புகள் வெளியே. எங்களில் பலருக்கு உள்ளே. எத்தனைக் கசடர்கள், காவியில் உலகை ஏமாற்றிக் கொண்டு திரிகிறார்கள்? அம்மா, நான் ஒரு சாதாரண மருத்துவன். மகான் இல்லை. இதோ, இவன் அப்படி ஆகலாம். நான் இல்லை."

"சாமி, முற்றிய பயிர் தலைகுனிந்து நிற்கும். இளம்குருத்துகள் தலைநிமிர்ந்து நிற்கும். தாங்கள், மிகவும் அடங்கிப் பேசுகிறீர்கள். சாமி, தங்கம் பண்ணுகிறதாமே... ஊர் பேசுகிறது."

சாமி வருத்தம் தொனிக்கச் சிரித்துக் கொண்டு சொன்னது.

"கேவலம், இதை என் சாதனையாக ஜனங்கள் காண்கிறார்களே... சமர்ப்பவி. அந்த வித்தையையும் இவனுக்குக் காட்டிக் கொடுக்கலாம் என்றே ரசவாதம் செய்தேன். நான் ஒருமுறை, இவன் ஒருமுறை செய்தோம். தங்கத்தை நதியில் எறிந்தோம். அது ஒரு விஷயமே இல்லை அம்மா... பாம்பைப் பயிற்றுவது போல, தாயே. அது எஜமானுக்கும், எதிரிக்கும் வித்தியாசம் தெரியாத நச்சுப் பாம்பு அது..."

"ஓ.. உங்கள் சிஷ்யருக்கும் அது தெரியுமா, சாமி?"

"அவன் உத்தமன். அவனால் ஆகாதது வானத்துக்குக் கீழே எதுவும் இல்லை."

6

மழை, வெறிபிடித்துக் கொண்டாற்போல பெய்து கொண்டிருந்தது. சாமி, ஏதோ ஒரு இலையைத் தேடிக் கொண்டு மலை அடிவாரத்துக்குப் போயிருக்கிறது. மழைக் காலத்தில் மட்டும், மலைச்சாரலில் முளைக்கும் மோகினிச் செடி அது.

"அதன் பெயர் மோகினி என்று வரக் காரணம் என்ன சாமி?"

"குழந்தை. அது இரவில் மட்டும் கண்ணுக்குப் புலப்படும். கையில் எடுத்தால், மனதை மருட்டும். ஆசையைத் தூண்டும். உன்மத்தம் பிறக்க வைக்கும். தொட்டால், குளிர்ச்சி தரும். உள்ளுக்குள் உஷ்ணம் எரியும். மிகவும் விசித்திரமான மூலிகை அது. அதைத் துணி போட்டு மூடியே பறிக்க வேண்டும். பட்டுத் துணி. நிர்வாணக் கை, அதுக்கு ஆகாது..."

நிதி, நெருப்பை வளர்த்து குளிர்காய்ந்து கொண்டு அமர்ந்திருந்தான். அக்னி, நின்று நிதானமாக எரிந்து கொண்டிருந்தது. அதன் முன் சம்மணம் இட்டு அமர்ந்திருந்த நிதி, அக்னியின் நாக்கை ரசித்தபடி அமர்ந்திருந்தான்.

'அக்னி தேவா... உலக ஜீவனத்தின் ஆதாரமே. சகல அசுத்தங்களையும் தின்று, மனித குலத்துக்கு சாஸ்வதம் தரும் சிரஞ்சீவியே... உடம்புக்கு உள்ளும் வெளியிலும் இருந்து ஆத்மாவை ரஞ்சகப்படுத்தும் மூல பூதமே, உன்னை நமஸ்கரிக்கிறேன்...'

நெருப்பு, அவனை ஆதரிப்பது போல வெடித்துச் சிதறி, சப்தம் எழுப்பியபடி எரிந்து கொண்டிருந்தது. வெளியே மழை கொட்டித் தீர்த்துக் கொண்டிருந்தது. நிதி எழுந்து வெளியே வந்து பார்த்தான். இருட்டு உலகை விழுங்கியது போல, இருட்டே வெளியாக இருந்தது. சாமியைக் காணோமே என்கிற கவலை அவனுக்கு எழுந்தது. சாமிக்கு எந்தத் துன்பம் நிகழும்?

அக்னியின் முன் மீண்டும் வந்து அமர்ந்தான். வேத உபநிஷத்துக்கள் அக்னி பற்றிச் சொன்ன சுலோகங்களை ஒவ்வொன்றாக மனதுக்குக் கொண்டு வந்து, உருப் போடத் தொடங்கினான்.

வாசலில் அரவம் கேட்டது.

"சாமி" என்றபடி எழுந்தான், நிதி.

"சாமி இல்லை. நிதி. நான்தான், சமர்ப்பவி. சாமி இல்லையா? மழையில் எங்கே?"

சமர்ப்பவி வந்து அக்னியின் அருகே அமர்ந்தாள். தெப்பலாக நனைந்து இருந்தாள் அவள்.

"மழையில் அதிகம் நனைந்து விட்டீர்களா.



"எங்கம்மா இப்பவே என்னை உங்ககிட்டே 'ட்ரெயினிங்' எடுக்கப் போறியான்னு கேட்டாங்க."

"எதுக்கு?"

"கோள் சொல்றது, வத்தி வைக்கிறது, வீட்டுக்கு வீடு சண்டை மூட்டறது இதுக்கெல்லாம்...."

- சிரிசிரி முரளி

மாற்றுடை அணியுங்கள். இல்லையெனில், மழை உடம்புக்குள் நீர்க்கோவையை உண்டு பண்ணும். உலர்ந்த என் வேஷ்டி இருக்கிறது. உடுத்திக் கொள்கிறீர்களா?" என்று கேட்டான், நிதி.

"வேணாம் நிதி. வெயிலில் உலர்கிறோம். மழையில் நனைவது தப்பில்லையே."

"வெயில் வேறு. மழை வேறு."

"தெரியும் உங்கள் மருத்துவ அறிவு. சும்மா இருங்க."

சும்மா இருப்பது எளிதா என்ன? கட்டை உருவிக் கொண்டு துள்ளும் கன்றுக்குட்டி மாதிரி, மனமும் புலன்களும் ததும்பிக் கொண்டே இருக்கிறதே?

நெருப்புக்கு எதிரில், எரியாத நெருப்பாக அமர்ந்திருக்கும் நிதியைக் கவனித்தாள், சமர்ப்பவி. நெருப்பின் ஜுவாலை பட்டு, அவனைச் செம்மை செய்திருந்தது. சந்தனக் கட்டை மாதிரி இருந்த அவனிடம் கேட்டாள்.

"சிஷ்யரே?"

"என்ன சமர்ப்பவி?"

"நீர், ஸ்திரீ சுகம் கண்டதுண்டா?"

வியப்புடன் அவளை நோக்கினான், நிதி.

"இல்லை."

"அது அவஸ்யம் என்று தோன்றியது இல்லையா?"

"அது என்னவாய் இருக்கும் என்று அறியாதவர்க்கு ஆவல் எங்ஙனம் தோன்றும், பெண்ணே?"

"சிஷ்யரே. நீர், அந்த ஆச்சர்யத்தை இழந்து விட்டிருக்கிறீர், ஐயா. மனிதர் பெற வேண்டிய, அநுபவங்களில், ஆகச் சிறந்த ஒன்றை அடையாமல் இருக்கிறீரே? காலம், யௌவனம். உமது அந்த மூடிய கண்ணை இந்நேரம் திறந்து விட்டிருக்குமே..."

பாளம் பாளமாக வெடித்திருந்த அவன் அகன்ற மார்பை அவள் ஆர்வமுடன் நோக்கினாள். குழந்தைகளின் கண்களைப் போல, மாசு மருவற்று ஒளிர்ந்த அந்தக் கண்களை ஆசையுடன் பார்த்தாள்.

"சிஷ்யரே, என்னைப் பாரும்..."

உறை விட்டு நீங்கும் கத்தி மாதிரி தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருந்தாள், அவள். அக்னியின் ஜுவாலை பட்டுக் கத்தி ஒளிர்ந்தது. அக்னியின் சுடர் குறைந்தும் மிகுந்தும் எழுகிற போது, கத்தியின் தீட்டிய வெண்மை, பாம்பின் படம் போலும் அச்சம் கலந்த அழகைக் கொட்டியது. பாடப் புத்தகத்தில் மட்டும் அறிந்திருந்த அவயவங்களை நேரில் முதல் முறை பார்த்தான், நிதி.

"நிதி... என்ன பார்க்கிறாய்? உன் கண்களில் இருந்து எழும் தணல், என்னைக் கொதிக்க வைக்கிறது, புருஷா. இந்தக் கத்தியை எடுத்து வீசு. உன் பிரும்மச்சர்யம் என்கிற தடையை வெட்டிப் போடு. இந்த அனாவசிய கௌரவத் திரை நமக்குள் எதற்கு?"

திரை வேண்டாம் என்றுதான் நினைத்தான், நிதி.

7

கார் காலம் முடிந்து, பனி தொடங்கி இருந்தது. மலர்கள் மலர்ந்து, கொழித்திருந்தன. அரும்புகள் பூத்து, பூத்தவை காய்த்து, பழுத்தும் பருவ மாறுதலை, இயற்கை கொண்டாடிக் கொண்டிருந்தது. மண்ணைப் பிளந்து கொண்டு, ஆயிரக்கணக்கான தும்பிகள் வந்தாற்போல, காற்றை அடைத்துக் கொண்டிருந்தன.

குகை வாயிலில் உட்கார்ந்திருந்தது சாமி.

"இந்தக் குழந்தையை எங்கே காணும்?"

மதியம் போனவன் நிதி. இருட்டிக் கொண்டிருந்தது. இப்போது. உள்ளும் வெளியுமாக இருந்தது சாமி. கடைசியில் பூக் குடலையுடன் வந்து சேர்ந்தான்.

"குழந்தை. எங்கேயடா போயிருந்தாய்? என் கண்கள் பூத்து விட்டன."

"உச்சிக் கோயில் வரைக்கும் போயிருந்தேன், சாமி."

"சுவாமி தரிசனமா? ரொம்ப சரி."

சுவாமி, சோறு பொங்கி வைத்திருந்தது.

"சாமி, உங்களுக்கு ஏன் சிரமம்? நான் வடித்திருக்க மாட்டேனா?"

"பசியோடு வருவாய் என்றுதான். பசி ஆறினாயா, என்ன?"

"இல்லை சாமி."

"அப்போ, ஸ்நானம் செய்து விட்டு சாப்பிடு."

நிதி, பக்கத்தில் இருந்த அருவிக்குச் சென்றான். ஸ்நானம் செய்தான். வந்தான். சாப்பிட்டான். சாமி சொன்னது :

"குழந்தை, இன்னும் கொஞ்ச காலம். எனக்கு அழைப்பு வந்து விடும். அதுவரைக்கும் என்னுடனே இருடா, நிதி."

"சாமி, நான் எப்போதும் உங்களுடன் தானே இருக்கிறேன்?"

"சரி. ஏதோ என்னை விட்டு, தூரம் தூர மாகப் போகிறாயோ என்று எனக்குத் தோன்றுகிறது."

"அது பிரமைதான் சாமி."

"பிரமைதான். எல்லாமே பிரமைதான். நான், நீ, நம் கட வுள், எல்லாம். நம் ஆசை, நம் பற்று, நம் பாசம், காதல், எல் லாம்."

சாமி பொதுவாகச் சொன் னதாக இருக்கலாம். நிதிக்குச் சுருக்கென்றது.

8

நிதி ஒரு தவறைச் செய் திருந்தான். அதன் காரணமாக, இப்போதெல்லாம் சாமியைப் பார்க்கவே மனம் சங்கடப்பட் டது. அந்தக் குளிர்கால இர வில் நிகழ்ந்த அந்த முதல் அது பவம், தொடர் அநுபவமாகிக் கொண்டிருந்தது. பல சமயங் களில், இது வேணாமே என்று அவனுக்குத் தோன்றியது உண்டு. எனினும், சமர்ப் பவியை நேரில் காணும் போது அவன் வைராக்கியம் சிதறிப் போய்க் கொண்டிருந்தது. ஒரு நாள் சமர்ப்பவியைக் கோயி லில் சந்தித்தான்.

"என்ன நிதி, என்ன முக வாட்டம்? நான் கசந்து கொண் டிருக்கிறேனா?"

"இல்லை. குற்றமனப் பான்மை என்னை மருட்டு கிறது. சாமிக்கு இது தெரியக் கூடாதே என்று அஞ்சுகிறேன். அவரிடம் இயல்பாக என்னால் இருக்க முடியவில்லை. ஏன்?"

"இதைக் கள்ளம் என்று நீ நினைக்கிறாய்."

"கள்ளம் இல்லாமல் வேறு என்ன?"

"இது இயற்கை என்று எண்ணு. நீ உன் குருவிடம் சொல்லி விடேன். அவர் இதைத் தவ றாக எண்ண மாட்டார்."

"அப்படியா சொல்கிறாய்?"

அவனை அவள் ஆசுவாசப்படுத்தினாள். அவர்கள் சந்தோஷமாக இருந்தார்கள்.

"நிதி"

"என்ன பெண்ணே?"

"மருந்தீசர்க்கு நான் ஒரு கைங்கர்யம் செய்ய ஆசைப்படுகிறேன்."

"ஆகா. சுவாமி கைங்கர்யம் செய்."

"எனக்கு உன் உதவி தேவை."



"இறைப்பணிக்கு நான் உதவி செய் யாமலா?"

"மடைப்பள்ளியைச் சுவர் எழுப்ப வேண் டும். ஜனங்கள் வரும் பாதையைச் செப்பந் செய்ய வேண்டும். சுவாமிக்கு, அம்மைக்குத் தாலி செய்து போட வேண்டும். அம்மன் தாலிக்குப் பொன் வேண்டும்."

"ஒத்தைக் காசும் இல்லாத ஆள் நான்."

"இல்லை. நீ ஒரு தங்கச் சுரங்கம்."

"என்ன சொல்கிறாய்?"

"எனக்கு – எனக்காக அல்ல. சுவாமிக்காக தங்கம் செய்."

அவன் நடுங்கினான்.

ஆனால், அவன் ஒப்புக் கொள்ளும்படி ஆயிற்று. மடைப்பள்ளிக்கு மேற்குப்புறம் இருந்த பாழ் மண்டபத்தில் ரசவாதம் செய்வது என்று முடிவாயிற்று...

அன்று மறுநாள். சாமி, காலில் முள் தைத்துக் கொண்டு திரும்பியது. நிதி, முள்ளை எடுக்க அவர் பாதம் பற்றினான்.

"என்ன முள், சாமி."

"பயண முடிவைக் காட்டும் முள், குழந்தை."

"சாமி"

"பதறாதே. எனக்கு என் இறுதி நாள் தெரியுமடா. அழைப்பை எப்படி அறிவிப்பது என்பது சிவனுக்குப் பல நாள் குழப்பம். கடைசியாக முள்ளை அனுப்பி இருக்கிறான்."

"நான் எடுத்து விடுவேன், சாமி."

"தடுத்துவிடுவாயோ, பேதையே!"

சாமி சொன்னது உண்மையாகும் போல இருந்தது. அடுத்த நாள், அவர் உடம்பு காய்ந்தது. பிரக்ஞை அற்றுப் போகும் அளவுக்குக் காய்ச்சல் ஏறியது. கால், சுரைக்காய் மாதிரி வீங்கியது. விளாம்பழம் போல் பழுத்தது. நிதி, தான் அறிந்த எல்லா மருத்துவ முறைகளையும் பிரயோகித்தான். சாமி சிரித்தது.

"குழந்தே... சிவனுடன் போட்டி போடுகிறாயாடா, பேதையே! நீ வைத்தியன் மட்டும் தானடா. அவனோ வைத்தியநாதனடா."

"நிதி, தன் முயற்சியை நிறுத்தவில்லை.

அந்த நாளும் வந்தது. தொடர்ந்து மூன்று நாள் கண்மூடிக் கிடந்த சாமி, கண் விழித்தது. சாமி முகத்தில் அலாதியான பிரகாசம் தென்பட்டது.

"நிதி... பவுர்ணமி என்றைக்கடா?"

"நாளை, சாமி."

"நாளை, பௌர்ணமி ஏழாம் நாழிகைக்கு, என் உயிர் பிரியுமடா, குழந்தை."

"சாமி."

"மரணத்தை மகிழ்ச்சியுடன் எதிர் நோக்கு."

சாமி, நிதியின் கைகளைப் பற்றிக் கொண்டது. நிதி அழுதான்.

"காலம் அழகியது, குழந்தை. அதோ பார் தும்பிகள். வண்டுகள். ஆனந்தமாகத் தேன் குடிப்பதை."

"சாமி."

"சொல்."

"வண்டு, தேன் அருந்துவது இயற்கையா? அது பசிக்காகவா, ருசிக்காகவா?"

"என்ன கேள்வி இது. இயற்கைதானே. உண்பது, பசிக்காகவும் இருக்கலாம். ருசிக்காகவும் இருக்கலாம். இரண்டுமே புரிந்து கொள்ளக் கூடியதுதான், குழந்தை."

"அது அறநெறிக்கு முரண்பட்டதா?"

"இல்லை. கண் பார்க்கும். கை பணி செய்யும். வயிறு பசிக்கும். இதில் அறம் இருக்கிறது. முரண் இல்லையே."

"சுவாமி, இந்த வண்டுகளைக் காமி என்கிறார்களே. மலர்க்காமி என்கிறார்கள். காமம் பாவமா சாமி?"

"அது பாவம் என்றால், நம் தாய் தந்தையும் பாவியாடா, குழந்தை."

"சுவாமி" அவன் தேம்பினான்.

"மனசை போஷி. ஆனால் கடிவாளத்தை உன் கையில் வைத்துக் கொள். அது போதும். நிம்மதி பெறு. நீ உத்தமனடா குழந்தை. நீ தொட்டதெல்லாம் துலங்கும்."

அந்தக் கணமும் வந்தது. சாமி தெளிவாக இருந்தது.

"சாமி.. எனக்கு உபதேசம் என்ன?"

அவன் பணிந்து கேட்டான்.

"உன் வித்தை தோற்காது. தோற்றால், உன் மனம் சுத்தமாக இல்லை என்று பொருள்."

"சாமி. எனக்கு சஞ்சீவினி வித்தை ஒன்று பாக்கி இருக்கிறதாகச் சொல்லி இருந்தீர்கள்."

"நாளை, உனக்கே அது தெரியும்."

சுவாமி, பிரக்ஞை இழந்தது. சில வார்த்தைகள், அதனிடம் இருந்து வந்தது.

"இலை, தழை, மணம் வீசுகிறதடா. பூக்கள்.



"ஞாபகமறதி அதிகமாயிடுச்சி டாக்டர்?"

"எப்படிச் சொல்றீங்க?"

"ஒரு நல்ல டாக்டர்கிட்ட போகணும்னு நினைப்பேன். ஆனா திரும்பவும் உங்ககிட்டேயே வந்துடறேன்!"

- தேவிகணேஷ்



● சென்னை இராயப்பேட்டையிலே 'குகானந்த நிலையம்' என்றோரிடமிருந்தது. ஒருநாள் அங்கே பாரதியார் விஜயம் செய்தார். அன்பர் சிலர் அவரைப் பாடுமாறு கேட்டனராம். உடனே பாரதியார் எழுந்து நின்று கொண்டார். அவர் எதிரே சுப்பிரமணியர் படம் அழகாக அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்தது. அதைப் பார்த்துக் கொண்டே 'வருவாய் மயில் மீதினிலே' என்ற பாட்டைப் பாட ஆரம்பித்தார். பாட்டுப் பாடப் பாட, அங்கே உட்கார்ந்திருந்தவர்க்கெல்லாம் ஆவேசம் வந்து விடும் போலாயிற்று. 'இன்னும் சிறிது நேரம் பாடினால் எனக்கு ஆவேசம் வந்திருக்கும்' என்று ஒவ்வொருவரும் சொல்ல ஆரம்பித்து விட்டனர்!

- *'சக்திதாஸன் சுப்பிரமணியன்' அவர்கள் வெளியிட்டுள்ள 'பாரதி லீலை' என்ற நூலிலிருந்து.*

தகவல் : சைதை ஆர். முரளி



● ஒரு சமயம் அன்னை தெரசா நோய்வாய்ப்பட்டிருந்த போது டாக்டர்களிடம், ''நான் இறந்தால் நரகத்துக்குப் போக விரும்புகிறேன்'' என்றார். அவர் கூறிய காரணம் :

''நரகத்தில் எத்தனையோ மக்கள் துன்பத்தில் மூழ்கி இருப்பார்கள். அவர்களுக்கு ஆறுதல் கூறி, அவர்களின் துயரைத் துடைக்க, என் பணியை அங்கே தொடர விரும்புகிறேன்.''

ஆதாரம் : ''சொஸைட்டி''

தகவல் : வி. எஸ். கிருஷ்ணமூர்த்தி

எங்கும் பூக்கள்.''

சுவாமி அடங்கியது.

9

நதியில் மூழ்கி எழுந்தான், ஸ்ரீநிதி.

''நிதி. உனது குரு, ஒரு முள் குத்திக் காலமானாரே.''

அவன், சூரிய நமஸ்காரம் முடித்தான். பாழ் மண்டபம் நோக்கி நடந்தான்.

தங்கம் தயாராகி இருக்குமோ?

'இருக்க வேண்டும்.'

நிதி, ஸ்மரிக்க வேண்டிய மந்திரங்களை ஜபித்தான்.

ஸ்புடத்தை, ஜாக்கிரதையாகக் கலைத்தான். சாம்பலை ஊதினான். குச்சி கொண்டு, வெளிக்கொணர்ந்தான், உலோகத்தை.

வெகு ஆர்வமுடன், சமர்ப்பவி அதைக் கவனித்தான்.

செம்பு.

செம்பாகவே இருந்தது, செம்பு.

உட்கார்ந்தவன், அப்படியே இருந்தான்.

''என்ன சிஷ்யரே. பதம் கெட்டு விட்டதா? சேர்மானம் தவறிப் போச்சா?''

அவன் கற்சிலையென அமர்ந்திருந்தான். அவன் கண்களில் இருந்து, கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

''என்ன சிஷ்யரே, என்ன நடந்தது?''

அவன், மொழி மறந்தவன் போல் அந்த உலோகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''சிஷ்யரே.. இது போனால் என்ன? இன்னொரு புடம் வைத்தால் போச்சு.''

''இன்னொரு முள்ளா?''

''என்ன, முள்ளா? என்ன சொல்கிறீர்?''

''முள்! என் குரு இதயத்தில் நான் ஏற்றிய முள். ஒரு முள்ளாக நானே அவரைக் குத்தினேன்.''

அவன் எழுந்தான். நேராக, குருவைப் புதைத்த இடத்துக்கு வந்து நின்றான், நிதி.

''சாமி.''

''என்ன குழந்தை?''

''அந்தக் கடைசி சஞ்சீவினி வித்தையையும் கற்றுக் கொண்டேன்.''

சாமியின் சிரிப்பு காற்றில் கேட்டது.

''சாமி.''

''என்ன குழந்தை?''

''என்னை மொட்டாகக் கொண்டு வந்தீர்கள். புஷ்பமாக மலரச் செய்தீர்கள். நானோ, உங்களுக்கு முள்ளைத்தானே கொடுத்தேன். என் குரு தட்சணை, எத்தனை கொடுமையானது!''

சாமி சிரித்தது, மீண்டும்.

''என்னை மன்னிப்பீர்களா, சாமி.''

''குற்றம் எது? சரி எது? எல்லாம் பிரமை தானேடா குழந்தை. மனசை அடிக்கடி துடைத்துச் சுத்தம் செய்து கொள். அது போதும்.''

மாலை, சமர்ப்பவி குகைக்கு வந்தான்.

குகை இருந்தது. மனிதர் உலவிய சுவடு இருந்தது. நிதி இல்லை.

ஸ்புடம் போடும் சட்டிகள் உடைக்கப்பட்டிருந்தன.

ஸ்ரீநிதியை, அவன் அதற்குப் பின் பார்க்கவே இல்லை.

பார்க் டவுன்
பெனிபிட் பண்ட் லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம். துவக்கம் 1985
Post Box No: 2806

* 223, தங்க சாலை, (கந்தகோட்டம் அருகில்) பார்க் டவுன், சென்னை - 3 போன் : 582676, 584354

கிளை அலுவலகங்கள் :

* 2, கிழக்கு மாடவீதி, திருவான்மியூர், சென்னை - 41 போன் : 413582, 416417
* P-995, இரண்டாவது அவென்யூ, 12-வது மெயின்ரோடு ஜங்ஷன், அண்ணாநகர், சென்னை - 40 போன் : 6262656, 6280750
* 73, ரங்கநாதன் தெரு, தி.நகர், சென்னை - 600 017. போன் : 4344319
* 215, M.T.H. Road, அம்பத்தூர் பஸ் நிலையம், அம்பத்தூர், சென்னை - 53.



கனகதாரா டிபாசிட்

ரூ.50,000/- முதலீடு செய்வீர்
10ஆம் ஆண்டு முடிவில்
ரூ.50,000/- பெறுவீர்
அடுத்த 20ஆம் ஆண்டு முடிவில்
ரூ.1 கோடி பெறுவீர்

பிக்சட் டிபாசிட்

46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு *
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

21% 5 வருடங்கள் ரூ.50,000/- அதற்கு மேலும்

PB பாண்டு

முதலீடு	காலம்	திரும்பப் பெறும்தொகை
ரூ.25,000	60 மாதம்	ரூ.70,000

காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

டிபாசிட் திட்டம் 15 ஆண்டுகள்	5-ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	10ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	15ம் ஆண்டு பெறும் தொகை
Rs.6,320	Rs.6,000	Rs.6,000	Rs.56,320

வெகுமதி முதலீட்டுத் திட்டம் - II

ரூ.3450/- செலுத்துவீர்.
252 மாதங்கள் நிறைவில்
ரூ.2 லட்சம் பெறுவீர்.

செல்வக்களஞ்சியம்

டிபாசிட்	காலம்	வருவாய்
Rs.7,500	15 Yrs	Rs.1,25,000
Rs.9,000		Rs.1,50,000

பொற்குவியல் திட்டம்

டிபாசிட்	காலம்	வருவாய்
மாதா மாதம் ரூ.100/-	25 Yrs	Rs.3,00,000

சேமிப்பு திட்டம் 10% P.a.

மறு முதலீட்டுத் திட்டம்

உங்கள் தொகை 45 மாதங்களில் இரட்டிப்பு ஆகும்

டிபாசிட்	12 மாதம்	24 மாதம்	45 மாதம்	60 மாதம்
Rs.1,000	Rs.1,184	Rs.1,430	Rs.2,000	Rs.2,535



பென்ஷனர் நலத்திட்டம் 20% P.a.
ரூபாய் 10 ஆயிரமும் அதற்கு மேலும்: காலம் 1 ஆண்டு
வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

தங்க நகை கடன்
Rs. 3,000 PER 10 GRAM
விதிகளின் பேரில் கடன் வழங்கப்படும்.
(உச்ச வரம்பில்லை)

நிர்வாக இயக்குனர்:
P. பாலசுப்ரமணியம், B.Sc.
முதன்மை அறங்காவலர்
கந்தகோட்டம், சென்னை - 3.

இயக்குனர் குழுத் தலைவர்:
Dr.R. விவேகானந்தன், B.Com., M.B.A.

❑ ரூ.5/- செலுத்தி பங்குதாரர் ஆவீர். ❑ சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டும் ❑ வெள்ளி விடுமுறை

[redacted]





"நான் வோட்டுப் போடுவதால் நாட்டு நிலை மாறுமா?"

பதினெட்டு வயதிலேயே வோட்டுப் போடும் உரிமை நம் இளைஞர்களுக்குக் கிடைத்து விடுகிறது. இதை அவர்கள் எப்படிப் பயன் படுத்தப் போகிறார்கள்? அப்பா, அம்மா சொல்வதைக் கேட்டுச் செயல்படுவார்களா? சொந்தக் கருத்துகள் உண்டா? முதன் முதலாக வோட்டுப் போடுவதில் ஒரு த்ரில் இருக்கிறதா...? சில கல்லூரி மாணவர்களிடம் கேட்டுப் பார்த்தபோது....

வி. நித்யா :

த்ரில் இருக்கத்தான் செய்கிறது. ஆனாலும் முழுமையான மகிழ்ச்சி இல்லை. தேர்தல் முறை சிறப்பாக இருந்தாலும் சில விதிகளை மாற்றியே ஆக வேண்டும் என்று நினைக்கிறேன். வோட்டுப் போடவும் சரி, தேர்தலில் நிற்கவும் சரி... அடிப்படை கல்வித் தகுதி நிர்ணயிக்கணும். எல்லாரும் வோட்டுப் போடலாம் என்கிறப்போ நல்ல ஆட்சி கொண்டுவர முடியறதில்லை. தமிழ் நாட்டில் இதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். மேலும், ஜாதியையும் மதத்தையும் பயன்படுத்தி வோட்டுக் கேட்கிற பழக்கத்தை ஒழிக்கணும். ஆன்மிக அடிப்படையிலான அரசியல் கொள்கை இருப்பதில் தவறில்லை- ஆனால் ஜாதி உணர்வு தாண்டுவது விஷப் பரீட்சை!

இந்தத் தேர்தலில் அவசியம் ஆட்சி மாற்றம் வரணும். அதனால் நான் மூப்பனார் அணிக்கே வோட்டுப் போடுவேன். எதிர்காலத்தில், அந்தந்த தொகுதி மக்களே சுயேட்சைகளைத் தேர்ந்தெடுத்து தேர்தலில் நிறுத்தி, பதவியில் அமர்த்தலாம். இந்த யோசனை நடைமுறைக்கு ஒவ்வாத

இலட்சிய நோக்கு போல தோன்றுகிறதில்லையா...? ஆனால், அப்படியொரு நோக்கம் நமக்கு இருக்கணுங்க...

கே.பி.விபா:

தமிழ்நாட்டுல அளவில்லாம அராஜகம் நடந்திருக்கு... அடுத்து ஆட்சிக்கு வர்றவங்களாவது படிப்புக்கும் தொழில் வளர்ச்சிக்கும் தகுதிக்கும் திறமைக்கும் முக்கியத்துவம் தர்றவங்களா இருக்கணும். இது எப்படி சாத்தியம்னு புரியலை. இப்போதைய ஆட்சி திரும்பக் கூடாது; தி.மு.க.வை ஆதரிக்கலாம்னா அவங்க பழைய ரெகார்ட்ஸ் சரியில்லை; ம.தி.மு.க...? புலிகளைப் பாய விட்டுடுவாங்க... மூப்பனார்தான் கொஞ்சம் பிராமிஸிங்கா தெரியறார். கடைசில அவங்க கூட்டணியும் பல்டி அடிக்காம சண்டை போட்டுக்காம இருக்கணுமே...



ஆர்.எஸ். லட்சுமி:

நல்ல ஆட்சியே வராதான்னு ஏக்கமா இருக்கு.... ஆனால் பெரும்பாலானவங்க 'பாப்புலாரிட்டி' பார்த்துதானே வோட்டுப் போட றாங்க... ரஜினி மாதிரி பிரபலமா இருக்கிறவர் நல்ல ஆட்சியாளரா இருப்பார்னு உத்தரவாதம் கிடையாது. அதைப் பெரும்பாலான வாக்காளர்கள் உணராத வரை தேர்தலுக்கு அர்த்தமே இராது. அதுக்காக நான் வோட்டுப் போடாமல் இருந்துட மாட்டேன். ஆட்சியில் மாற்றம் அவசியம். அதனால் மூப்பனாருக்கே என் வோட்டு.

குமுதா :

"எல்லா அரசியல்வாதிகளுமே ஊழல் பேர்வழிகள்! யாருக்கு வோட்டுப் போடச் சொல்றீர்கள்? ஒன்றும் பிடிக்கவில்லை போங்கள்! வாக்காளர் பட்டியலில் போய் பதிவு செய்து கொள்ளக்கூட அலுப்பாக இருக்கிறது. அப்படியே என் பெயர் பட்டியலில் இருந்தாலும் நான் செல்லாத வோட்டுத்தான் போட்டுவிட்டு வருவேன்..! ஓர் ஊழல் அரசைத் தேர்ந்தெடுப்பதில் எனக்குப் பங்கு வேண்டாம். என் படிப்பு முடிப்பது முக்கியமான பணி. எதிலாவது அமரும்போது என்னால் இயன்றவரையில் அரசியல் சூழலில் சீர்திருத்தங்கள் கொண்டுவர முயற்சி செய்யலாம். குறைந்தபட்சம், அதைச் செய்வதற்கான அதிகாரம் பெற்றவர்களை அணுகி வற்புறுத்தும் நிலையிலாவது நான் இருப்பேன். இப்போது நான் சொன்னால் யார் கேட்பார்கள்? என் வோட்டினால் நிலைமை மாறிவிடுமா என்ன...?"

லக்ஷ்மி :

என் தந்தை தேர்தல் அலுவலராக இருந்திருக்கிறார். அதனால் இங்கு நடக்கும் தேர்தல்கள் எவ்வளவு அர்த்தமற்றவை என்று எங்களுக்கு நன்றாகவே தெரியும்! கல்லூரி மாணவர்களை அரசியல் கட்சிகள் மொத்தமாகக் குத்தகை எடுத்துக் கொண்டு விடுகின்றன. ஏழை இளைஞர்களோ காசுக்காக வோட்டுப் போடுகிறார்கள். அவர்களைச் சொல்லிக் குற்றமில்லை... வறுமை! எல்லாவற்றுக்கும் மேலாக சமூக விரோத சக்திகள் வேறு! கடைசியில், 'குண்டர்கள் வோட்டு'தான் முடிவுகளை நிர்ணயிக்கும்! இதில் நாம் போய் வோட்டுப் போடுவதில் அர்த்தம் என்ன இருக்கிறது? எங்கள் குடும்பமே வோட்டுப் போடப் போவதில்லை!

மாற்றங்கள்...? என்றைக்காவது ஒருநாள் வரும்... வரும்போது பார்த்துக் கொள்ளலாம்!

ஆர். பாஸ்கர் :

இதுவரைக்கும் ஆட்சியில் அமராத மூப்பனார் பேர்லதான் எனக்கு நம்பிக்கை இருக்கு.... அவ்வளவு உறுதியான காங்கிரஸ்காரர்- அவரே வெளியே வந்து விட்டார் என்னும்போது அங்கே எவ்வளவு ஊழல் நடந்திருக்கணும்...!

வி.எம். சத்தியநாராயணா:

எல்லாரும் திருட்டுப் பசங்க சார்! 'கொஞ்சமா தப்பு செய்தவங்களுக்கு வோட்டுப் போடு'ன்னு சொல்றாங்க. அது ரொம்ப தவறு. உத்தமமானவர்கள் வேண்டும். அப்படி யாருமே இல்லை. அதனால் செல்லாத வோட்டுதான் போட வேண்டும். என் எதிர்ப்பைத் தெரிவிக்க வேறென்ன செய்ய முடியும்?

என். வெங்கடேஷ் :

வேலை வாய்ப்புதான் கஷ்டம் என்றால், விரும்பிய படிப்பைக் கூடப் படிக்க முடியாத படிக்கு கல்விக் கொள்கை... இதை எந்த அரசாங்கம் வந்து சீர்படுத்துதோ அந்த கட்சிக்குத் தான் நான் வோட்டுப் போடுவேன். அதனால் இந்தத் தேர்தல் எனக்கு முதல் தேர்தல் இல்லை!


(இதே விஷயம் பற்றி 'சுஜாதா'வின் சிந்தனைகள் - அடுத்த வாரம்!)

- நமது நிருபர்கள்

அட்டையில் : **குமுதா.**


வண்ணப்படம் : **யோகா**

டிட்டி ®



பனியன்கள்
ஜட்டிகள்
பேண்டீஸ்
மற்றும்
T. ஷர்ட்ஸ்





குழந்தைகளுக்கென்றே
பிரத்யேகமான ஆடை வகைகள்!

H.O.	:	DITTY HOSIERIES, P.B. NO. 410, TIRUPUR. Ph : 21611
Madras	:	DITTY KNITTERS, STN Road, West Mambalam. Ph : 483 9816
Madurai	:	DITTY HOSIERIES , 157 South Masi St., Madurai - 625 001
Bangalore	:	DITTY KNITTERS, Cubbonpet, Bangalore - 2. Ph : 2216208

ஆளுக்கொரு பூங்கொத்து!

♦ ஒரு வார்த்தை சொன்னால் லட்சம் வோட்டுக்களா? இல்லை... கோடி ஐயா, கோடி! ரஜினி கட்டளை இடட்டும்! கோடி வோட்டுக்கள் கொட்டோ கொட்டென்று கொட்டும்!
மதுரை-16, சிதா மகன்.

♦ சூப்பர் ஸ்டார் ரஜினி ஒரே ஒரு வார்த்தை சொன்னால் ஒரு லட்சம் வாக்குகள் கண்டிப்பாக அவர் குறிப்பிடும் கட்சிக்கு விழும் என்பதில் சந்தேகமே இல்லை. நேற்று வரையில் வரம் தந்திடாத கடவுளாக இருந்தவர், இப்போது ஜெயலலிதா அரசை விரட்டிட குரல் கொடுத்திருக்கிறாரே! சந்தோஷப்படுவோம்!
பெங்களூர்-21, ப. மூர்த்தி.

♦ தமிழகத்தில் ஊர்ந்து கொண்டிருக்கும் அரசியல் விஷப் பாம்புகளை மகுடி ஊதிப் பெட்டிக்குள் அடைக்க முற்படாமல், பாலூட்டி வளர்த்திட முனையும் அறிவீனமான செயலைக் கண்டித்துப் பிரதமரை எச்சரிக்கும் தங்கள் தங்கத் தலையங்கம் மெச்சற்குரியது!
இனாம் மணியாச்சி, ச.ஆ. கேசவன்

♦ தலையங்கம் படித்தேன். கருணாநிதி மட்டும் தவறே செய்யாதவரா? அவரே கூட 'தேனெடுத்தவன் புறங்கையை நக்காமலா இருப்பான்?' என்று பேசி இருக்கிறார். 'ஹவாலா காங்கிரஸ்' என்று குறை கூறிய கருணாநிதியே 'காங்கிரஸுடன் திறந்த மனதுடன் பேசத் தயார்' என்று கூறக் காரணம் பதவி ஆசை அன்றி வேறென்ன? கூட்டணி என்பதே கூட்டுக் கொள்ளை தான். கருணாநிதியும் ஜெ.வும் ராவும் தனித்தனியாக மக்களிடம் வோட்டுக் கேட்கத் தயாரா என்பதே என் கேள்வி!
வெங்கிட்டாபுரம், என். குப்புசாமி.

♦ சுஜாதா பக்கம் படித்தேன். பூமித்தாய் குறித்து கெய்யா தத்துவம், லவ்லாக் சித்தாந்தம் என்று பல அறிவியல் கருத்துக்களை அள்ளித் தெளித்திருக்கிறாரே! "நிலமென்னும் நல்லாளைப் பாளம் பாளமாய்ச் செதுக்கி, நமது பிற்காலச் சந்ததியினருக்கு நாம் இப்போதே மரணப் படுகுழிகளை வெட்டி வைத்து விட்டுத்தான் மரிக்கப் போகிறோம்" என்ற அவரது நியாயமான அச்சம், சுற்றுச் சூழலில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட ஒவ்வொரு மனிதனின் உள்ளக் கருத்தைப் பிரதிபலிப்பதாக அமைந்திருந்தது. ஹாட்ஸ் ஆப் சுஜாதா!
மதுரை-14, எஸ். வைத்தியநாதன்.

♦ விறுவிறுப்பான சிறுகதை வடிவில், மிக எளிமையாக, அனைவரும் புரிந்து கொள்ளும் வண்ணம், கம்ப்யூட்டரில் 'மசங்கல்' தத்துவம் பற்றி விளக்கமான கட்டுரை வழங்கிய இரா. முருகனுக்குப் பாராட்டுக்கள்.
சென்னை-78, சி. பூங்கோதை.

♦ இலங்கையின் செல்வர்களை (குருசிங்கே, டிசில்வா) பழுவேட்டரையர்களுடன் ஒப்பிட்டு மெய்சிலிர்க்க வைத்து விட்டீர்கள்!
அரக்கோணம், எல். கோபாலகிருஷ்ணன்.

♦ மென்மையான பெண்களுக்கு வெயிட் லிப்டிங் எல்லாம் எப்படி சரிப்பட்டு வரும் என்ற கேள்விக்கு, பழகப் பழக எதுவும் சாத்தியம் என்ற சூர்யப்ரபாவின் பதிலில் அசாத்திய தன்னம்பிக்கை சுடர் விட்டது!
நாமக்கல், பைஸ்அஹமத்.

ரூ. 20 பரிசு பெறும் கடிதம்

♦ ரூபன்பாலுக்கு வேண்டுமானால் 'பாலிடிக்ஸ்' என்று சொல்லப் பிடிக்காமலிருக்கலாம். ஆனால் உண்மை நிலவரம் அது தான். என்று தனிப்பட்டவர்களின் விருப்பு, வெறுப்புக்கள் ஒழிக்கப்பட்டு அணித் திறமைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதோ, அன்று தான் இந்திய கிரிக்கெட் அணிக்கு விமோசனம்!
அரசரடி, வி. சிவா

♦ 'பூவே உனக்காக' படத்தை இவ்வளவு நேர்த்தியாக இயக்கிய விக்ரமனுக்கும், அதை தெள்ளத் தெளிவாக விமர்சனம் செய்திருக்கும் உமக்கும் தனித்தனியாக ஆளுக்கு ஒரு பூங்கொத்தே கொடுத்து வாழ்த்தலாம்.
இராமேஸ்வரம், மு. முருகேசன்.

♦ "தாவணி" கதையில், புருஷனை இழந்த கைம்பெண்ணான அஞ்சலை, தன் பெண் குழந்தைகளோடு அன்றாடம் போராடும் வாழ்க்கைச் சூழலைப் படிக்கும் போது வேதனையாக இருந்தது. முத்தம்மாவின் மனித நேய அனுசரணை கதையோட்டத்திற்கு உயிர் தந்தது.
பழவந்தாங்கல், நெல்லை மணிபாரதி.



* அரசாங்கப் பஞ்சாங்கம்!

பஞ்சாங்கம் பார்ப்பது என்பது நம் நாட்டில் - இந்துக்களிடம் மட்டும் இருக்கிற பழக்கம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். இல்லை. லண்டனிலுள்ள 'ராயல் ஆப்ஸர் வேட்டரி' என்கிற விண் இயல் ஆய்வு அமைப்பு, தொலைநோக்கி மூலம் கிரகங்களின் சுழற்சியை அறிந்து, விவரங்கள் குறிக்கிறது. இதன் அடிப்படையில் 'ரஃபேல் ஆல்மனாக்' என்கிற ஆங்கிலப் பஞ்சாங்கம் அங்கே வெளியிடப்படுகிறது.

பஞ்சாங்கம் குறிப்பது என்பது நம் நாட்டில் யுகம் யுகமாக இருந்து வரும் பழக்கம். நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு வரை, பஞ்சாங்கம் கணித்தவர்கள், ஓலைச்சுவடிகளில் எழுதி வைத்து வந்தார்கள். அச்சடித்த பஞ்சாங்கம், முதலில், தமிழில் வெளிவரத் தொடங்கியது 1887-ம் ஆண்டில். 'மனோன்மணி விலாச அச்சுக் கூட'த்தார் தயாரித்த இப்பஞ்சாங்கம், 'கவ' அணா விலை கொண்டது. அதாவது ஒன்னே கால் அணா! (இன்றைய மதிப்பில் எட்டு பைசா!)

பின்னாளில் பிரபலமான இந்தப் பாம்புப் பஞ்சாங்கம் தொடங்கின அதே காலகட்டத்தில் (ஏறத்தாழ) தான் ஆனந்த போதினி (தற்போதைய வாசன்) பஞ்சாங்கம், ஸ்ரீரங்கம் பஞ்சாங்கம், புதுக்கோட்டை சமஸ்தானப் பஞ்சாங்கம், திருநெல்வேலி வாக்கியப் பஞ்சாங்கம், யாழ்ப்பாணப் பஞ்சாங்கம் ஆகியவையும் வெளிவரத் தொடங்கின. காஞ்சிபுரம் மடத்துப் பஞ்சாங்கம் எல்லாம் சமீப காலமாகத்தான் - ஐம்பது வருஷமாக.

பஞ்சாங்கம் எப்படி கணிக்கிறார்கள்?

பஞ்சாங்கம் என்பது, ஒருவித வானியல் கணக்கு. கிரகங்களின் நிலை, அவை நகரும் விதம், நேரம் இவைகளை அடிப்படையாகக் கொள்கிறார்கள். திருக்கணித முறை மற்றும் வாக்ய முறை என இரு முறைகளில் கணிக்கிறார்கள்.

வாசன் பஞ்சாங்கம், திருக்கணித முறையில் தயாராவது. மற்றவை வாக்ய முறை.

முன்னாளில், முன்னோர் இது பற்றி எல்லாம் விவரமாக எழுதி வைத்துள்ள ஓலைச் சுவடிகளே கணிப்பு முறைக்கு அடிப்படை.

இந்த ஓலைச் சுவடிகளை ஆராய்ந்து அறுபதுகளில் 'வாக்ய கர்ணா' என்னும் நூலை டி.எஸ். குப்பண்ண சாஸ்திரிகள், கே.வி. சர்மா இருவரும் இணைந்து எழுதி, வெளியிட்டிருக்கிறார்கள். இந்த 'வாக்ய கர்ணா'வுக்கு ஆதாரம், 'ஆர்ய பாடியம்' என்கிற வானியல் நூல்.

இவற்றின்படி, ஒரு ஆண்டுக்கு 365.258681 நாட்கள் என்று கணக்கு சொல்கிறார்கள். நவீன முறையில் 365.256360 நாட்கள் என்று மாற்று

லண்டனிலும் பஞ்சாங்கம்!

மயக்கி விட்ட தொடர்!

• புதிய கோணத்தில் சிந்தித்து, வாரா வாரம் நல்ல சஸ்பென்ஸ் வைத்து, தம் எழுத்தாற்றலில் கட்டிப் போட்டு விட்டார் ரமணிசந்திரன். தாம்பத்திய உறவு, நட்பு, மாமியார்-மருமகள் இடையே வாத்சல்யம் போன்ற நல்ல உணர்வுகளைப் பின்னி மனிதநேயத்தில் உயர்ந்து நின்ற கதை.

திருவான்மியூர், கீதா கணேசன்.

• உதயரேகாவின் முகம் செக்கச் சிவந்து போயிற்று என முடிக்கின்றார் ரமணிசந்திரன். மாலை மயங்குகின்ற நேரம் தொடரை 25 வாரங்களாகப் படித்து முடித்த வாசகர்களின் உள்ளம் உருகித்தான் போயிற்று.

கல்யாணபுரம், அ. சம்பத்.

• பொதுவாக தற்பொழுது வெளிவரும் கதைகளில் ஆண்களைத் தவறாகச் சித்திரிக்கும் போக்கு அதிகரித்து வருகின்றது. இக் கதையைப் பொறுத்தமட்டில் கேசி நல்லவன்தான் என்பதை அறியும் பொழுது மனதிற்கு ஆறுதலாக இருந்தது. எழுதிய ரமணிசந்திரன் அவர்களுக்குப் பாராட்டுக்கள்!

திருச்சுழி, சுந்தர் அழகேசன்.

• தொடர் நன்றாகவே இருந்தது. ஆனால் இன்னும் அதிகமாக எதிர்பார்த்தேன், ரமணிசந்திரனிடம். சற்று ஏமாற்றம்தான்!

வடலூர், ஆர். தமிழரசி.

• 'மாலை மயங்குகின்ற நேரம்' தொடரில் இறுதிப் பகுதி படிக்கும் போது, முடிவில்லா அஸ்தமனம் வந்து விடுமோ என்று கலங்கினேன். ஏழு நாட்கள் மூச்சைப் பிடித்துக் கொண்டு கதையின் முடிவுக்காகக் காத்திருந்தேன். அந்தி நேரத் தென்றல் போல் சுகமான முடிவு. ரமணிசந்திரனுக்கு மனம் கனிந்த பாராட்டுதல்கள்.

சென்னை - 88, எஸ். விஜயலக்ஷ்மி.

• 'மாலை மயங்குகின்ற நேரம்' தொடர் எங்கள் மனதை முழுமையாக ஆக்கிரமித்து மயக்கி விட்டது.

மொரட்டுப்பாளையம்,
க. நா. இராஜேஸ்வரன்.

அபிப்ராயம் உண்டு.

பொதுவாக, கடற்கரையை ஒட்டிய திருக்கோவில் திருவிழாக்களை, 'திதி'யை வைத்துக் கணிக்கிறார்கள். கடற்கரை இல்லாத நகரக் கோவில் விழாக்கள்? நட்சத்திரங்களை வைத்து.

பஞ்சாங்கங்களில் ஒவ்வொன்றுக்கும் இடையே சில வேறுபாடுகள் உண்டு. அந்தந்தப் பஞ்சாங்கம் தயாரிக்கப்படும் இடத்தின் ரேகை, நேரம் அளவுகள் மாறுபடும் அல்லவா? அதனால் சிறிய வித்தியாசம் இருக்கும்.

நம் நாட்டில், மத்திய அரசே ஒரு அரசாங்கப் பஞ்சாங்கம் வெளியிடுகிறது! 'ராஷ்ட்ரீய பஞ்சாங்கம்' என்று அஸ்ஸாமி, உருது, தெலுங்கு, தமிழ், ஒரியா, கன்னடம், மலையாளம், மராத்தி மொழிகளில் இது வெளிவருகிறது.

இது தவிர, பஞ்சாங்கம் கணிக்க உதவும் சூர்யோதயம், அஸ்தமனம், சந்திரோதயம், அஸ்தமன விவரங்களை ஒரு அட்டவணையாக இந்திய வானியல் ஆய்வுத்துறை வெளியிடுகிறது.

பிறநாடுகளில் வசிக்கும் நம்மவர்களுக்கு நம் நாட்டுப் பஞ்சாங்கங்கள் எப்படி உபயோகமாகும்?

அந்நாட்டு நேரப்படி சற்றுக் கூட்டியோ, குறைத்தோ கணக்கு பண்ணிக் கொள்ள வேண்டியதுதான். இதற்காக 'தேசாந்திர சம்ஸ்காரம்' என்றொரு அட்டவணை தரப்படுகிறது, காஞ்சி மடத்துப் பஞ்சாங்கத்தில்.

பஞ்சாங்கக் கணிப்பு, ஆண்டு முழுவதும் நடப்பது இல்லை. ஆகஸ்டிலிருந்து ஜனவரி வரைதான். விதிவிலக்காக, காஞ்சிபுரம் மடத்துப் பஞ்சாங்கம் மட்டும் ஆண்டு முழுவதுமே கணிக்கப்பட்டுத் தயாராகிறது என்று இதன் பொறுப்பாளர் பி.என். கிருஷ்ணையர் சொன்னார்.

பஞ்சாங்கக் குறிப்புகளை ஓர் ஆண்டுக்குக் கணக்கிடவே ஆறு மாதங்கள் ஆகிறதாம். அதன் பிறகு, காஞ்சிப் பெரியவர், அறிஞர் குழுவுடன் இதைச் சரி பார்த்துத்தரக் கூடுதலாக இரண்டு மாதங்கள். பிறகு அச்சுப் பணி தொடங்கும் என்று இதன் தயாரிப்புப் பணியில் இருக்கும் கே. நரசிம்மன் தெரிவிக்கிறார்.

பஞ்சாங்க அட்டைகள் எப்போதும் ஒரே மாதிரி இருப்பினும் அச்சுமுறைகளில் அபார வளர்ச்சி வந்து விட்டது. அச்சு கோக்கிற சங்கடமெல்லாம் இப்போது தவிர்க்கப்பட்டு இப்போது நவீன டெஸ்க் டாப் பப்ளிஷிங் முறையில் தயாரிக்கிறார்கள். 'பழைய பஞ்சாங்கம்!' என்று யாரையும் இனி வசவு செய்ய முடியாது!

— சுப்ரபாலன்

பதிவு எண்: 26383 போன்: 583241

கல்பதரு பெனிபிட் பண்டு லிமிடெட்

(கம்பெனிகள் சட்டப்படி பதிவு செய்து நிறுவப்பட்டது)
பதிவு அலுவலகம்: 134, ராசப்ப செட்டி தெரு, ☎ 5353241
(ஸ்ரீ கந்தகோட்டம் அருகில்) பார்க் டவுன், சென்னை-600 003.

பிக்சட் டிபாசிட் திட்டம் மாத வட்டிக்கான காசோலைகள் முன் கூட்டியே வழங்கப்படும்

காலம்	46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு
வருட வட்டி வீதம்	14%	15%	16%	17.5%	18.5%	19%	19.5%	20% *



குபேரன் வைப்பு திட்டம்


வட்டி 21% குறைந்த அளவு டிபாசிட் ரூ. 50,000/- காலம் : 5 வருடம்.
மாத வட்டிக்கான செக்குகள் முன்னதாகவே வழங்கப்படும்

அமுத சுரபி டிபாசிட் திட்டம்



டிபாசிட் தொகை	காலம்	கிடைக்கும் தொகை
ரூ. 5,600	15 வருடம்	ரூ. 1,00,000
ரூ. 7,000		ரூ. 1,25,000

கல்பதரு மணிபேக் திட்டம்



அ) பிரதி மாதம் ரூ.100/- வீதம் தொடர்ந்து 15 வருடம் செலுத்த வேண்டும்.
முதல் 5ம் ஆண்டு முடிவில் நீங்கள் செலுத்திய ரூ. 6000/-ஐ பெறுவீர் !
2வது 5ம் ஆண்டு முடிவில் மீண்டும் ரூ.6000/-ஐ பெறுவீர் !
3வது 5ம் ஆண்டு முடிவில் ரூ.51,000/-ஐ பெறுவீர் !



முதியவர் நலத்திட்டம்: வயோதிகர் விதவைகள் கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

தொகை	காலம்	வட்டி வீதம்
ரூ. 10,000	12 மாதங்கள்	**20%**
ரூ. 10,000 கீழ்		**19%**

சேமிப்பு டிபாசிட் திட்டம் - 10% வரை வட்டி வழங்கப்படும்



கடன் நகைகள் பேரில் கிராம் 1க்கு ரூ.300/- வழங்கப்படும் சென்னை மாநகரில் உள்ள சொத்துக்கள் பேரிலும் வழங்கப்படும் — **வட்டி விகிதம் ரூ.1.95**

அலுவலக நேரம் : காலை 8.30 முதல் 12.30 வரை மாலை 2.00 முதல் 6.00 வரை ஞாயிறு காலை 8.30 முதல் 12.30 வரை

பயன் பெற ரூ. 5/- செலுத்தி பங்குதாரர் ஆவீர். (செவ்வாய் விடுமுறை) பாதுகாப்பு • சேவை • சுபிட்சம்

நீங்கள் கேட்டவை — தராசு

பிரதமருக்கு நடந்த அபிஷேக ஆராதனைகள் பற்றி?

● எஸ். கோவிந்தசாமி, சீர்காழி.

? எந்த முகத்தை வைத்துக் கொண்டு காங்கிரஸ்காரர்கள் தமிழக மக்களிடம் வோட்டுக் கேட்பார்கள்?

! அதனால்தான் தமிழ் மாநில காங்கிரஸ் உதயமாகி இருக்கிறது. அதன் முகம் கம்பீர அழகுடன் திகழ்கிறது.

● டி.வி.எஸ். பாலு, சித்தமல்லி.

? மாண்புமிகு பாரதப் பிரதமருக்குக் கடந்த 28.3.96 அன்று சென்னை சத்தியமூர்த்தி பவனில் நடைபெற்ற அபிஷேக ஆராதனைகள் பற்றி...?

! அநாகரிக கலாசாரத்துக்குத் துளியும் பழக்கப்படாத காங்கிரஸ் தொண்டர்களே இப்படியெல்லாம் நடந்து கொண்டார்கள் என்றால், அவர்கள் எவ்வளவு தூரத்துக்கு நொந்து போயிருப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்!

● சி. பூங்கோதை, சென்னை — 78.

? உலகக் கோப்பையை வென்ற இலங்கை அணியின் கிரிக்கெட் வீரர்கள் பெயரில் தபால்தலை வெளியிட இலங்கை அரசு முடிவு செய்துள்ளதாமே?

! ஊக்கம், பாராட்டு, உற்சாகம் அளிப்பது என்றால் இதுவல்லவா! இலங்கை அரசை வாழ்த்துவோம். தொடர்ந்து சிங்கர் கோப்பை முதல் போட்டியில் மூன்று உலக சாதனைகள் நிகழ்த்தியிருக்கிறார் ஜெயசூர்யா. அவருக்கு ஒன்றுக்கு மூன்றாகத் தபால் தலைகள் வெளியிடலாமே!

● ஆர். சுப்பாராவ், திருக்கோவலூர்.

? இம்முறையேனும் ஊழல் மன்னர் நரசிம்மராவின் புதிய அமைச்சரவையில் அன்பரசு இடம்பெறுவாரா?

! ராவ் மறுபடி அமைச்சரவை அமைப்பார் என்கிறீர்களா...? எனக்கு நம்பிக்கையில்லை!

● இரா. கல்யாணசுந்தரம், மதுரை — 9.

? 'ஜெ'வைத் திட்டிக் குவித்த காளிமுத்துவும் திருநாவுக்கரசும் சந்தித்துக் கொண்டால்...?


! வாய்ச் சொற்களும் பேச வேண்டுமோ! ஒரு சின்ன புன்னகை மூலமே ஆயிரமாயிரம் அர்த்தங்களை அவர்கள் பரிமாறிக் கொள்ளலாம்!

● என். புவனேஸ்வரி, மதுரை — 1.

? தனித்தே போட்டியிடுவோம் என அ.தி.மு.க. மாநாட்டில் முழங்கிய முதல்வர், காங்கிரஸுடன் கூட்டணி ஏற்படுத்திக் கொண்டது ஏன்?



• சந்தித்துக்...



• ....கொண்டால்...?

! அதே மாநாட்டின் போதுதான் அரசியலில் நிரந்தரப் பகைவனோ நண்பனோ கிடையாது என்று பேட்டி கொடுத்திருக்கிறார் முதல்வர். தொடர்ந்து கிடைத்த சி.ஐ.டி. ரிப்போர்ட் மற்றும் கருத்துக் கணிப்பு அளித்த அதிர்ச்சியில், பயம் பிடித்துக் கொண்டிருக்கும்.

● ராமு, சென்னை — 90.

? இப்போது சொல்லுங்கள் — ராஜ தந்திரி யார்? முன்னாள் முதல்வரா? இந்நாள் முதல்வரா? பிரதமரா?

! காமராஜரின் சீடர்!

● டி. சந்திரன், ஈரோடு. ❒

? 'வோட்டுப் போடுவதை விட போடாமல் இருப்பதே மேல்' என்ற எண்ணம் ஏற்படுகிறதே... என்ன காரணம்?


! மனச்சோர்வு என்பதைக் காட்டிலும் பொறுப்பிலிருந்து நழுவுதல் என்றே இந்த மனப்பான்மையைக் குறிப்பிட வேண்டும். கஷ்டமான முடிவு என்பதற்காக



• ராஜதந்திரி!



• அவ்வப்போது அறிக்கை!



• சந்தோஷம் குறைந்தவர்!



• அமைச்சர் ஆவாரா?

ஒரு முடிவுமே எடுக்காமலா இருப்பது!

● எம். பாக்கியமுத்து, திருச்சி – 20.

? "ப.சி., மூப்பனார், குமரி, எஸ்.ஆர்.பி. ஜெயந்தி நடராஜன், பீட்டர் அல்போன்ஸ் என்று ஒருவர் விடாமல் அத்தனை பேரும் காங்கிரஸிலிருந்து வெளியேறி, தமிழக காங்கிரஸ் என்று தனியாக ஆரம்பித்து, நேர்மையுடன் வழிநடத்தி... செய்வார்களா தெரியாது; செய்ய வேண்டும்" – தராசுவின் இந்த ஆசை (கல்கி24.3.96) நிறைவேறும் போலிருக்கே....?



• கோபத்துடன் 'குட்பை'!

! அசிங்கமாக நடந்து கொண்டு குமரியார் சந்தோஷத்தைக் கொஞ்சம் குறைத்து விட்டார்!

● சீதாமகன், மதுரை – 16.

? தமிழக காங்கிரஸ் பெரும் புள்ளிகளை எண்ணி, 'ஐயோ பாவம்!' என வருந்தினீர்களா?

! மூப்பனாரை நினைத்தபோது உண்மையிலேயே சற்று மனம் கலங்கத்தான் செய்தது. காமராஜ் காலத்திலிருந்து கட்சிக் கட்டுப்பாடு கலாசாரத்தில் வந்தவர், இன்று அதை மீறும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார். இது எத்தகைய மனவேதனையை அவருக்கு அளித்திருக்கும்!

● க.க.வே. சித்திரவேலு, கருப்பம்புலம்.

? எம்.டி. வாசுதேவன் நாயருக்கு ஞானபீட விருது அறிவிக்கப்பட்டதும், கேரள முதல்வர் ஆன்டனி அவர் வீட்டுக்கே போய் காத்திருந்து வாழ்த்தினாராமே... தமிழ்நாட்டில் இப்படி நடக்குமா?

! தமிழ்நாட்டில் வரவேற்றுப் பின்பற்றப்பட வேண்டிய முன்னுதாரணம்தான் எனினும் ஒரு முதல்வர் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. காக்க வைக்கப்படவும் கூடாது.

● எம். குமார், பரமத்தி.

? தமிழக மக்கள் மீது உண்மையில் அக்கறையிருந்தால் ரஜினி அரசியலுக்கு வரவேண்டியதுதானே! எதற்காக அவ்வப்போது அறிக்கை மட்டும் விடுகிறார்?

! நேரடியாக அரசியலுக்கு வராமல் வெளியிலிருந்து செயல்படுவது ஒருவகை ராஜதந்திரம்.

● என். ராஜா, பெங்களூர் – 10.

? பெற்ற மகன்களைக் காப்பாற்ற மத்திய அரசும் வளர்ப்பு மகனைக் காப்பாற்ற மாநில அரசும் பாடுபடும் போது நாட்டு மக்களை யார் காப்பாற்றுவார்?

! இத்தகையவர்களிடமிருந்து நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ளக் கிடைத்திருக்கும் அருமையான சந்தர்ப்பம்தான் தேர்தல்!

● ஆர். ஸ்வர்ண சுபா, திருநெல்வேலி – 11.

? சேஷனிடம் எந்த நம்பிக்கையில் தம்பர் (?) நிற்கிறார்?

! நிச்சயம் டெபாஸிட் கிடைக்கும் என்ற நம்பிக்கையில்தான்!

● எம். சந்திரசேகர், மேட்டுமகாதானபுரம்.

? மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் அறிக்கை மிகத் தெளிவாக இருப்பது பற்றி...?

! கம்யூனிஸ்டுகள் எப்போதுமே கொள்கை விஷயங்களில் தெளிவாகத்தான் இருப்பார்கள். குழப்பம் வருவதெல்லாம் கூட்டணி விஷயத்தில்தான்!

● எம். இராஜேந்திரன், இலால்குடி.

? 'தூக்கில் தொங்கினாலும் தொங்குவேன் – 'ஜெ'யின் அ.தி.மு.க. கட்சியில் சேர மாட்டேன்' என்று சொன்ன திருநாவுக்கரசு மீண்டும் சேர்ந்து விட்டாரே?

! தற்கொலை முயற்சி குற்றமாகிவிடும் என்பதால் தன்மானத்தை மட்டும் சாகடித்துக் கொண்டார் போலிருக்கிறது! பணத்தாசையும் பதவியாசையும் அருவருப்பான நடத்தையின் உச்சத்துக்கே கொண்டு சென்று விடுகின்றன...!

● ரொசாரியோ ரவிச்சந்திரன்,
சென்னை – 59.

? மனோஜ் பிரபாகர் முதல்தர கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்திருப்பது குறித்து...?

! குறையில்லாத மனிதர்களே இருக்க முடியாது; ஓய்வு பெறாமல் ஒருவர் தொடர்ந்து பணியாற்றவும் முடியாது. போகிறபோக்கில் புலம்பி, புழுதி வாரித் தூற்றி விட்டுப் போவானேன்! கௌரவமாக 'குட்பை' சொல்லியிருக்கலாம்.

● ஆர். முருகானந்தம், எஸ். மாரியூர்.

? மக்கள் சக்தி இயக்கம் தமிழகத்தில் ஆட்சியைக் கைப்பற்றினால்...?

! அதற்கு அவர்களே முயற்சி செய்யவில்லை! மூன்று நான்கு தொகுதிகளில் ஜெயித்து தகுதிவாய்ந்த உறுப்பினர்களை அனுப்பினாலே போதும்; ஆரோக்கியமான சூழலை சட்டசபையில் புகுத்த முடியும்.

❒ ரூ 25 பரிசு பெறுபவர் :
டி. சந்திரன்,
15, ஈசுவரன் கோயில் தெரு,
ஈரோடு - 1.

'மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா'

SRI RAJA RAJA CHOLAN MUTUAL BENEFIT FUND LTD.

ஸ்ரீ ராஜ ராஜ சோழன்

தம் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவிக்கிறார்

எங்களின் சிறப்பு அம்சங்கள்

★ பெரிய மூலதனத்தைக் (PAID-UP CAPITAL) கொண்டது. (ரூ.2,80,250)

★ மூன்று தலைமுறையாக வியாபாரத்தில் தேர்ச்சி பெற்ற குடும்பத்தைச் சேர்ந்த டைரக்டர்களால் நடத்தப்படுகிறது.

★ 15 ஆண்டுகளாக மரியாதையுடன் கூடிய செயல்பாடு.

★ 5%லிருந்து தற்போது 22% வரை டிவிடெண்ட் கொடுத்திருக்கிறோம்.

★ டெபாஸிட் 42 மாதங்களில் இரட்டிப்பாகிறது.

★ 252 மாதங்களில் ரூ. 345 - ரூ.20,000/- ஆகவும், ரூ. 1725 - ரூ.1,00,000/- ஆகவும் பெருகும்.

	டெபாஸிட்	12 மாதம்	24 மாதம்	36 மாதம்	42 மாதம்	60 மாதம்
மகாதேவி	1000	1180	1430	1730	2000	2690
தொடர்வட்டி	5000	5900	7150	8650	10000	13450
திட்டம்	10000	11800	14300	17300	20000	26900

பிக்ஸட்
டெபாஸிட் ✚ 12 மாதம் **17%** ✚ 24 மாதம் **18%** ✚ 36 மாதம் **18.5%**

(மாதா மாதம் வட்டி பெறலாம்)

(மேலே சொல்லப்பட்ட இரண்டு டெபாஸிட்டுகளுக்கும் 1% ஊக்கத்தொகை (INCENTIVE) உண்டு.)

குழந்தைகள்	ரூ. 345	-	21 ஆண்டுகள்	ரூ. 20,000
நலத்	ரூ. 690	-	21 ஆண்டுகள்	ரூ. 40,000
திட்டம்	ரூ. 1725	-	21 ஆண்டுகள்	ரூ. 1,00,000

▲ **டெபாஸிட்டுகள் வரவேற்கப்படுகின்றன.**

கடன்கள் : நகைக்கடன் - **19.8% (ரூ. 1.65)** கிராமுக்கு **ரூ.300/-**
வீட்டுக்கடன் - **19.8%** RD உண்டு ▲ **24%** RD இல்லை

நாங்கள் படிப்படியாக முன்னேறுவதில் நம்பிக்கை வைத்தவர்கள்.

தொடக்கம் 1981 போன்: 5220364

அங்கீகரிக்கப்பட்ட **"நிதி"** நிறுவனம்

ஸ்ரீ ராஜ ராஜ சோழன் மியூச்சுவல் பெனிபிட் பண்ட் லிட்.

(செம்புதாஸ் தெரு சமீபம்) 29, போஸ்ட் ஆபீஸ் தெரு, சென்னை - 600 001.

M.S. ரெங்கையா, B.A.,
தலைவர்

R. பிச்சை, B.A., B.L.,
செயலாளர்

கடவுள் உண்டா, இல்லையா?

அது 1948-ம் வருடம். பண்டித மதன்மோகன் மாளவியா அவர்களால் நிறுவப்பட்ட பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்தேன்.

மாணவர்களுக்கு ஒரு பட்டிமன்றம் ஏற்பாடு செய்தார்கள். 'கடவுள் உண்டா, இல்லையா' என்பது விவாதப் பொருள்.

'இல்லை' என்ற அணியின் தலைமைப் பொறுப்பை நான் ஏற்றிருந்தேன்.

பட்டிமன்றம் தொடங்கி, சூடாக நடந்து கொண்டிருந்தது. சொல்வன்மையால், 'கடவுள் இல்லை' என்ற அணியில் நான் பேசிய பேச்சு மிகவும் எடுபட்டு, ஒட்டு மொத்த மாணவர்களும் என்னை ஆதரிக்கும் நிலை உருவாகி விட்டது.

நிகழ்ச்சி முடியும் தருவாயில் நடுவர் பேசத் தொடங்கினார். பேராசிரியர் மல்கானி என்பது அவர் பெயர். மிக அமைதியாக ஆரம்பித்தார் :

"ஒரு புள்ளிக்கு எந்தத் திக்கிலும் அளவு இல்லை. அது நேராக நகர்ந்தால் நேர்க்கோடு. நேர்க்கோடு, மேல்நோக்கி நகர்ந்தால் அது பரப்பளவு. பரப்பளவு, தனக்கு செங்குத்தாக நகர்ந்தால் அது கன அளவு. கன அளவு நகர்ந்து கொண்டே போனால் 'Space' கிடைக்கும். இதில் என்ன தெரிகிறது? ஒரு புள்ளி தன் அசைவினால் 'Space'ஐ நிறுவி விட்டது!

"கடவுள் இல்லை என்பவர்கள் புள்ளியுடன் நின்று விடுகிறார்கள். 'உண்டு' என்பவர்களுக்குத்தான் உலகில் 'Space' கிடைக்கிறது. ஆகவே..."

அவர் பேசிக் கொண்டே போனார். எனக்குச் சிலிர்த்து விட்டது. எத்தனை பெரிய தத்துவத்தை, எத்தனை எளிமையாக எடுத்துக்காட்டி விட்டார்!

- பீ. கோவிந்தன்,
கோவை - 46.

பால் நினைந்து ஊட்டும்.....

கோவைக்கு அருகில் போத்தனூரில் 'செயின்ட் ஜோஸப் முதியோர் இல்லம்' என்றொரு அமைப்பு இருக்கிறது. அநாதைகள், ஆதரவற்ற வயதானோருக்கு இருப்பிடம், உணவு, மருத்துவம் அளித்துப் பராமரிக்கும் நல்ல காரியம் செய்து வருகிறார்கள் இங்கே.

நான் அங்கே சென்றிருந்த போது, 70லிருந்து 90 வயது வரையிலான பல முதியோர்களை அங்கே காண நேரிட்டது. தள்ளாமை, கண் பார்வை இல்லாமை, காது கேளாமை, தன் காரியங்களைத் தானே பார்த்துக் கொள்ள இயலாமை என்று சிரமப்படும் முதியோர்கள் அவர்கள்.


இவர்களைக் கவனித்துக் கொள்ள, நாலைந்து கிறித்துவ சகோதரிகள்தாம் அங்கே இருக்கிறார்கள். அருவருப்போ, முகச்சுளிப்போ இல்லாமல், இந்த முதியோர்களுக்குக் கரங்களாக இருந்து காரியங்கள் செய்து வருகிறார்கள், இந்தச் சகோதரிகள்.

"இவர்களைப் பராமரிக்க ஆகும் செலவுக்கு என்ன செய்கிறீர்கள்?" என்று நான் அவர்களிடம் கேட்டேன்.

"நாங்கள் எதுவும் செய்வதில்லை. 1968லிருந்து இந்த ஆசிரமம் இயங்கி வருகிறது. ஒருநாள் கூட இவர்கள் பட்டினி கிடந்ததில்லை. எங்கிருந்தோ, யார் மூலமாகவோ பரமபிதா எங்களுக்கு வேண்டியதை அனுப்பி விடுகிறார்" என்று அவர்கள் சொன்ன போது, 'பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்பரிந்து...' என்கிற வரிகள்தான் எனக்கு நினைவுக்கு வந்தன. கண்கள் பனித்தன!

- எஸ். ஆர். தங்கவேலு, காட்டூர்.

சுஜாதா பக்கம்



ஒரு வழியாக கிரிக்கெட் ஜுரம் வடிந்து ஸ்ரீலங்கா உலகக் கோப்பையைத் தட்டிச் சென்று ஒரு மாதமாகிவிட்டது. ஆனால் கல்கத்தாவில் மார்ச் 13 ஆம் தேதி அரையிறுதியாட்டம் மறக்க முடியாத விஷயம். இந்தியா தோற்றது எனக்கு வருத்தமில்லை. வெற்றி - தோல்வி வாழ்க்கையில் எல்லா ஆட்டத்திலும் உண்டு. அன்று அந்த அணி நம்மைவிட சிறப்பும் அதிர்ஷ்டமும் பெற்றிருந்தது என்பதை மட்டுமே நிரூபிக்கிறது. ஆனால் தோல்வி இந்தியத் துணைக் கண்டத்தை எவ்வாறு பாதிக்கிறது என்பதில் உள்ள மானுட இயல், சமூக இயல் செய்திகள் அச்சுறுத்துகின்றன. ஈடன் தோட்டத்து ஒரு லட்சத்துப் பத்தாயிரம் உற்சாகக் குரல்கள், தோற்கப் போகிறோம் என்பது தெரிந்ததும் அடங்கிப் போன நாடு தழுவிய மௌனத்தை இதற்குமுன் நாம் காந்தி இறந்த போதுதான் உணர்ந்திருப்போம். கோபத்தில் பாட்டில்களை மைதானத்தில் எறிந்ததிலும் ஜெயகோஷம், ஹாய் ஹாய் கோஷமாக சடுதியில் மாறியதிலும் பொதிந்துள்ள செய்தி இது : 'புகழ் கண்ணாடிப் பாத்திரம் போன்றது. மக்கள் முன்னிலையில் தொடர்ந்து புகழுடன் இருக்க, கிரிக்கெட், சினிமா போன்ற கணநேர ஆட்டங்களால் முடியாது. 'எதிர்காலத்தில் எல்லோரும் பதினைந்து நிமிடத்திற்குமேல் புகழுடன் இருக்க முடியாது' என்று ஆண்டி வார்ஹோல் (Andy Warhol) சொன்னது நினைவுக்கு வருகிறது.

அஸாருதீனின் அணியினருக்கு என் அனுதாபங்கள். வெற்றிபெற்றால் வாழ்த்தும் கூட்டம் தோல்வியின்போது தோள் கொடுக்காதது தப்பு. (மன்னிப்புக் கடிதம் அனுப்பியவர்கள் வேறு கோஷ்டி) என்ன போயிற்று? மற்றொரு நாள், மற்றொரு மைதானத்தில் இதே இலங்கை அணியை வெல்லத்தான் போகிறோம் என்று அவர்களைச் சமாதானப்படுத்தாமல் ஏதோ யுத்தத்தில் நாடிழந்தவர்கள் போலத்தான் நடந்து கொண்டோம். பாகிஸ்தானில் ஒருத்தன் டீ.வி.யையும் சுட்டு, தன்னையும் சுட்டுக் கொண்டான். நாம் அஸாருதீனின் விவாகரத்திலிருந்து கல்கத்தாவின் ஈரப்பதம் வரை புறக்காரணங்களைத் தேடினோம்.

ஏன், ஒரு நல்ல அணியிடம் தோற்றோம் என்று ஒப்புக் கொள்ளத் தயங்குகிறோம்?

மற்றொரு செய்தி - லட்சத்துப் பத்தாயிரம் பேரை ஒன்பது மணி நேரம் இறுக்கமாக அடைத்து வைத்து அவர்களுக்குச் சந்தோஷம் எதையும் தரவில்லையென்றால் அவர்கள் கேவலம் ஒரு மினரல் வாட்டர் பாட்டிலையாவது எறிவது எதிர்பார்க்கக் கூடியதே. இது கல்கத்தர் வழக்கமா, இந்திய குணமா? இல்லை. பொதுவான மனித இயல்பு. பிரிட்டிஷ் கால்பந்து ரசிகர்கள் யூரோப்பியன் கப் ஆட்டத்தில் போய் பிற நாட்டில் செய்த வன்முறை கலாட்டாக்களினால் பிரிட்டனை நான்காண்டுகளுக்குப் போட்டியிலிருந்து தள்ளி வைத்திருந்தார்கள். அதுபோல் கல்கத்தாவில் இந்தியா கலந்து கொள்ளும் ஒரு நாள் போட்டிகளில் இனி பாட்டில்களை அனுமதிக்கக் கூடாது.

எல்லோருக்குமே குழு மனப்பான்மை தேவைப்படுகிறது. முதலில் நம் தெரு, பின் நம் கல்லூரி, நம் ஊர், நம் மாநிலம், நம் தேசம், இந்த வரிசையில் எதிர்காலத்தில் பூமிக்கும் செவ்வாய் கிரகத்துக்கும் கிரிக்கெட் போட்டி நடந்து, நாம் தோற்றால் எல்லா தேசங்களிலும் பாட்டில் வீசுவோம். அறிவியல்படி நம் மனித இனமே நீக்ரோ, காகேசியன், மாங்கோல் என்று மூன்று ஜெனட்டிக் பிரிவுகளில்தான் அடங்குகிறோம். மனித குணங்களில் சில எல்லோருக்கும் பொது.

ஒரு நாட்டின் பழமொழி மற்றொரு நாட்டில் செல்லுபடியாவதற்குக் காரணம் இதுதான். சீனத்துத்' திரைப்படங்களையும் ஹாலிவுட் படங்களையும் நம்மால் ரசிக்க முடிவதற்கும் இதுதான் காரணம்.

பாகிஸ்தான் ஃபைசலாபாதில் ஸ்ரீலங்காவின் ஜயசூரியா இங்கிலாந்தின் டிஃப்ரைட்டஸை (DeFreitas) அடித்து மைதானத்தைத் தாண்டி அடுத்த ஊரில் விழுந்த சிக்ஸரை ஆழ்வார்பேட்டை அடியேன் சிறந்தது என்று சொல்வதற்கும் காரணம், மனித குணத்தின் ஒற்றுமைதான்.

என்னைப் பொறுத்தவரையில் உலகக் கோப்பையில் மிகச் சிறந்த 'காட்ச்' ஷேன் தாம்ஸன், ஆமிர் ஸோஹெய்லைப் பிடித்தது.

(மீண்டும் அடுத்த வாரம்)

AKSHAYA PAATHRAM SCHEME



3rd to 13th April '96

எங்களது 'அக்ஷய பாத்திரம்' திட்டத்தில் சேர்வதன் மூலம் வளமைக்கு வழி கிடைக்கும்

Super Bonanza Gifts


ஒன்று கூடி
வளமோடு வாழ்வோம்

வாடிக்கையாளருடன் வலுவான உறவை வளர்த்துக் கொள்வதில் நம்பிக்கையுடையது ராம் காஷ்யப். ஒழுக்கம், நேர்மை, நம்பிக்கை இவற்றால் வலுப்பெற்ற உறவு. ஆயிரக் கணக்கானவர்களை ஒருங்கே அரவணைத்துக் கொண்டு விரைவாக வளரும் உறவு. 'அக்ஷய பாத்திரம்' வாயிலாக நாம் ஒன்று கூடி வளமடைவோம்.

சூப்பர்
பொனான்ஸா
பரிசுகள்

1. ஸோனி வீடியோ கேமரா
2. வீடியோகான் கலர் டி.வி. (ரிமோட்டுடன் 5302 R)
3. பிலிப்ஸ் பவர் ஹவுஸ் மியூஸிக் ஸிஸ்டம் 557
4. கிராம்ப்டன் ஃபுட் ப்ராஸஸர்
5. பட்டுப்புடவை
6. பிலிப்ஸ் டு–இன்–ஒன் DR 454
7. BSA ஸ்ட்ரீட்கேட் சைக்கிள்
8. கிராம்ப்டன் கிளாஸிக் பெடஸ்டல் ஃபான்
9. எவர்சில்வர் வாட்டர் ஃபில்டர்
10. சிட்டிஸன் காபி மேக்கர்

விவரங்களுக்கு
அருகிலுள்ள கிளையை
அணுகவும்



சரித்திரத் தொடர்கதை

முன்கதைச் சுருக்கம் : போசளராலும் காடவராலும் சோழ நாடு சீரழிந்து கிடந்த 13ம் நூற்றாண்டின், பிற்பகுதி. தமிழகத்திற்கு சிற்பக்கலை பயில வந்த தந்தையைத் தேடி சீனத்திலிருந்து, நாகை சூளாமணி விஹாரத்திற்கு வருகிறான் யுவான். விஹாரத் தலைவரால் கொங்கு இளவரசி பூங்கோதையுடன் காவலாக அனுப்பப்படுகிறான். போசளரால் வழிமறிக்கப்படும் அவர்களை, பாண்டிய இளவல் ஆதித்யன் மீட்கிறான். மதுரை செல்லும் வழியில் ஆதித்யனுக்கும் பூங்கோதைக்கும் இடையே அன்பு மலர்கிறது. பாண்டிய மன்னன் உத்தரவால் உத்தமபாளையத்தில் படைத்தலைவர் கிருஷ்ண மல்லரிடம் பூங்கோதையை விட்டு, தஞ்சைக்கு வந்து சேரும் ஆதித்யனிடம் இந்திர தனுசு பற்றியும், தமிழகத்தை அன்னியரிடமிருந்து விடுவிப்பது பற்றியும் சைவத் துறவியார் விளக்குகிறார்.

சூரிய காங்கேயன் என்ற போலிப் பெயரில் உலவும் சாளுக்கிய சேமகேசியால் பூங்கோதை கடத்தப்படுகிறாள். ஸ்காந்தபுரம் வந்து சேருகிறாள். யுவான் பின் தொடர்கிறான். கொங்கு மருத்துவர் உண்மையான சூரிய காங்கேயன் இறக்கவில்லை என்று தெரிவிப்பதோடு இளவரசியை தஞ்சைத் துறவியாரிடம் அனுப்பவும், யுவானை முன்னதாகச் செல்லவும் ஏற்பாடு செய்கிறார்.

இடைப்பாடி நாட்டுக் கோட்டையில் போசள சிங்கணனிடம் சிறையிருக்கும் யாங்சின், தன் மகன் யுவான் தமிழகம் வந்திருப்பதை அறிகிறான். சிங்கணனுக்கு யந்திரப் பொறிகள் அமைத்துக் கொடுத்து அவற்றை இயக்க ஸர்ப்பசக்தி வேர்கள் தேவையென்றும் கூறி, தானே அதை எடுத்து வருவதாகவும் கூறுகிறான். கோட்டையை விட்டு வெளியேறும் யாங்சின், காவிரியின் பிரவாகத்தில் பாய்ந்து விடுகிறான்.

15 வேங்கையான சிறு நரி!

ஆதித்யனையும் மற்றவர்களையும் திகைக்க வைத்த செய்தியை அறிவித்த அந்த மனிதனை வெறித்துப் பார்த்தான் யுவான். அந்த மனிதன் வேண்டுமென்று மாற்றிப் பேசிய கரகரத்த குரலும், அவன் விழிகளில் சுபாவமாகவே வழிந்த விஷமமும் அவன் யாரென்பதைப் புரிய வைத்து விட்டதால், இருக்கையை விட்டு எழுந்து அவனை நெருங்கி, அவன் தலையிலிருந்த துணியைப் பற்றி சட்டென்று இழுத்தான்! அதற்கு முன்னதாகவே பார்த்தவுடனேயே அவன் யாரென்பதைப் புரிந்து கொண்டு விட்ட ஆதித்யனும் துறவியாரும் முறுவலுடன் கவனித்துக் கொண்டிருக்க, அதுவரை திகைப்பில் உறைந்து மௌனமாக இருந்த இளவரசியின் குரல் வியப்புடன் ஒலித்தது - "விஜயன்!" என்று.



தன் கரத்திலிருந்த கோடரியை கவாதீனமாகத் துறவியாரிடம் அளித்த விஜயன், இளவரசியை நோக்கித் திரும்பி, "ஆம் இளவரசி. இதே கோலத்தில்தான் இடைப்பாடி கோட்டையில் மரம் வெட்டியாகப் பணி புரிந்தேன்" என்றான்.

யுவான் வினவினான். "சொல் விஜயா! என் தந்தை என்ன ஆனார்? ஏன்

இந்திர தனுசு

விஷ்வக்சேனன்


அவர் இறந்து விட்டதாகக் கூறினாய்?''

விஜயன் தன் வேஷத்தை நிதானமாகக் கலைத்தபடியே கூறினான். "நானும் நமது வீரர்களும் சிங்கணனின் இடைப்பாடிக் கோட்டையில் மரம் வெட்டும் பணியாட்களாக இருந்தோம். சிங்கணன் விரும்பியபடி யந்திரப் பொறிகளைச் செய்வதாக ஆசை காட்டிக் கொண்டிருந்திருக்க வேண்டும் யாங்சின். ஆனால் இரு தினங்களுக்கு முன் உத்தம




ஸ்ரீராமின் சித்திரை கோலாகலம்

ஏப்ரல் 4-13, 1996




1

ஒவ்வொரு நாளும் பட்டுவாடா செய்யப்படும் ஏலத்தொகை ரூ.2 கோடி. விரைந்து எட்டிக் கொண்டிருக்கும் வணிக இலக்கு ரூ.1000 கோடி. தொடர்ந்து பெருகிவரும் சந்தாதாரர்களின் எண்ணிக்கை 11 லட்சம்.



2



3

கல்வி, திருமணம், வர்த்தகம், எதிர்பாராத தேவை என எதுவாக இருந்தாலும் சந்தாதாரர்களுக்கு உடனடியாக உதவும் நண்பனாக ஸ்ரீராம் சிட்ஸ் விளங்குகிறது. நீங்களும் உங்கள் வாழ்க்கையில் ஒரு புதுமலர்ச்சியைப் பெற வேண்டாமா? ஸ்ரீராம் இயக்கத்தில் இன்றே உறுப்பினர் ஆகுங்கள். அதுமட்டுமல்ல - ஒவ்வொரு புதிய சந்தாதாரருக்கும் ஓர் அழகிய பரிசும் உண்டு - எப்போதும் போல.



4



5



6




7




8



9



10



11

சந்தாதாரர் பரிசுகள்


வ. எண்	சீட்டு மதிப்பு ரூபாயில்	சந்தாதாரர் பரிசு
1.	250 x 40 = 10,000	SS ஸ்வீட் டிரே (2)
2.	500 x 30 = 15,000	5 கிராம் வெள்ளிக்காசு
3.	625 x 40 = 25,000	மூடியுடன் கூடிய 2 SS பௌல்கள்
4.	500 x 60 = 30,000	மில்டன் இமாஜினேஷன் வாக்யும் ஃப்ளாஸ்க்
5.	1,000 x 50 = 50,000	SS CB தேக்சா
6.	2,500 x 30 = 75,000	SS CB ஃப்ரையிங் பான்
7.	2,500 x 40 = 1,00,000	காபி SS காசரோல்
8.	5,000 x 30 = 1,50,000	SS இட்லி குக்கர்
9.	5,000 x 40 = 2,00,000	ஹாகின்ஸ் மிஸ்மேரி 4.5 லிட்டர்ஸ் பிரஷர் குக்கர்
10.	10,000 x 30 = 3,00,000	காபி SS குக்கர் 5 லிட்டர்
11.	20,000 x 25 = 5,00,000	4 கிராம் தங்கக் காசு

* நுழைவுக்கட்டணம் தனி   * முன் அங்கீகாரம் பெறப்பட்டது

ஸ்ரீராம் சிட்ஸ்.


10 லட்சத்திற்கும் மேலான சந்தாதாரர்களின் இதயங்களில் இடம் பெற்றுள்ள பெயர்!


மறைந்திருக்கும் பரிசை அடைய வழி:














இப்பொழுது உள்ள சந்தாதாரர்களுக்கு அனுப்பப்படும் அஞ்சலில் ஒரு அழகிய சின்னஞ்சிறு காற்றாடி இடம் பெற்றிருக்கும். ஸ்ரீராம் கிளையில் ஒரு புதிய சந்தாதாரரை அறிமுகம் செய்தவுடன் அதனைக் கொடுத்து பரிசுக் காற்றாடிக் கூப்பனை பெற்றுக்கொள்ளலாம். இதில் உள்ள நூலை இழுக்கும் போது, 3 இலக்க எண் தென்படும். அதன் கூட்டுத் தொகைக்கேற்ப உங்கள் பரிசை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு பரிசுக் காற்றாடிக் கூப்பனுக்கும் உங்களுக்கு ஒரு பரிசு உண்டு. ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் சிந்தாமணி டப்பா முதல் 90 லிட்டர் ஃப்ரிட்ஜ் வரை.

தொடரும் பரிசுக் குவியல்:

இந்த அறிமுகப்படுத்துவோர் பரிசுகளைத் தவிர, ஆண்டு முழுவதும் உங்களுக்காகப் பரிசுகள் காத்திருக்கின்றன. மொத்தம் ரூ. 4 கோடி மதிப்புள்ள 402350 பரிசுகள். கைனடிக்ஹோண்டா முதல் 2 கிராம் தங்கக்காசு வரையுள்ள மாதாந்திர சூப்பர் குலுக்கல் பரிசுகளும், 4 கிராம் தங்கக் காசு முதல் மாருதி 800 கார் வரையுள்ள பம்பர் குலுக்கல் பரிசுகளும் இவற்றுள் அடங்கும்.





ஸ்ரீராமில் சேர்ந்திடுங்கள்.
பரிசுகளை வென்றிடுங்கள்.

- கிளைமேலாளர் முன்னிலையில் மட்டுமே காற்றாடியைத் திறக்க வேண்டும்.
- அறிமுகப்படுத்துவோர் பரிசு தற்போதைய சந்தாதாரர்களுக்கு மட்டுமே.
- அறிமுகப்படுத்துவோருக்காக மறைந்து காத்திருக்கும் பரிசுகளில் அடங்குபவை SS மிக்ஸ்போல், 4 கிராம் தங்கக்காசு முதல் 90 லிட்டர் ஃப்ரிட்ஜ் வரை.

SHRIRAM GROUP COMPANIES
MADRAS

ஸ்ரீராம் சிட்ஸ் &
இன்வெஸ்ட்மெண்ட்ஸ் லிமிடெட்.
ஸ்ரீராம் சிட்ஸ்
தமிழ்நாடு லிமிடெட்.

நிர்வாக அலுவலகம்: "சுப்பிரமணியம் பில்டிங்,"
1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை - 600 002.
போன் : 8520700/8523932/8522651/
8525536/8520797

ஸ்ரீராம் சிட்ஸ் - உங்கள் வளமைக்குப்பாதை.

ADWAVE/SCI/5277



''பாட்டி, ஒரு கதை சொல்லேன்....''

''ஒரே ஒரு ஊரில், ஒரு கம்ப்யூட்டர் இருந்துச்சாம். அந்த ஊரிலேயே 'ரோபாட்டும்' வாழ்ந்ததாம். ரெண்டுக்கும், ரொம்ப நாளா பகையாம்...''

— ஆர். வசந்தகுமார்

பாளையத்திலிருந்து ஒருவன் ஓலையுடன் வந்தான். வந்தவன் யாங்சின்னைக் கண்டு ஏதோ பிசாசைக் கண்டது போல் விழித்தான். அவன் கூறியது சரியாகக் கேட்கவில்லையென்றாலும் என்ன கூறியிருப்பான் என்பதை யூகிக்க முடிந்தது. அன்று இரவு முழுவதும் யாங்சின் உறங்கவில்லை. மறுதினம் அவர் கூடார வாயிலில் இடங்கணிப் பொறி ஒன்று உருவாகியிருந்தது. பின்பு சிங்கணனும் வீரர்களும் பின்தொடர கோட்டைக்கு வெளியே வந்த யாங்சின், காவிரியைஅடைந்ததும் நீரில் தவறி விழுபவர் போல தலைகுப்புற விழுந்து விட்டார். வீரர்களையும் எங்களையும் விட்டு அவரைத் தேட உத்தரவிட்ட சிங்கணன், அவர் கிடைக்காததால் இறந்து விட்டதாகவே தீர்மானித்து விட்டான். அதைத்தான் நானும் வந்தவுடன் கூறினேன்'' என்று நிறுத்தினான் விஜயன்.

துறவியாரின் குரல் இடையில் புகுந்தது. "அங்கு நதியின் ஓட்டம் வேகமாக தெற்கு நோக்கிப் பாய்வதால் தென்கரை முழுவதும் சிங்கணன் தேடியிருப்பான்" என்றார் துறவி.

"ஆம் பிரபு. நாங்களும் தெற்குக் கரை ஓரமாக ஐந்தாறு காதம் வரை தேடினோம். அப்படியே திரும்பி விட்டோம்'' என்றான் விஜயன்.

"நீரில் விழுபவர் நீரோட்டத்திலேயே அடித்துச் செல்லப்படுவதுதான் இயல்பு. ஆனால் யாங்சின் இயல்புக்கு மாறாகச் செயல்படுபவர். எதிர்புறமாக நீந்திக் கரையேறியிருப்பார்" என்ற துறவியாரை வியப்புடன் நோக்கிய ஆதித்யன், பிறகு விஜயன் பக்கமாகத் திரும்பிக் கேட்டான் : "விஜயா! சிங்கணன் படைகளுடன் வரப் போவதில்லை என்றாயே?"

"ஆம் இளவரசே! சிங்கணனைக் கண்ணனூர் கோட்டையைப் பாதுகாக்க அனுப்பி விட்டு, அவனுக்குப் பதிலாகப் போரை நடத்த மற்றொரு தண்டநாயகன் விக்கலனை அனுப்பி வைத்திருக்கிறான் போசள சோமேஸ்வரன்.''

படைகளை நடத்துவதில் இணையற்றவனென்றும், சிங்கணனைப் போல் தந்திரமோ, வஞ்சகமோ அறியாதவனென்றும், போர்த்திட்டங்கள் வகுப்பதிலும், வாள் வீச்சிலும் நிகரற்றவனென்றும் பெயரெடுத்திருந்த போசள விக்கலன் பெயரைக் கேட்ட ஆதித்யன் மட்டுமின்றி துறவியாரும் கூடச் சற்று திகைத்தார். போசளருடனான போர், எதிர் பார்த்திருந்ததை விட இன்னும் கடுமையாக இருக்கும் என்பது இருவருக்கும் புரிந்தது.

சற்று நேரம் ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்து விட்ட துறவியார், ஏதும் கூறாமல் அறையின் மூலைக்குச் சென்று ஓலைகளை எடுத்து விறு விறுவென்று எழுத ஆரம்பித்தார். சிந்தனையினூடே அவர் முகத்தில் கவலையும் தெரிந்தது. ஓலைகள் எழுதி முடித்தவர், குழல்களில் அடைத்து ஒன்றை ஆதித்யனிடம் அளித்தார்.

''ஆதித்யா, நீ இன்றே இரவு ஏறியதும் புறப்படு. இந்த ஓலையுடன் இந்திர தனுக பற்றிய ஓலைகளையும் மாறன் அமுதனாரிடம் அளித்துவிடு'' என்றவர் மற்றொரு குழலை விஜயனிடம் அளித்தார்.

''விஜயா! இதைப் பாண்டிய மன்ன ரிடம் அளித்து விடு. இனி தாமதிப்பது அபா யம். காற்றைவிட வேகமாகச் செல்ல வேண்டும் நீ'' என்று உத்தரவிட்டார்.

போசள விக்கலனின் வருகை துறவியாரையும் ஆதித்யனையும் மட்டுமல்ல, மன்னன் உத்தரவின்படி கண்ணனூர்க் கோட்டையை அடைந்த சிங்கணனையும் கூட திகைக்க வைத்தது. கண்ணனூர்க் கோட்டையில் காத்திருந்த சேமகேசியோ, அவனை மேலும் திகைக்க வைத்தான்!

திருவரங்கத்துக்கு நேர் வடக்கே காவிரியின் வட கரையில் மூன்றரைக் காதத்தில் அமைந்திருந்தது அந்தக் கோட்டை. பெரிதாகத் தெரியவில்லையென்றாலும் தான்கடிக்குக் குறையாத கனத்துடன் வளைந்து நீண்ட மதில்களும், மேற்புறத்தில் வரிசையாகத் தெரிந்த அம்பு வீசும் யந்திரங்களும், சதா உலவிக் கொண்டிருந்த வீரர்களும் அந்தக் கோட்டையை அணுகுவதோ, தாக்கிக் கைப்பற்றுவதோ அத்தனை எளிதல்ல என்பதை உணர்த்திக் கொண்டிருந்தன. கோட்டையைச் சுற்றி வளைத்த அகழியில் புரண்டு புரண்டு நீர் மட்டத்தில் பளீர் பளீரென்று வாலால் அறைந்த முதலைகள், மேலே உலவிய வீரர்களைப் பார்த்து அவ்வப்பொழுது வாயைப் பிளந்து அகரப்பற்களைக் காட்டின!

கண்களுக்கெட்டிய தூரம் வரையில் காவிரி தந்த வரமாகப் பசேலென்று விரிந்த வயல்களையும் சிறு கிராமங்களையும் கடந்து, விரிந்த



''உங்க நண்பர் வந்திருக்கும் போது இனிமே டீ.வி. வைக்கத் தொலைக்காதீங்க.''

''ஏன்?''

''டீ.வி. நிகழ்ச்சியில் 'சாப்பிட வாங்க'ன்னு அறிவிச்சதும் நான்தான் கூப்பிடறேன்னு உள்ளே வந்து சட்டமா சப்பணம் போட்டு உக்காந்துட்டார் பாருங்க!''

— ஆலத்தம்பாடி ராஜகோபால்

சமவெளியில் அமைந்திருந்த அந்தக் கண்ணனூர்க் கோட்டையைத் தலைமையிடமாக சிங்கணன் தேர்ந்தெடுத்ததற்குக் காரணமிருக்கவே செய்தது. காவிரியின் தென்கரையிலிருந்து விரிந்த சோழ நாட்டிலிருக்கும் மூவாயிரம் வீரர்களையும் இயக்கவும், வடக்கே காடவர்களின் நடமாட்டத்தையும் தொண்டை நாட்டில் கண்ட கோபாலனின் நடவடிக்கைகளை அறியவும் அந்தக் கோட்டை பெரும் சாதகமாக இருந்தது சிங்கணனுக்கு.

கோட்டையின் உள்ளே, மிக நேர்த்தியாகத் தெரிந்த சிறு மாளிகையில், தன் அறையில் மஞ்சத்தில் சாய்ந்து மதுக் குப்பியைக் கரத்தில் பிடித்தபடி அமர்ந்திருந்த சிங்கணனின் சித்தம் பெரிதும் குழம்பிக் கடந்தது. உல்லாசத்திற்காகவே உலகத்தில் அவதாரம் எடுத்திருந்த இரு அழகிய யவன மங்கையர் அவனை உரசி நின்றபடியே மதுக்குப்பியை நிரப்பி நிரப்பி அவன் சித்தத்தின் உஷ்ணத்தைக் குறைக்க முயன்று கொண்டிருந்தனர்.

அதிகாரத்தை மட்டுமின்றி அதற்குரிய வசதிகளையும் பூரணமாக அனுபவிக்கும் வழக்கமுடைய சிங்கணனது சித்தம் அப்போது மதுவின் ருசியிலோ எதிரில் இழைந்த மங்கையரின் அழகிலோ நாட்டம் கொண்டதாகத் தெரியவில்லை. எதிரிலிருந்த யவன மங்கையின் தோளைப் பற்றி அருகில் இழுத்தவனின் விழிகளில் வெறித்த பார்வையே நிலவிக் கிடந்தது. அடுத்து ஒலித்த அவன் கேள்வியும் வரண்ட குரலிலேயே வந்தது: "சேமகேசி எப்பொழுது வந்தான் இந்தக் கோட்டைக்கு?"

யவன மங்கையின் கிள்ளைக்குரல் அவள் தமிழின் உச்சரிப்பிலிருந்த குறையை எடுகாட்டியது. "நேற்றிரவுதான் வந்தார் பிரபு."

''மன்னரைக் கண்டு வந்ததாகக் கூறினானா?'' சிங்கணனிடமிருந்து அடுத்த கேள்வி வந்தது.

"ஆம் பிரபு. அவரிடம் மன்னரின் ஓலையும் இருப்பதாகக் கூறினார். பிறகு..." என்று தயக்கத்துடன் இழுத்தாள் அந்த மங்கை.

"பிறகு என்ன?" சிங்கணன் குரலில் கடுமையிருந்தது.

அந்த யவன மங்கையின் பதில் தயக்கத்துடனேயே வந்தது. "கொங்கு நாட்டின் விடுதலைப் படைகளை ஒடுக்கவும் பாண்டியர் மீது போர் தொடுக்கவும் தண்ட நாயகர் விக்கலனை மன்னர் நியமித்திருப்பதாகவும் கூறினார்."

சிங்கணனின் முகம் சிறுத்தது. எல்லையற்ற ஆத்திரமும் அதில் வெடித்தது. "தமிழ் நாட்டில் இத்தனை ஆண்டுகளாகப் போசளர் ஆட்சி நிலைத்திருக்க இந்த சிங்கணன்தான் காரணம் என்பதை மன்னர் மறந்து விட்டாரா? தமிழகத்தை ஒரு குடையின் கீழ் ஆண்ட சோழ மன்னனின் அதிகாரம் அனைத்தையும் பறித்து இன்று அவன் போசளர் கைப்பொம்மையாயிருக்கக் காரணமிந்த சிங்கணன்தான் என்பது நினைவில்லையோ மன்னருக்கு? இப்போது பாண்டியரை அடக்க மட்டும் நான் தகுதியற்றவனாகி விட்டேனா?" ஆத்திரம் தலைக்கேறியதால் சரமாரியாக வந்த அவன் கேள்விகளுக்கு பதிலளிக்கவோ, அவன் ஆத்திரத்தைத் தணிக்கவோ திராணியற்ற அந்த மங்கையருக்கு, என்ன பதில் கூறுவதென்பது புரியாததால் சற்று விழித்தனர்.

மஞ்சத்திலிருந்து எழுந்து மதுக்குப்பியை விட்டெறிந்த சிங்கணன், அறைக்குள் அங்கு மிங்குமாக உலவினான். நாகம் சீறுவதைப் போல் ஒலித்த அவன் மூச்சையும், கண்களில் தெறித்த கனலையும் கண்ட மங்கையர் அச்சத்துடன் ஒதுங்கியே நின்றனர். சட்டென்று உலவுவதை நிறுத்திய சிங்கணனின் சித்தத்தில் ஏதோ யோசனை பளிச்சிட்டதற்கறிகுறியாக அவன் புருவங்கள் நெரிந்தன:

"இந்த சாளுக்கிய சேமகேசி, மன்னரிடமிருந்து ஓலைபெற்று வந்ததாகக் கூறியிருக்கிறான். இவன் எதற்காக மன்னரைக் காணச் செல்ல வேண்டும்? மன்னரின் ஓலையில் என்ன செய்தி இருக்கிறது?" சேமகேசியைப் பற்றிய சந்தேகம் மனத்தில் எழுந்ததும் யவன மங்கையரை நோக்கித் திரும்பிய சிங்கணன், ''உங்களில் யாரேனும் சென்று அந்த சேமகேசியை அழைத்து வாருங்கள்'' என்று உத்தரவிட்டான். மஞ்சத்தில் தள்ளப்பட்டு சிங்கணனை வெறித்துக் கொண்டிருந்தவள் எழுந்து, உடனே வெளியே நடந்தாள்.

சற்று நேரத்தில் ஓலைக்குழலுடன் உள்ளே நுழைந்து, சிங்கணனை வணங்கிய சேமகேசியின் விழிகளில் போலியான அச்சமும் சற்று ஏளனமும் தெரிவதாகப்பட்டது சிங்கணனுக்கு. சேமகேசியை நோக்கி முதல் கேள்வியை வீசிய சிங்கணன் குரலில் அதீத உஷ்ணமிருந்தது.

"சேமகேசி, பாண்டிய நாட்டை விட்டு எதற்காக மன்னரைக் காணச் சென்றாய்?"

"பாண்டிய நாட்டில் என் பணி முடிந்து விட்டது படைத்தலைவரே" சேமகேசியின் பதில் உடனே வந்தது.

"என்ன? பணி முடிந்து விட்டதா?"

"ஆம் படைத்தலைவரே, பாண்டிய நாட்டில் படை திரட்டும் முயற்சி ஏதேனும் இருந்தால் அறிவிக்க என்னைப் பணித்தீர்கள்."

"ஆம்."

"அந்தப் பணி முடிந்து விட்டது. இன்னும் ஒரு வாரத்திற்குள் உத்தமபாளையத்தில் பாண்டியர் படை குவியப் போகிறது. கொங்கு நாட்டின் தென் பகுதியில் தாக்குதலைத் துவக்கப் போகிறார் கிருஷ்ணமல்லர். அது மட்டுமல்ல படைத்தலைவரே, இன்னொரு பணியையும் முடித்திருக்கிறேன்" என்றான் சேமகேசி.

"என்ன பணி?"

"கொங்கு இளவரசியை அழைத்துவர சூளாமணி விஹாரத்திற்கு வீரர்களை அனுப்பினீர்கள்...."

"ஆம்."

"அவர்களால் இயலவில்லை."

"காடவர்கள் குறுக்கிட்டதால் இயலாமற் போனது."

சேமகேசியின் கறுத்த முகத்தில் ஏளனச் சிரிப்பொன்று தெரிந்தது. "அந்தப் பணியை நான் முடித்திருக்கிறேன், படைத்தலைவரே!" என்றான் சேமகேசி. சிங்கணன் முகத்தில் திகைப்பு தெரிந்தது.

"என்ன கூறுகிறாய் சேமகேசி?"

"ஆம் படைத்தலைவரே, நமது வீரர்களின் பாதையில் குறுக்கிட்டவர்கள் காடவர் மட்டுமல்ல. பாண்டிய இளவலும்தான். ஆதித்ய பாண்டியனால் மதுரைக்கு அழைத்துச் செல்லப்பட்ட இளவரசியை, உத்தமபாளையத்திற்கு அனுப்பி வைத்தான் வீர பாண்டியன். இளவரசியைப் பாண்டியரிடமிருந்து மீட்டு, ஸ்காந்தபுரத்தில் கொண்டு சேர்த்திருக்கிறேன்"

"திருமணத்திற்குப் பிறகு சினிமாவில் நடிப்பீங்களா?"

"கணவர் அனுமதி கொடுத்தா நடிப்பேன்."

"அனுமதி கொடுக்கலைன்னா?"

"அடுத்த கணவர் அனுமதி கொடுத்தா நடிப்பேன்!"

— வெ. ராஜாராமன்



என்ற சேமகேசியின் முகத்தில் அடுத்து போலியான வருத்தமொன்றும் படர்ந்தது.

குரலிலும் அந்த வருத்தத்தைப் படரவிட்டுக் கொண்டவன், "ஆனால் படைத்தலைவரே, பாண்டியர் படை திரட்டுவதையும், தாக்க திட்டமிட்டிருப்பதையும் தாங்கள் முன் கூட்டியே அறிந்து செய்தியனுப்பவில்லையென்பதால் மன்னருக்குச் சற்றுக் கோபம் தான்... அதுமட்டுமல்ல..."

அவன் தன்னைப் பார்த்து நகைக்கிறான் என்பதைப் புரிந்து கொண்ட சிங்கணனின் சித்தத்தில் உஷ்ணம் கூடியது. "வேறென்ன கூறினார் மன்னர்?" என்ற அவன் கேள்வியிலும் அனல் பறந்தது.

தொடர்ந்து கூறத் தயங்குவதாகப் பாசாங்கு செய்த சேமகேசி, "தண்ட நாயகரால் இயலாத பணியை நான் முடித்தது குறித்து மன்னர் மகிழ்ச்சியடைந்தார். எனவே..." என்று இன்னும் தயங்கினான் சேமகேசி.

"மேலே சொல்!" சிங்கணனின் குரல் உரக்க ஒலித்தது.

"சோழ நாட்டிலிருக்கும் நமது வீரர்களை நான் நடத்திச் சென்று உத்தமபாளையத்தைக் கைப்பற்றவும் அத்தாட்சி ஓலையளித்தார். பாண்டியருடனான போரை நடத்த விக்கலனை அனுப்பி வைப்பதாகவும் கூறினார்" என்று முடித்தான் சேமகேசி.

அடித்து வைத்த சிலையாகவே நின்றான் சிங்கணன். சரியான சந்தர்ப்பம் மட்டும் கிடைத்தால் சிறு நரியும் எப்படி பெரும் வேங்கையைக் கூட வீழ்த்த முடியும் என்பதை நிருபித்துக் காட்டிய சேமகேசி, மெல்லத் தனது பதவிக்குக் குறிவைக்கிறான் என்பதும் பல தலைமுறைகளாக சாளுக்கியருக்கு சோழர் மீதிருந்த பகையை மனத்தில் வைத்துக் கொண்டு பழி தீர்க்க முயல்கிறான் என்பதும் புரிந்தது சிங்கணனுக்கு.

மீண்டும் சிங்கணனை வணங்கிய சேமகேசி, "படைத்தலைவரே, நான் இப்பொழுதே சோழ நாட்டுக்குப் புறப்படுகிறேன். உத்தரவு தாருங்கள்" என்று மேலுக்குப் பணிவைக்காட்டி விட்டு சிங்கணன் உத்தரவுக்கும் காத்திராமல் திரும்பி வெளியே நடந்தான்.

சிங்கணன் முகத்தில் குரூரப் புன்முறுவலொன்று பிறந்தது. "சேமகேசி! என்னை அகற்றிவிட்டு சோழ நாட்டை அத்தனை எளிதாக அடைய இயலுமென்று எண்ணுகிறாயா? உன்னைப் போல் இன்னும் பத்து ஒற்றர்களையும் சேர்த்து விழுங்கவல்ல துறவி அங்கிருக்கிறார். போதாக் குறைக்கு ஆதித்யனும் அங்கு தான் இருப்பதாகக் கேள்வி" என்று சற்று உரக்கவே கூறிய சிங்கணன், மீண்டும் மதுக்குப்பியை நோக்கி நடந்தான்.


(தொடரும்)

பொன் விளையும் பூமி

கூடுவாஞ்சேரி:

அவ்வை நகர் (1121/95)

ராஜாஜி நகர் (532/95)



ஃபோர்டு கார் தொழிற்சாலை அருகே

வேகமாக வளர்ச்சியடைந்து வரும் கூடுவாஞ்சேரியில் மதிப்பு வாய்ந்த வீட்டு மனைகளை உங்களுக்கு வழங்குகிறது டிஎல்வி. இந்நிறுவனம், இருபது ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு துறைகளில் தன் பெயரை நிலை நாட்டியுள்ளது.

மனைகளுக்கான பணம் செலுத்தும் போது வியப்பூட்டும் தள்ளுபடிகள் மற்றும் தங்கப் பரிசுகள் பெறலாம்.

15 தினங்களுக்குள் முழுத் தொகை - 11% தள்ளுபடி + 3 கிராம் தங்ககாசு.
30 தினங்களுக்குள் முழுத்தொகை - 10% தள்ளுபடி + 2 கிராம் தங்ககாசு
60 தினங்களுக்குள் முழுத்தொகை - 5% தள்ளுபடி + 1 கிராம் தங்ககாசு

180 தினங்களுக்குள் முழுத் தொகை - 25% மனைத் தொகை இரண்டு மாதங்களில். மீதி வட்டி இல்லாத தவணைகள்.

இலவசம். மனைக்கு செல்ல வாகன வசதி - காலை 6, 11 மணி. மாலை 3 மணி.

மேற்கொண்டு விபரமறிய எங்களை அணுகவும் :

Quality is Our Strength

டிஎல்வி ஹவுஸிங் & ஃபைனான்ஸ் (பி) லிமிடெட்,

54, பெரம்பூர் பேரக்ஸ் ரோடு, புவனேஸ்வரி தியேட்டர் எதிரில், சென்னை - 600 007.
போன்: 5325311/12/13 ஃபேக்ஸ் : 5325363

20 ஆண்டுகளுக்கு மேலாக நன்மதிப்பை கட்டிக்காப்பவர்கள்

சிறுகதை

மூணாம் நம்பர் சைக்கிள்

'வரட்டும் இந்தப் பயல்! வேலையை விட்டு நின்னுக்கடான்னு கறாராய் சொல்லிட வேண்டியதுதான்'.

புளிச்சென்று எச்சிலைத் துப்பினேன்.

"அண்ணே, காத்தடிக்கணும்."

சிறுவன் சைக்கிளுடன் வந்தான். புது சைக்கிள். பளபளத்தது.

"ரெண்டு வீலுக்குமா?"

தலையசைத்தான்.

கைலியை ஏத்திக் கட்டிக் கொண்டேன். பம்ப்புடன் சைக்கிளை நெருங்கினேன்.

"என்ன விலைக்கு வாங்கினே?"

"அப்பாவுக்குத்தான் தெரியும்."

முன்னைப் போல இப்போதெல்லாம் குனிந்து, நிமிர்ந்து காற்றடிக்க முடியவில்லை. தலை 'கிர்' என்கிறது. பிரஷர் என்று டாக்டர் சொன்னார்.

டயரை தட்டிப்பார்த்தேன். 'கிண்'ணென்றது. காற்று போதும்.

"அண்ணே, சைக்கிளை எடுத்துக்கவா?"

பீடியை வாயில் வைத்தபடி வந்தான் ராசு. மளிகைக்கடையில் எடுபிடியாய் இருப்பவன்.

"எங்கே? முதலாளி வீட்டுக்கா? அந்த ஆறாம் நம்பரை எடுத்துக்க."

ஞாபகமாய் சைக்கிள் நம்பரையும் நேரத்தையும் நோட்டில் குறிக்க வேண்டும்.

இந்தப் பயல் இருந்திருந்தால் இவ்வளவு சிரமம் இருக்காது. உதவிக்கு என்றுதானே இவனை வேலையில் சேர்த்தேன்? அடிக்கடி லீவு போடுகிறான்.

வரட்டும் பயல்! இந்த வேலையும் போய் கஞ்சிக்கு அலைஞ்சாத்தான் புத்தி வரும்.

"தம்பி, அறுபது பைசா கொடுப்பா."

"எட்டணாதான் இருக்கு. போனவாரம் கூட அம்பதுதானே கொடுத்தேன்?"

எரிச்சலாய் சிறுவனைப் பார்த்தேன்.

இந்தக் காலத்து பசங்களுக்கே வாய் ஜாஸ்தி.

"நேத்திலிருந்து அறுபது பைசா. அப்புறம் பத்து பைசா கொண்டு வந்து கொடு."

கொடுக்கமாட்டான்! இனி ஒரு மாதம் வேறு கடையில் போய் காற்றடிப்பான்.

தோள்பட்டை வலித்தது, காற்றடித்ததில். 'கம்ப்ரஸர்' வாங்கிப் போடலாம்தான். டூவீலர்களுக்கும் கூட காற்று பிடிக்கலாம். காசு வேண்டுமே!

ராசு, சைக்கிள் எடுத்துப் போனானே!

நோட்டை எடுத்தேன். எத்தனாவது நம்பர்? ஆறு? நேரத்தைக் குறித்தேன்.

முண்டா பனியன், வெயிலின் உக்கிரத்தில் நனைந்து போயிருந்தது.

ஆறு நாளாய் சைக்கிள்களைத் துடைக்கவில்லை.

சைக்கிள் கடை வைத்த புதிதில் தினசரி துடைத்து, எண்ணெய் விட்டு, பளபளக்கும் 'ரிம்'மை எட்டி நின்று ரசிப்பேன். எல்லாம் புது மோகம்.

"அண்ணன் கடை சைக்கிள் குதிரை மாதிரி பறக்கும்."

வாடகை சைக்கிள் ஒன்று கூட மிஞ்சாது. காலையிலேயே எடுத்துப் போக கூட்டம் வந்துவிடும். இப்போதும் மோசமில்லைதான்.

இந்தப் பயலை ரெண்டு நாளாய் சைக்கிளைத் துடைக்கச் சொன்னால், டிமிக்கி கொடுக்கிறான். தொழிலில் முனைப்பு இல்லை.

இன்று வேலைக்கே வரவில்லை இதுவரை. வரட்டும் படவா!

துணியை எடுத்தேன். கறுப்பாய் கிரீஸ் பட்டு அழுக்காய் இருந்தது.


மூன்றாம் நம்பரைத் துடைக்க ஆரம்பித்தேன். இந்த சைக்கிள்மேல் எப்போதும் எனக்குத் தனி பிரியம். இதில்தான் முதன்முதலாய் பிரேமாவை சினிமாவுக்குக் கூட்டிப் போனேன். எல்லாம் கல்யாணமான புது ஷோக்கு.

இப்போது சைக்கிளும் பழசாகி விட்டது. இரண்டு குழந்தைகளும் பிறந்து விட்டார்கள்.

ஆனாலும், இந்த சைக்கிளை மட்டும் சட்டென யாருக்கும் வாடகைக்குக் கொடுப்பதில்லை. என் தனிப்பட்ட உபயோகத்துக்கு மட்டும்தான் இது.

அந்த மூலைக்கடை மாரிசாமி சைக்கிளை பஞ்சர் பார்க்கணுமே. பத்துமணிக்கு வந்துடுவானே.

துடைத்த வரை போதும் போ!



மாரிசாமியின் பிலிப்ஸ் சைக்கிளின் முன்புற டயரைக் கழட்டினேன்.

டியூபில் காற்றடித்து தண்ணீரில் வைத்துப் பார்த்தேன்.

இதோ குமிழ், குமிழியாய் வருகிறதே. பேனாவால் புள்ளி வைத்தேன்.

எமரித் துண்டால் டியூபின் அந்த இடத்தை சொரசொரப் பாக்கினேன்.

"அண்ணே, வைச்சிடவா?"

ஒன்பதாம் நம்பரை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தினான் ஐயப்பன்.

கடிகாரத்தைப் பார்த்தேன். ஐயையோ ஓடவில்லையே.

இந்த பேட்டரி டைம்பீஸ் என்றாலே இதுதான் கஷ்டம். சாவி கொடுக்கும் டைம்பீஸ் நாம் சொன்னபடி கேட்கும்.

பேட்டரி வாங்கிப்போட வேண்டுமே இதற்கு உடனே? கைக்கடிகாரம் வேறு ரிப்பேராகிக் கிடக்கிறது.

என் கோபம் வேலைக்கு வராத அந்தப் பயல் மேல் திரும்பியது.

அவன் இப்போது இருந்திருந்தால் எத்தனை உதவியாயிருக்கும்?

அவனை பஞ்சர் பார்க்கச் சொல்லிவிட்டு மற்ற வேலைகளை நான் கவனிக்கலாம்.

இப்போது பேட்டரி செல் வாங்கக் கூட வெளியே போக முடியாதே.

"டைம் என்ன ஐயப்பா?"

"ஏண்ணே, கடிகாரம் ஓடலியா? இது ஃபாரின் வாட்ச். சிங்கப்பூரிலிருந்து எங்க மாமா அனுப்பிச்சது"- தன் மணிக்கட்டை காண்பித்தான்.

'உழைத்து சம்பாதிக்க வாங்கினமாதிரி பெருமையைப் பார், ஓசிப் பயலுக்கு'

மனசுக்குள் திட்டியபடி, வெளியே சிரித்தேன்.

வெள்ளையும் சொள்ளையுமாய் அலையும் தண்டச்சோற்றுப் பயல். கழுதை வயசாகியும் உருப்படியாய் எந்த வேலைக்கும் போகவில்லை இவன். தினசரி இங்கு வந்து வாடகை சைக்கிள் எடுப்பதால், அவன் என்ன சொன்னாலும் அசட்டுத்தனமாய் சிரிக்க வேண்டியிருக்கிறது.

"ஐயப்பா, கொஞ்சம் கடையைப் பார்த்துக்க. செல் வாங்கிட்டு வந்துடறேன்."

மாரிசாமியின் சைக்கிள் கண்ணில்பட்டது. டியூபில் பஞ்சர் ஒட்ட வேண்டுமே? முதலில் பேட்டரி செல். அப்புறம் பஞ்சர் வேலை!

அவசர நடையில் தெருமுனை மளிகைக் கடைக்குப் போய்த் திரும்பினேன்.

கடிகாரத்தை பின்புறம் திருப்பி, செல்லைப் போட்டேன். உயிர் வந்து விட்டது.

"அண்ணே, ஒரு ஆளு வந்து சைக்கிளை எடுத்துட்டுப் போயிருக்கான்."

"யாருடா?"

"குட்டையாய், கருப்பாயிருப்பானே!"

அவனை அறைந்து விடலாம் போலிருந்தது. ஊரில் பாதிப்பேர் குட்டையாய், கருப்பாய்த்தானிருக்கிறான்.

"உங்களைத் தெரியும்னான்."

'திக்'கென்றது. கலிகாலம்! திருட்டுப் பயல்கள் அதிகம் அலைகிறார்களே.

"எந்த சைக்கிளை எடுத்துட்டுப் போனான்?"

"பார்க்கலேண்ணே. அந்த மூலையிலே இருந்ததே. அதைத்தான்."

கிருஷ்ணா

சைக்கிள் திரும்பி வரும்வரை 'பக், பக்' தான். சைக்கிளே இப்போது யானை விலை விற்கிறதே.

''நான் வந்துடுவேன்னு சொல்லி யிருக்கலாம்ல?''

குரலில் எரிச்சல் தானாகவே வந்து விட்டது.

"தெரிஞ்சவர்னு சொன்னதுனாலேதான்... என் கணக்கு எவ்வளவு? ஒரு மணிநேரம், ஒரு ரூபாய் தானே!"

அவசரமாய் நகர்ந்து விட்டான். என் கோபத்தைக் காண்பிக்க இடமில்லாமல் தவித்தேன்.

எல்லாம் அந்த தடிப்பயல் வேலைக்கு வராததால்தான். வேறு புதுப் பையனைப் பிடிக்க வேண்டியதுதான் வேலைக்கு.

மாரிசாமி சைக்கிள் டியூபில் என் கோபத்தைக் காட்டினேன். சொல்யூஷன் தடவி, டியூபை ஒட்டி, டயரில் நுழைத்து, வேக, வேகமாய் காற்றடித்தேன். கொஞ்சம் கோபம் குறைந்தது.

முருகா, சைக்கிளைக் கொண்டு வந்து சேர்த்துடப்பா!

வேண்டிக் கொண்டேன். எனது பிரிய மூன்றாம் நம்பரைத்தான் எடுத்துப் போயிருக்கிறான் அவன். யார் அந்த ஆள்?

பானையிலிருந்து நீர் எடுத்துக் குடித்தேன். நாலு சைக்கிள் மட்டுமே கடையில் இருக்கிறது. துடைத்து விட்டால் என்ன அழுக்குப் போக?

'ரிம்'மைத் துடைக்கும் போது, அருகில் யாரோ வந்து நிற்பது தெரிந்தது.

அவனேதான்! தடிப்பயல்! அரை நாள் மட்டம்! பேசக்கூடாது அவனுடன்.

தலையைத் திருப்பாமல் காரியத்திலேயே கண்ணாய் இருந்தேன்.

அவனும் மௌனமாய் நின்றபடி இருந்தான்.

"நம் மூணாம் நம்பர் சைக்கிளை செல்வராச எடுத்துட்டுப் போயிருக்காரா? வழியிலே பார்த்தேன்."

அட, செல்வராசா எடுத்துப் போயிருக்கிறான்? என் சித்தப்பா பையன்! மனசுக்குள் தடக், தடக் மறைந்து போன நிம்மதி.

"நான் துடைக்கறேண்ணே."

"வேணாம், போ."

"அட, கொடுங்கண்ணே. சைக்கிள் திரும்புது பாருங்க. நோட்டுல எழுதி, காசை வாங்குங்க."

பரபரவென்று சைக்கிளைத் துடைக்க ஆரம்பித்தான் அவன்.

பீடி குடிக்கும் ஆசை வந்தது, கை வேலை குறைந்ததும். டாக்டர் பீடியைத் தொடவே கூடாது என்று சொல்லியிருக்கிறார். என்ன செய்வது?

நல்லதோ, கெட்டதோ. பழகியபிறகு சட்டென்று உதற முடியவில்லை. எதையும், யாரையும்!

புரட்சித் தலைவி

அதிகாரபூர்வமான அ.தி.மு.க. தேர்தல் அறிக்கை வெளி உலகுக்காக உருவானது. ஆனால் உடன் பிறவா சகோதரியின் பார்வைக்கு மட்டுமே புரட்சித் தலைவி அந்தரங்கமாகத் தயாரித்த தேர்தல் அறிக்கை ஒன்று இருப்பதாக மோப்பம் பிடித்த எறும்பார், இரவோடு இரவாகத் தமது தோழர்களுடன் போயஸ் தோட்டத்துக்குள் நுழைந்து அதைக் கிளப்பிக் கொண்டு வந்து விட்டார்!

ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புகளுக்கு,

ஆதிபராசக்தி, அகிலாண்டநாயகி, அங்காளபரமேசுவரி, கருமாரி ஆத்தா, விசுவரூப கட்அவுட் கருப்பாயி, மேரி வடிவமான அன்னை, புரட்சித் தலைவி, டாக்டர் ஜெயலலிதா, மனமுவந்து ஆசிகள் வழங்கி, அருளிய தேர்தல் அறிக்கை :


என் காலில் விழுந்து சேவிக்க முடியவில்லையே என்று ஏங்கும் அடிமை பக்தர்கள் அஞ்ச வேண்டாம். அ.தி.மு.கவுக்கு போடப்படுகிற ஒவ்வொரு வோட்டையும் எனது பாதங்களில் அர்ச்சிக்கப்பட்ட புது மலராகவே ஏற்கத் தயாராக இருக்கிறேன். வோட்டுச் சாவடிக்குப் புறப்படும் முன்னர் உங்கள் வீட்டுப் பூஜை அறையில் உள்ள என் படத்துக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து விட்டுக் கிளம்பினால் போதுமானது.

ஒரு கட்சிக்கு எதற்காக வோட்டுப் போட வேண்டும் என்று எடுத்துக் கூறுகிற ஒரு மூடப் பழக்கம்தான் தேர்தல் அறிக்கை என்பது. இது ஒழித்துக் கட்டப்பட வேண்டியது. 'என் கட்சிக்கு அல்லது, நான் அமைத்துள்ள கூட்டணிக்கு வோட்டுப் போடு' என்றால் என் பக்தர்களாகிய நீங்கள் அந்தக் கட்டளையை நிறைவேற்ற வேண்டியதுதானே? அதை விடுத்து

...யின் தேர்தல் அறிக்கை!

தேர்தல் அறிக்கை என்பதாக ஒன்று எதற்கு? அந்தவிதத்தில் பங்களாதேஷ் கலீதா ஜியா தேர்தலும் ஈராக் அதிபர் சதாம் உசேன் தேர்தலும் எனக்குப் பிடித்தமானவை. அந்நாடுகளைப் பின்பற்றி ஒரு உன்னதமான தேர்தல் சீர்திருத்தத்தை இங்கேயும் கொண்டு வர மத்திய அரசை நிர்பந்திப்பேன் என்பதற்காகவே நீங்கள் வருகிற தேர்தலில் எனக்கு வோட்டுப் போட வேண்டும்.

அத்தகைய சீர்திருத்தம் வருகிற வரை இங்கே தேர்தல் அறிக்கை அவசியமாகிறது என்பதால் என்னை ஏன் நீங்கள் மீண்டும் பதவியில் அமர்த்த வேண்டும் என்பதற்கான சில காரணங்களைப் பட்டியலிடுகிறேன்.



1. என் உடன் பிறவா சகோதரி குடும்பத்ினரும் நானும் சேர்ந்து எவ்வளவோ முயற்சி பண்ணியும் கால்வாசி தமிழகத்தைத்தான் விலைக்கு வாங்க முடிந்திருக்கிறது. இன்னும் முக்கால்வாசி தமிழகம் எங்களைப் பார்த்து ''வாங்கு, வாங்கு'' என்று கதறிக் கொண்டிருக்கிறது. தமிழகத்தின் அந்தப் பேராவலைப் பூர்த்தி செய்ய என் ஆட்சியைத் தவிர வேறு எந்தக் கட்சியின் ஆட்சியாலும் முடியாது என்ற காரணத்தால் நீங்கள் அ.தி.மு.க.வுக்கே வோட்டுப் போட வேண்டும்.

2. என்னுடைய ஆட்சியிலேதான் கோயில் கும்பாபிஷேகங்கள் நிறைய நடந்திருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும். மடாதிபதிகளுக்கும் தெரியும். கோயில்களின் புனரமைப்புக்காகவே நிதி திரட்டியவள் நான். அதே சமயம் தமிழகத்தில் உள்ள பல்லாயிரக்கணக்கான கோயில்களில் சில நூறு கோயில்களில் மட்டும் தானே நகைகளும் சிலைகளும் கொள்ளை போயிருக்கின்றன என்பதைக் காண என் மனம் வருந்துகிறது. நான் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டால் தமிழகத்தில் ஒரு கோயில் பாக்கியின்றி எல்லாக் கோயில்களும் கொள்ளையடிக்கப்பட்ட பெருமையை இந்து மதத்துக்கும் இந்து தர்மத்தை ரட்சிப்பதாகக் கூறிக் கொள்ளும் மடாதிபதிகளுக்கும் வழங்குவேன். எனவே எல்லா மடாதிபதிகளும் என்னையே தேர்ந்தெடுக்குமாறு மக்களைக் கேட்டுக் கொள்ளலாம். அதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்குகிறேன்.

3. 'ஜெ. ஆட்சியில் தொழில்வளம் பெருகியதா?' என்று எத்தர்களான எதிர்க்கட்சியினர் கேட்பார்கள். ஏமாந்து விடாதீர்கள்! அமெரிக்காவில் உள்ள ஃபோர்டு மோட்டார் கம்பெனிக்கு, நானே எடுத்துக் கொண்டிருக்கக் கூடிய ஏராளமான ஏக்கர் அரசு நிலத்தை, போனால் போகட்டும் என்று தாரை வார்த்துக் கொடுத்திருக்கிறேனே, எதற்காக? நான் ஒருத்தி மட்டும் ஆயிரம் கார் பவனி போனால் போதுமா? தமிழ் நாட்டின் பட்டி தொட்டிகளிலெல்லாம் உள்ள குப்பன்களும் குப்பாயிகளும் இனி சொந்தக் கார் வைத்துக் கொண்டு தமிழகத்தைச் சுற்றி வரப் போகிறார்கள்! அப்படி சொந்தத்தில் கார் வாங்க முடியாதவர்கள் எல்லோரும் ஃபோர்டு மாடல் பொம்மைக் கார் ஒன்று கடையில் வாங்கிக் கொண்டு போய் வீட்டில் உருட்டிக் கொண்டிருக்கலாம். எப்படியோ, இல்லத்துக்கு ஒரு ஃபோர்டு மோட்டார் கார் நிச்சயம். எனவே அ.தி.மு.க.வுக்கே உங்கள் வோட்டு.

4. தொழில்வளப் பெருக்கத்துக்கான அடிப்படை வசதிகளை ஏராளமாகப் பெருக்கியிருக்கிறேன். ரொம்பவும் கஷ்டப்பட்டு என் அமைச்சர், "இங்கே பவர்கட் இல்லை; இல்லவே இல்லை" என்று திரும்பத் திரும்ப அடித்துச் சொன்னதற்கு என்னுடைய ஊக்குவிப்பே காரணம். மின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக தரக்குறைவான நிலக்கரியையும் பினாமிக்கு அதிகபட்ச கமிஷனையும் தரக்கூடிய அயல்நாட்டு நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்க மின்வாரியம் பட்டபாடு எனக்குத்தான் தெரியும். சென்னை துறைமுகத்துக்கு வந்து சேர்ந்த தரக்குறைவான நிலக்கரியை நமது அனல்மின் நிலையங்கள் பயன்படுத்தினால் கோடிக் கணக்கான மதிப்புடைய பாய்லர்கள் பாழாகி விடும்.



எனவே இரட்டிப்பு பாதுகாப்பு உணர்வோடு அந்த நிலக்கரியை பகிரங்கமாக ஒருவருக்கும் கள்ளத்தனமாக இன்னொருவருக்கும் விற்று விட அனுமதித்திருக்கிறேன். இவ்வளவு முன் ஜாக்கிரதையாக, தீர்க்கதரிசனத்துடன் வேறு யாரால் நடந்து கொள்ள முடியும்? எனவே நான் அமைத்துள்ள கூட்டணி வேட்பாளர்களுக்கே வோட்டுப் போடுங்கள்!

5. வெல்லப் பிள்ளையாரைக் கிள்ளி வைத்து நைவேத்தியம் செய்வது போல் உங்கள் வரிப் பணத்தைக் கொண்டு உங்களுக்கே இலவசங்களைத் தந்து, நானே தருவது போன்ற ஒரு மாயையை உருவாக்கினேனே, இந்த சாமர்த்தியம் வேறு யாருக்கு உண்டு? இலவச சத்துணவு, சீருடை, வேஷ்டி-புடைவை போன்ற சகலத்திலும் அமைச்சர்கள் கணிசமாக சம்பாதித்த போதிலும் எனக்குத் தப்பாமல் கப்பம் செலுத்தச் செய்து கணக்குப் பார்த்து அவர்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறேன். இந்த இலவசங்களுக்காக இலவசமாகவே உங்கள் வோட்டைக் கேட்பேனோ என்று அஞ்ச வேண்டாம். வோட்டுக்கு இவ்வளவு என்று கணக்கிட்டு நோட்டுக்கள் விநியோகிக்க ஏற்பாடு செய்திருக்கின்றேன். பெற்றுக் கொண்டே எனக்கு வோட்டுப் போடலாம்.

6. தமிழகம் ஒரு அமைதிப் பூங்காதான் என்றாலும் கூட தமிழனுடைய பாரம்பரை வீர தீர பராக்கிரமங்கள் பழுதாகி, துரு ஏற அனுமதிக்கக் கூடாது என்ற பெருநோக்குடன் இங்கே ஜாதிச் சண்டைகள் அடிக்கடி நடைபெற அனுமதித்து, ஊக்குவித்தும் வந்துள்ளேன் இவ்வாறு வீரத்தை வளர்க்கும் விவேகம் எனக்கு மட்டுமே உண்டு என்பதால் அ.தி மு.க.வுக்கே உங்கள் வோட்டு.

7. நான் மீண்டும் பதவிக்கு வந்தால் லஞ்ச ஊழலை தேசியமாக்க மத்திய அரசுடன் சேர்ந்து பாடுபடுவேன். 'தேசிய ஹவாலா ஊக்குவிப்பு சட்டம்' ஒன்றை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற மத்திய அரசுக்கு முழு ஒத்துழைப்பு தருவேன்.

8. கல்லூரிகளின் பொருளாதாரத் துறையில் கறுப்புப் பணப் பிரிவு என்பதாக ஏற்படுத்தி, அதில் எம்.பி.ஏ. பட்டப் படிப்புக்குப் பாடத் திட்டம் வகுப்பேன். எல்லா கல்விக் கூடங்களிலும் ஆட்டோ ரதம் ஏறி, உருட்டுக் கட்டை சுழற்றி, எலும்புகளை முறிக்க சிறப்புப் பயிற்சி தரப்படும்.

இந்தக் காரணங்களுக்காகவும் இது போன்ற இதர பல அரிய பெரிய புரட்சிகரமான காரணங்களுக்காகவும் நீங்கள், எனக்கும் என்னைச் சார்ந்திருக்கும் கட்சிக்கும் கூட்டணிக்குமே உங்கள் வோட்டுக்களைப் போட வேண்டும். அப்படிப் போடாவிட்டால் உங்களுக்குத்தான் நஷ்டம். ஏனெனில் உங்கள் வோட்டுக்களை உங்கள் சார்பில் எங்களுக்கு நாங்களே போட்டுக் கொள்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எம்.ஜி.ஆர். நாமம் வாழ்க!

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

Registered as newspaper in Srilanka